
www.tamilarangam.net

இதழ்- 93 மார்ச் 21 - ஏப்ரல் 03 - 1996 விலை - 7.00

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே-பாரதி

## மகசின் சிறை: நடந்த கதை



52*

சற்றே விலகி
நந்தி வழி விட்டாற் போல்
வெலிக்கடையின் சிறைக்கூட
இரும்பு நெடுங்கதவம்
தானே திறக்கும்

அங்கே
காவலர்கள் அறியாமல்
கற்சுவர்கள் சூழ்ந்திருக்கும்
அறைகட்குள் கொலை நடக்கும்


பகுத்தறிவு ஆளுகின்ற
புதிய யுகமதனில்
அற்புதங்கள்
ஒருகால் நிகழுமெனில்
ஒப்பார்கள் என்பதனால்
இருகால் நடந்தேறும்.

கண்டு விறைத்த
கற்சுவரோ மௌனிக்கும்

• சிவசேகரம்

* 25.7.83, 28.7.93 ஆகிய திகதிகளில்
வெலிக்கடைச் சிறையில்
கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை.

# வெள்ளவத்தை தமிழ் அகதிகள்:



படம்: எம்.கே.எம்.ஷகீப்.

# பயங்கரவாதப் பூச்சாண்டி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விலை மனுக் கோராத கடற்படை ஒப்பந்தங்கள்!

பல வருடங்களாகக் கொழும்பில் தங்கியிருந்து ''பஸ்ற் பிறைவேற் லிமிட்டெட்'' என்ற பெயரில் நிறுவனமொன்றை நடத்தி வரும் பிரான்ஸ் நாட்டுத் தம்பதியரான அன்ரோனியோ, சன்ரா மொலிக்கன் ஆகியோருக்கு கடற் படைக்குத் தேவையான யுத்த உபகரணங்களைத் தருவிப்பதற்காக நான்காவது தடவையும் கேள்வி விலை மனுக்கோராது (Tender) ஒப்பந்தமொன்று (Contract) வழங்கப்பட்டுள்ளதாகக் கடற் படைத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடற்படைக்கு நான்கு யுத்தப் படகுகளை வழங்கும் முதலாவது ஒப்பந்தம் ஒன்றினை 1992ஆம் ஆண்டு பிரான்சின் ''சிமனோமரீன்'' நிறுவனம் சார்பாக இத் தம்பதியர் பெற்றுக் கொண்டனர். அவ் ஒப்பந்தப்படி குறித்த சில மாதங்களினுள் அப் படகுகளை வழங்க வேண்டியிருந்தாலும், பிரெஞ்சுத் தம்பதியினர் அதற்காக இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை எடுத்தனர்.

இவ்வாறிருந்த போதும் நான்கு அதி வேகத் தாக்குதற் படகுகள் வாங்கும் ஒப்பந்தம் ஒன்றும், இரண்டாவது தடவையாக இம் மொலிகன் நிறுவனத்துக்கே வழங்கப்பட்டுள்ளது.

மூன்றாம் ஈழப்போர் ஆரம்பமானதன் பின்பு இஸ்ரேலிலிருந்து இரண்டு அதிவேகத் தாக்குதல் படகுகளைத் தருவிக்கும் மூன்றாவது ஒப்பந்தமும் மொலிகனுக்கே வழங்கப்பட்டுள்ளது.

தாம் பதவிக்கு வந்ததன் பின்பு ஆயுத உபகரணங்களை விலை கொடுத்து வாங்குகையில் இடைத்தரகர்களை இல்லாதொழிப்போம் என்று கூறிய பொது சன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் வாக்குறுதி காற்றில் விடப்பட்டுத் தற்போது மொலிகன் குடும்பத்தினருக்கு இன்னொரு ஒப்பந்தமும் வழங்கப்பட்டுள்ளது. அதாவது அமெரிக்காவின் ''ட்றினிரிமரீன்'' எனப்படும் நிறுவனத்தினரிடமிருந்து யுத்தக் கப்பல்கள் பலவற்றை வாங்கும் ஒப்பந்தமே அதுவாகும். இது அந்நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட நான்காவது ஒப்பந்தமாகும்.

இவையாவும் உரிய முறையில் விலை மனு கோரப்படாது நடைபெற்றுள்ளவையெனவும் கடற்படைத் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அது மட்டுமன்றி சண்ட்ரா மொலிகனுக்கும் கடற்படைத் தளபதிக்குமிடையே உள்ள மிக நெருக்கமான உறவொன்றே இக் கடற்படை ஒப்பந்தத்தை மொலிகன் தம்பதியினர்க்கு வழங்கக் காரணம் எனவும் மேற்கூறிய தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மொலிகன் தம்பதியினர் ஈடுபட்டுள்ள இன்னொரு வியாபாரமான கட்டிட உள்ளக அலங்காரங்களின் கீழ் அலரி மாளிகையின் உள்ளக அலங்கார ஒப்பந்தத்தையும் பெற்றுக் கொண்டுள்ள மொலிகன் தம்பதிகள் தற்போது திருக்கோணமலை கடற்படை முகாம் அதிகாரிகளின் இல்லங்களையும் அலங்கரிக்கும் ரூபா 72இலட்ச ஒப்பந்தத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

இம் மொலிகன் தம்பதிகள் தங்கியிருப்பதும், நிறுவனம் அமைந்துள்ளதும் ஜனாதிபதியின் றொஸ்மிட் இல்லத்திலேயாகும்.

(யுக்திய - 19960310)

# தீர்வு யோசனை புலிகளுக்கு அனுப்பப்படும்!

அரசின் அரசியல் தீர்வுத்திட்டத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு அனுப்ப வேண்டுமென்ற யோசனையொன்று அரசின் அரசியல் தீர்வு யோசனைக் கலந்துரையாடலுக்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளின் உறுப்பினர்களினால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினூடாக அரசியல் தீர்வுத் திட்டத்தைத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைமையின் கைகளில் கிடைக்கச் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

அரசின் அரசியல் தீர்வுத்திட்டம் பற்றிய கலந்துரையாடலில் தமது இயக்கத்தைக் கருத்திலெடுக்காது விட்டுள்ளதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் குற்றஞ்சாட்டச் சந்தர்ப்பம் ஏற்படாதவாறு செய்வதற்காகவே இந் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்பது அனைத்துக் கட்சிகளதும் கருத்தாகும்.

இதே சமயம் நோர்வே அரசின் அனுசரணையுடன் ''இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்துவது எவ்வாறு?'' என்ற தலைப்பின் கீழ் நோர்வே நாட்டில் நடந்த மாநாட்டில் கலந்து கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச ஆலோசகர் வீ. ருத்திரகுமாரன் ஈழத்துக்கு மாற்று யோசனைகளைப் பரிசீலிக்கத் தமது இயக்கம் தயாரெனத் தெரிவித்திருந்தார். தமிழ் மக்களுக்கு மத்திய அரசினுள் பிரதிநிதித்துவம் வழங்கக் கூடிய செனற் சபையொன்று தொடர்பான கருத்தொன்றை இம் மாநாட்டில் அவர் தெரிவித்துள்ளார்.

(யுக்திய - 19960317)

# மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்துடன் புலிகள் பேச்சுவார்த்தைக்குத் தயார்!

மூன்றாம் தரப்பினரான வெளிநாட்டுத் தலையீட்டாளரொருவரின் கண்காணிப்பின் கீழ் தாம் மீண்டும் அரசுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடத்த விரும்புவதாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் கூறுகிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க மீது தமது இயக்கத்துக்குத் தற்போது எதுவித நம்பிக்கையும் இல்லாததால் மூன்றாவது தரப்பினரொருவரின் தலையீடு அவசியம் எனத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் அரசியல் தலைவர் ஏ. துரையுடன் லக்பிம நடத்திய விஷேட கலந்துரையாடலொன்றில் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க மீது பெரு நம்பிக்கை வைத்தே தாம் அரசியல் பேச்சுவார்த்தைகளுக்கு வந்ததாகவும் ஆனால் அரசாங்கமும், ஜனாதிபதியும் தமது கோரிக்கைகளை நிறைவேற்றாது காலங் கடத்தியதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன் காரணமாகவே தங்களுக்கு யுத்தம் புரிய னேண்டியேற்பட்டது என்றும் அவர் கூறினார்.

''நாம் யுத்தத்தைத் தொடர்ந்தும் நடத்துவது விருப்பத்துடன் அல்ல. ஆனால் எமது அப்பாவி மக்களின் பெரும்பான்மையானவர்கள் அடக்கு முறைக்குள்ளாகியுள்ளனர். அவர்களுக்காக எமக்குத் தற்போது சமாதானம் தேவை'' எனவும் துரை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் அபார வெற்றிக்குத் தமது உத்தியோகபூர்வமற்ற ஒத்துழைப்பும், தமிழ் மக்களினது அர்ப்பணிப்பும் வழங்கப்பட்டதாகக் கூறிய அவர் தற்போது முழு நாட்டு மக்களும் நம்பிக்கையை இழந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

எமக்குச் சமாதானம் தேவையானது. அதற்காகப் பேச்சுவார்த்தைகள் நடத்த நாம் தயார். ஆனால் தற்போதானால் விஷேட தலையீட்டாளரொருவர் தேவை எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் முன் வைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் கருத்து என்னவெனப் பிரதிநிதிகள் கேட்டபோது அவ்வாறான தீர்வுத் திட்டம் பற்றித் தமக்கு எதுவும் தெரியாதென மட்டுமே அவர் தெரிவித்தார்.

வட - கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதானால் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் ஒத்துழைப்பு அத்தியாவசியமானதென்பதை அரசு புரிந்து கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

(லக்பிம -19960310)

# நாரஹேன்பிட்டி ஆயுதக் கண்டுபிடிப்பு! அம்பலமாகும் இரகசியங்கள்!

உதவித் தொழில் ஆணையாளரான தர்மலிங்கம் தங்கியிருந்த நாரஹேன்பிட்டி தர்மதூத விஹாரை வளவினுள் புதைக்கப்பட்டிருக்கையில் கண்டுபிடிக்கப்பட்ட குண்டுகள், ஆயுதங்கள் என்பன, அச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்குப் பொலன்னறுவையிலிருந்து வந்த பொலிஸ் அதிகாரிகளினாலேயே அங்கு புதைக்கப்பட்டவையெனத் தற்போது தெரிய வந்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தினரால் புதைக்கப்பட்ட அவ் ஆயுதங்கள் தம்மால் கண்டு பிடிக்கப்பட்டதாகத் தெரிவித்து பதவி உயர்வுகளும், பட்டங்களும் பெறவே இந் நாடகம் நடாத்தப்பட்டதாக இது தொடர்பாக நடைபெற்றுள்ள விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

ஆனால் இவ்வாறு பொய்யான குண்டுகள் புதைத்து வைத்த சம்பவத்துடன் தொடர்பான பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்காது, சம்பவத்தை மூடி மறைக்கும் வேலைத்திட்டமொன்று நடைபெற்று வருவதாகப் பொலிஸ் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒரு பொலிஸ் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்திலிருந்து சென்று இன்னொரு பொலிஸ் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தில் விசாரணையொன்றை நடத்துவதானால் விசாரணைக்கு வரும் பொலிஸ், உரிய பிரதேசப் பொலிசுக்கு அறிவிக்க வேண்டுமென்பது பொலிஸ் சட்டமாகும்.

ஆனாலும் பொலன்னறுவையிலிருந்து வந்த பொலிஸ் அதிகாரிகள் நாரஹேன்பிட்டிப் பொலிசுக்கு அவ்வாறான முன்னறிவிப்பு எதுவும் கொடுக்காது விசாரணைக்கு வந்துள்ளது இது தொடர்பான ஆரம்பச் சந்தேகம் எழக்காரணமாகியுள்ளது.

ஆயுதங்கள் தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸ் அதிகாரிகள் இருவர் கொடுத்த வாக்கு மூலங்கள் ஒன்றுக்கொன்று முரண்பட்டமை, சந்தேகம் எழ இன்னொரு காரணமாகும். தர்மலிங்கத்தை விசாரித்தமையும், விஹாரை வளவினுள் இருந்த ஆயுத உபகரணங்கள் கண்டு பிடிக்கப் பட்டமையும் ஒரே தினத்தில் நடைபெறாததன் காரணமாக இவ் ஆயுதங்களும், குண்டுகளும் தொடர்பான சந்தேகம் உறுதியாகியுள்ளது.

எடுக்கப்பட்ட ஆயுதங்களுக்கும் தனக்கும் எதுவித தொடர்புமில்லையென தர்மலிங்கம் கடுமையாக நிராகரித்திருப்பதும் இவ் ஆயுதங்கள் தொடர்பான பிரச்சினை எழ இன்னொரு காரணமாகும்.

விஹாரை வளவினுள் இருந்து வெளியே எடுக்கப்பட்ட பொம்மைகளும், அதனுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களும் மண் கூடப்படாது புதிதாக இருந்தமை இது தொடர்பான சந்தேகத்தை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

இச் சம்பவம் பற்றி நாரஹேன்பிட்டி தர்மதூத விஹாரையின் விஹாராதிபதி குடலிகம அமரவங்ஸ தேரர் கூறியதாவது, அன்றைய தினம் வந்த பொலிஸ் அதிகாரிகள் விஹாரை வளவைத் தோண்டுவதற்காக மண்வெட்டியொன்றைக் கேட்ட அதே சமயம் சாந்த சோபன தேரர் விஹாரை மண்வெட்டியை எடுத்து வருகையில் அவ் அதிகாரிகள் ஆயுதங்களையும் குண்டுகளையும் வெளியே எடுத்திருந்தனர்.

இவ்வாறு கணப்பொழுதில் ஆயுத உபகரணங்கள் வெளியே எடுக்கப்பட்ட விதம் மாபெரும் ஆச்சரியமானது என்பது அமரவங்ச தேரரின் கருத்தாகும்.

குண்டுகளும், ஆயுத உபகரணங்களும் விஹாரை வளவினுள் புதைக்கப்பட்டிருப்பதாகப் பொதுசனத் தொடர்பு சாதனங்களினூடாக பாரிய பிரசாரமொன்று கட்டவிழ்த்து விடப்பட்ட காரணத்தால் தனக்கும், தனது விஹாரையின் ஏனைய தேரர்களுக்கும் பாரிய இழிவுபடுத்தல்களும், அசௌகரியங்களும் ஏற்பட்டதாகும். அது தொடர்பாகப் பொலிஸ் விசாரணையொன்றை உடனடியாக நடத்துமாறு குடலிகம அமரவங்ச தேரர் கடிதமொன்றின் மூலம் கோரியுள்ளார் எனவும் தெரியவருகிறது.

(யுக்திய - 19960317)

# அரசியல் கட்சியாகப் பதியத் தடை !

தேர்தல் கருமங்களுக்காக புரட்சிக் கொம்யூனிஸ்ற் கழகத்தை ஒரு அரசியல் கட்சியாகப் பதிவு செய்யும்படி கோரி அதன் செயலாளர் விஜே டயசினால் கடந்த ஒக்ரோபர் மாதம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணையாளர், 1995 டிசம்பர் 29ஆம் திகதி அறிவித்துள்ளார். புரட்சிக் கொம்யூனிஸ்ற் கழகம் இந்த விதத்தில் பதிவு செய்ய மறுக்கப்படுவது இது ஏழாவது தடவையாகும்.

அது தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்தை ஆகிய தமிழ், சிங்கள பத்திரிகைகளை வெளியிட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் புரட்சிக் கொம்யூனிஸ்ற் கழகத்தின் ஜனநாயக உரிமைகள் மீது தொடுத்துள்ள இத் தாக்குதலுக்கு எதிராக நாடு பூராவும் அரசியல் பிரச்சார இயக்கத்தை முன்னெடுக்கப் புரட்சிக் கொம்யூனிஸ்ற் கழகம் தீர்மானம் செய்துள்ளது. அதன் ஒரு பகுதியாக மார்ச் 14ஆந் திகதி கொழும்பு சிற்றம்பலம் ஏ.காடினர் வழியில் உள்ள அரசாங்க இலிகிதர் சேவை சங்க மண்டபத்தில் மாலை 5.00மணிக்குக் கூட்டமொன்றை நடத்தியதுடன், தேர்தல் ஆணையாளருக்குச் சமர்ப்பிக்கத் தயார் செய்யப்பட்டுப் மகஜரில் பொது மக்கள் கையொப்பமும் பெறப்பட்டது.

(செய்தி-13.03.1996)

## விசாரணைக் குழு கொழும்பில் நீங்கள் குமாரபுரத்தில்!

கிளிவெட்டி - குமாரபுரம் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய ஜனாதிபதி, விஷேட விசாரணைக் குழுவொன்றை நியமித்ததன் பின்பு அச் சம்பவத்துடன் தொடர்புபட்டதெனச் சந்தேகிக்கப்படும் ஐம்பதுக்கும் மேற்பட்டவர்களின் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளதெனவும், இதுவரை இரு அதிகாரிகள் உட்பட 16பேர் இடை நிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

இப்படி இருக்கையில் கடந்த வாரம் குமாரபுரம் கிராமத்துக்குச் சென்றுள்ள இராணுவத்தினர் விசாரணைக் குழு இருப்பது கொழும்பிலேயே எனவும், நீங்கள் இருக்க வேண்டியது இங்கேயே எனவும் கூறி, எவரும் எதிர்காலத்தில் எதனையும் கூறக் கூடாது எனவும் அச்சுறுத்தியுள்ளதாக அப் பிரதேசத்திலிருந்து அறியக் கிடைக்கிறது.

(யுக்திய - 19960317)

# மலையக மக்கள் முன்னணி பிராந்திய சபை கோருகிறது!

நாட்டில் உக்கிரமடைந்துள்ள தேசியப் பிரச்சினைக்கு நிலையானதும், நீடித்தது மான தீர்வொன்றைக் காண்பதாக இருந்தால் மலையகத் தமிழ் மக்களுக்காகவும் பிராந்திய சபையொன்றை அமைக்க வேண்டுமென வீடமைப்புப் பிரதி அமைச்சரும், மலையக மக்கள் முன்னணித் தலைவருமான பெ. சந்திரசேகரனின் தலைமையிலான மலையக மக்கள் முன்னணி அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம் பிரேரித்துள்ளது.

இத் தேசியப் பிரச்சினைக்கு நிலையான தீர்வொன்றைக் காணக் கூடியது பெரும்பான்மை மக்களுக்கு சிறுபான்மை மக்களுக்குமிடையேயான உண்மையான அதிகாரப் பகிர்வொன்றினூடாகவே எனவும் அம் முன்னணி தெரிவித்துள்ளது.

மலையகத் தமிழ் மக்களுக்காகப் பிராந்திய சபையொன்றை அமைத்தால் அது இந்தியாவில் தற்போது நிலவும் பாண்டிச்சேரி முறையை ஒத்த ஆட்சி முறையொன்றைப் போல் இருக்க வேண்டுமெனப் பிரேரிக்கும் மலையக மக்கள் முன்னணி, அது மலைநாட்டு மாவட்டங்கள் ஐந்தில் பாரியளவாக வாழ்ந்து வரும் தமிழ் மக்களை ஒன்று சேர்க்கும் முறையாக இருக்க வேண்டுமெனவும் கூறியுள்ளது.

இப்பிராந்திய சபையின் நிர்வாக மொழியாக அம் மாகாணத்தில் வாழும் பெரும்பான்மை மக்களின் மொழி இருக்கவேண்டுமெனவும் மலையக மக்கள் முன்னணி தெரிவிக்கிறது.

சிறுபான்மை இனங்கள் சார்பாகச் செயற்படுவதற்காக இந்தியாவைப் போல் தேசிய ஆணைக்குழுவொன்று அமைக்கப்பட வேண்டுமெனவும் அம் முன்னணி மேலும் யோசனை தெரிவித்துள்ளது.

இதே சமயம் பிராந்திய சபைக்கு உரிய பிரதேசத்தைக் காட்டும் வரைபடமொன்று மலையக மக்கள் முன்னணியின் அரசியல் பிரிவினரால் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், அதனை எதிர்வரும் சில நாட்களினுள் அரசிடம் கையளிக்க நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அறியக் கிடைக்கிறது.

அதன்படி இப்பிராந்திய சபை அதிகாரப் பிரதேசத்தில் நுவரெலியா பிரதேசச் செயலாளர் பிரிவு முழுவதும், பதுளை, கேகாலை, கண்டி ஆகிய மாவட்டங்களில் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களும் இணைக்கப்படுமெனவும் மலையக மக்கள் முன்னணிப் பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

(லங்காதீப - 19960317)


சரிநிகர் இதழ் 92 இல் 7ம் பக்கத்தில் வெளியான கலாநிதி சிறிதரனின் கட்டுரை யுக்தியவிலிருந்து எடுக்கப்பட்டது.
தமிழாக்கியவர் ரட்னா.

தொகுப்பு : சி. வீவேக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# [illegible] அகதிகள்: சோகங்களிலும் துயர[illegible]னது!

''இந்த முப்பது குடும்பங்களுக்கும் வழி சொலல வக்கற்ற அரசாங்கமா இத்தனை தமிழ் மக்களுக்கும் வழி சொல்லப் போகிறது''

இது ஓட ஓட துரத்தப்பட்டுக்கொண்டிருக்கிற அகதியொருவரின் வாயிலிருந்து வெளிக்கிளம்பிய வேதனை நிறைந்த வெளிப்பாடு.

கடந்த மார்ச் சாதம் 5ம் திகதியன்று வெள்ளவத்தை கடற்கரையோர அகதிகளின் குடில்களை உடைத்து அட்டகாசம் பண்ணிய அதிகாரிகளை நோக்கிய வெளிப்பாடே அது.

## அகதிகளின் கதை

இவ்வகதிகள் 1983ம் ண்டு யூலை கலவரத்தின் போது சொத்துக்கள் அழிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்ட கொழும்பைச் சேர்ந்த இந்திய வம்சாவழித் தமிழர்கள். 83யூலையின் பின் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்திலும் பின்னர் இரத்மலானை விமான நிலைய அகதி முகாமிலும் இரண்டரை வருடங்கள் அகதிகளாகவே வாழ்ந்து பின்னர் அன்றைய யு.என்.பி. அரசாங்கத்தால் பலாத்காரமாக மட்டக்களப்பு அகதிமுகாம்களுக்கு அனுப்பட்டனர். 1990வரை இவர்கள் மட்டக்களப்பில் அகதிகளாகவே வாழ்ந்து இரண்டாம் ஈழயுத்தம் தொடங்கிய போது கிழக்கிலிருந்து கொழும்புக்கு இடம் பெயர்ந்த அகதிகளோடு இவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

மீண்டும் இவர்கள் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டப அகதிமுகாமில் அடைக்கப்பட்டார்கள். இதே காலத்தில் கொழும்பில் மட்டக்குளி, முகத்துவாரம், மாளிகாவத்தை, பம்பலப்பிட்டி, கதிரேசன் கோயில் போன்ற இடங்களிலும் அகதிமுகாம்கள் அமைக்கப்பட்டன. 1994ம் ஆண்டு மேமாதம் 27ம்திகதி கொழும்பில் அகதிமுகாம்களில் இருந்த அகதிகள் மீண்டும் மட்டக்களப்பு அகதி முகாம்களுக்கு பலாத்காரமாக அனுப்பப்பட்டனர். ''கொழும்பைப் பிறப்பிமாகக் கொண்ட நாங்கள் மீண்டும் மட்டக்களப்பு அகதி முகாமுக்கு போக முடியாது., எங்களை கொழும்லேயே ஒரு புறநகர்பகுதியில் குடியமர்த்துங்கள்'' என குரலெழுப்பினர்.

''நாங்கள் சொல்வதைக் கேட்டால் அகதிமுகாம்களிலாவது இருக்கலாம். இல்லாவிட்டால் நீங்கள் வீதியில் தான் இருக்கவேண்டியேற்படும்'' என அதிகாரிகள் அச்சுறுத்திய போது இவ்வகதிகள் தங்களை மேலும் சீரழிய விடாது நிரந்தர தீர்வொன்றை தரும்படி கோரினர். இறுதியில் இவ் இருபது குடும்பங்களைத் தவிர ஏனைய அகதிகள் அனைவரையும் பலாத்காரமாகவே கொண்டு சென்றனர். சரஸ்வதி மண்டப அகதிமுகாம் இழுத்து மூடப்பட்டபோது இவ்வகதிகள் மண்டபத்துக்கு வீதியோர அகதிகளாகவே ஐந்து மாதங்களைக் கழித்து வந்தனர்.

1994 ஒகஸ்ட் தேர்தல் முடிந்தது. பச்சைபோய் நீலம் வந்தது. கூடவே சாக்கடையை அப்புறப்படுத்துவதைப் போல் இவர்களையும் அகற்ற ஆணையும் வந்தது. வெள்ளவத்தை பொலிசைச் சேர்ந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் நந்தன விஜேரட்ன இவர்களை விரட்டினார். 'எங்கே போவது?' மீண்டும் தமிழ் அரசியல் தலைவர்கள், அமைச்சு, திணைக்களம் என்று ஓடியாடித்திரிந்தார்கள். இறுதியில் பம்பலப்பிட்டி மிலாகிரி தேவாலயத்தைச் சேர்ந்த வணபிதா. டிலூ கனகசபை அவர்களின் முயற்சியின் பேரில் ஒரு தீர்வுக்கு வந்தது புனர்வாழ்வுத் திணைக்களம்.

புனர்வாழ்வு அமைச்சர் அஷ்ரஃப்பின் அந்தரங்கச் செயலாளர் யாசின் புனர்வாழ்வு மற்றும் அத்தியாவசிய காரியதரிசி ரபீக், உதவி பொலிஸ் அத்தியட்சகர் நந்தன விஜேரட்ன ஆகியோர் வணபிதா முன்னிலையில் வாக்குறுதியளித்தனர்.

''ஒரு குடும்பத்திற்கு வத்தளையில் மூன்று பேர்ச்ஸ் காணியும், 33,000 ரூபா பணமும் தருவோம். அதுவரை நாங்கள் சொல்லும் இடத்தில் தற்காலிகமாக குடியிருங்கள்'' எனக் கூறி இவர்களை வெள்ளவத்தை இராமகிருஸ்ண மண்டபத்துக்குப் பின்னால் கடலுக்கும் இரயில் தண்டவாளங்களுக்குமிடையிலான பகுதியில் சிறு கொட்டில்களை கட்டிக்கொண்டு இருக்கக் கூறினர். 1994ம் ஆண்டு ஒக்டோபர் 20ம் திகதியிலிருந்து அவ்விடத்தில் தற்காலிகமாக வசிக்கத் தொடங்கினர்கள். ஆனால் பாவம் இவர்கள் அரசின் 'இடைக்காலத் தீர்வு' என்பதற்கு என்ன அர்த்தம் என்பதைப் பற்றி கேட்டறியாது போயினர்.

உத்தியோக பூர்வமாக எந்த வித உறுதியையும் அரசாங்கம் தராமல் ஏமாற்றியிருந்ததை அறியாமல் போயினர் இவ் அப்பாவிகள்.

காலம் கடந்தது.

1995ம் ஆண்டு ஏப்ரல் 4ம் திகதியிடப்பட்ட ஒரு கடிதம் கரையோர பாதுகாப்பு திணைக்களத்திலிருந்து வந்தது. ''அத்துமீறிக் குடியிருக்கிறார்கள் கரையோரப் பாதுகாப்புக்கு பெரும் அச்சுறுத்தல். எனவே கடிதம் கிடைத்து இருவாரங்களில் கலைந்து போங்கள். அன்றேல் கலைக்கப்படுவீர்கள். இதனால் ஏற்படுகின்ற செலவையும் நீங்களே ஏற்க வேண்டும்''

அகதிகள் பதறினர். 'அப்படி என்றால் திணைக்களம் எங்களுக்கு கொடுத்த வாக்குறுதிப் பற்றி இவர்களுக்கு எதுவும் தெரிவிக்கவில்லையா? அல்லது எங்களுக்கு வழங்கிய வாக்குறுதி பம்மாத்து''தானா?

அரசாங்கமும் 1995 நவம்பர் 7ம் திகதி இல.8 96/3க் கொண்ட வர்த்தமானி அறிக்கையின் மூலம் முகத்துவாரம் தொடக்கம் வெள்ளவத்தை வரையான கடல் பாதுகாப்பு வலயமொன்றை அமுல்படுத்தியது. இதையே காரணமாக வைத்து இவ்வகதிகளுக்கு கடிதங்களுக்கு மேல் கடிதங்களை அனுப்பி அச்சுறுத்தியது. ஆனால் இவ்வகதிகளுக்கு போகுமிடம் ஏது?

1995 ஒகஸ்ட் 9ம்திகதி கொழும்பு மாநகர சபையிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. 'மூன்று நாளில் கலையுங்கள். அல்லது கலைக்கப்படுவீர்கள். அதற்கான செலவை நீங்களே ஏற்க நேரிடும்; செய்வதறியாது திகைத்து நின்றனர்.

இறுதியில் இந்த மாதம் மார்ச் 5ம் திகதியன்று கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் கொழும்பு மாநகர சபையினர் கூட்டாக சேர்ந்து வெள்ளவத்தை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எல். பொன்சேகாவின் மேற்பார்வையில் கீழ் குடிசைகளை இடித்து தரைமட்டமாக்கினர். இப்பணிகளுக்காக காடையர்கூட்டமொன்றையே ஈடுபடுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்று குடிசைகளை இழந்த நிலையில், பகலில் கடற்கரை கொழுத்தும் வெய்யிலிலும், இரவு கடற்கரை குளிர் காற்றிலும் பொழுதைக் கழித்தனர். அடுத்த நாளையும் அவ்வாறே கழித்தனர்.

அடுத்த நாள் உடைக்கப்பட்ட குடிசைகளில் இருந்து சிறு மூங்கில்களை நாட்டி கிடுகுகளால் மறைத்து சிறு இருப்பிடமாக்கிக் கொண்டனர். இதைக் கேள்விப்பட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி மார்ச் 11ம்திகதியன்று இரவு 1.00மணியளவில் அவ்விடத்திற்கு விரைந்தார்; பெரும் பொலிஸ்கோஷ்டியோடு. எல்லோரையும் கடற்கரைக்கு ஓடும்படி சத்தமிட்டார். ''எல்லோரும் அப்படியே நிலத்தில் உட்காருங்கள் என சத்தமிட்டுவிட்டு எல்லோரையும் விசாரணை செய்தார். கடுமையான சொற்களால் திட்டித் தீர்த்துவிட்டு ஒரு குடும்பத்துக்கு ஒருவராக 25பேரை (இந்த 20குடும்பங்களுடன் மேலும் 20 குடும்பங்கள் எங்கெங்கிருந்தோ வந்து சேர்ந்து கொண்டுள்ளார்கள். அவர்களில் 8 சிங்கள குடும்பங்களும் 2 முஸ்லிம் குடும்பங்களும் அடங்கும்) கைது செய்து கொண்டு போனார்கள்.

இவர்கள் வவுனியா, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் இவர்களால் கொழும்பு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனவே 24ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பொலிஸ் அதிகாரி நீதிவானை வேண்ட, நீதிவான் 18ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கச் செய்துள்ளார். அன்றே இவ் அகதிகள் களுத்துறைச் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அன்றே மத்தியானம் 3.40க்கு பொலிஸ் பொறுப்பதிகாரி அகதிகளின் குடியிருப்புக்கு வந்து ''எங்கேனும் போங்கள். எங்கே என்பது எனக்குத் தெரியாது. ஆனால் இங்கிருக்கக்கூடாது ஒருவரும். நாளையும் இருந்தீர்களோ புல்டோசர் கொண்டு வந்து இடிப்போம்'' என்று மிரட்டிச்செனறார். இருக்க குடிசைகள் இல்லை. உண்ண உணவில்லை. (இவர்களுககு வழங்கப்பட்டு வந்த நிவாரணப் பொருட்கள் பெப். 19திலிருந்து நிறுத்தியாகிவிட்டது.) அன்றாடங் காய்ச்சிகளான இக்குடும்பங்களின் ஆண்களோ சிறையில். இந்நிலையில் இவர்கள் கடுமையான சோதனைக்குள்ளானார்கள். ஒரு நாள் மட்டும் 'இலங்கை தாய் மார், புதல்வியர் அமைப்பு இவர்களுக்கு நிவாரணம் வழங்கியது'.

இந்நிலையில் தான் பொறுப்பீன மற்ற முறையில் கொழும்பு மாநகரசபையின் பதில் மேயர் கணேசலிங்கம் ''கருணையுடன் விட்டுக்கொடுத்த கால அவகாசத்தை மீறியதனாலேயே இந்நிலை. அத்துமீறி குடியேறி கொழும்பு வாழ் லட்சோப லட்ச மக்களின் சுகாதாரத்திற்கு குந்தகம் விளைவிக்கிறார்கள்'' என இம்மக்களை மேலும் வேதனை கொள்ளச் செய்தார். அவருக்கு இருப்பது கொழும்பு வாழ் மேட்டுக்குடிகளின் சுகாதாரப் பிரச்சினையே.

சரி அரசு இவ்வகதிகளுக்கு வழங்கிய வாக்குறுதி குறித்து புனர்வாழ்வு அமைச்சு ஏனைய அரச நிறுவனங்களுக்கு அறிவிக்கவில்லையா? மாநகரசபை கரையோரப் பாதுகாப்பு திணைக்களம், பொலிசார் ஆகியோருக்கான அறிவித்தல்கள் வழங்கப்பட வில்லையா?

ஜனாதிபதி சந்திரிகா மார்ச் 16ம் திகதி தொலைக்காட்சிக்களித்த பேட்டி நினைவு கூரத்தக்கது.

''...சென்ற அரசாங்கத்தின் போது ஒரு அமைச்சினால் போடப்பட்ட வேலைத்திட்டம் இன்னொரு அமைச்சின் வேலைத்திட்டத்திற்கு முரணாக கொண்டு செல்லப்பட்டது. திட்டமிடப்படாத அவ்வேலைத் திட்டத்தால் மக்கள் எல்லோரும் பாதிப்புக்குள்ளானார்கள். ஆனால் எங்கள் அரசாங்கத்தில் எல்லா அரச நிறுவனங்களின் வேலையும் ஒன்றுடன் ஒன்று முரண்படாத வகையில் அமுல்படுத்துகிறோம்...''

ஜனாதிபதியின் கருத்தின் உண்மைத் தன்மையை பற்றிய கேள்விகளை வாசகர்களிடமே விடுகிறோம். அதே வேளை அகதிகளின் பிரச்சினைக்குத் தீர்வு?

ஒரு தாய் இப்படி பொருமுகிறார்.

''83இலிருந்து 13 வருடங்களாக நாங்கள் அனுபவித்துவரும் நாடோடித்தனமான அவலங்களை இன்னமும் எந்த அரசாங்கமும் தீர்க்கவில்லை. எங்குமே எங்களை இருக்க விடாத போது நாங்கள் இதோ இந்த கடலில் குழந்தைகளுடன் குதித்துச்சாவதைத் தவிர வேறு வழியில்லையோ என சிவேளை எண்ணத்தோன்றுகிறது...''

## புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலை ஊழல்:

# யார் அந்த ஊழல் பெருச்சாளி?

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சியமைத்ததானது அரசியல் ரீதியாகத் தீர்மானகரமானதோர் சந்தர்ப்பத்திலேயாகும். அதன் காரணமாகவே பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ள சவால்களும் பாரியதானதாக இருந்தது. பாரிய சவால்களுக்கு மத்தியில் நாட்டின் பொது மக்கள் அரசாங்கத்தின் மீது வரையறையற்ற எதிர்பார்ப்புகளை வைத்திருந்தனர்.

ஆனாலும் அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் செல்ல முன்பே அரசாங்கத்தின் மீது மக்கள் வைத்திருந்த எதிர்பார்ப்புகள் சரியத்தொடங்கின.

அதே சமயம் அரசாங்கத்தின் மீதும், அரசாங்கத்துடன் தொடர்பான பல்வேறு நபர்கள் மீதும் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. பதினேழு வருட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக் காலத்தில் ஊழல் குற்றஞ்சாட்டப்படாதவர் ஜே. ஆர். ஜயவர்த்தன மட்டுமேயாவார். ஏனைய அனைத்து அமைச்சர்கள் மீதும் ஊழல், மோசடிக் குற்றங்கள் சாட்டப்பட்டிருந்தன. அவ்வாறான அபகீர்த்திகர அரசியல் வரலாற்றின் மத்தியில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்கள் மக்கள் மத்தியில் வெறுப்புக்கு உள்ளாகையில், அவர்களால் தற்போதைய பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு ஊழல், மோசடிச் சம்பவங்களுடன் தொடர்புள்ளதாக அடிக்கடி கூறப்பட்டது.

அவ்வாறான குற்றச்சாட்டொன்றின் புதிய சம்பவமானது, புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலை தொடர்பானதாகும். புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலையை ''தவக்கால் நிறுவனம்'' என்ற பெயருடன் கூடிய பாகிஸ்தானிய நிறுவனத்தினூடாக விலை கொடுத்து வாங்க ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கக் காலத்திலேயே முயற்சி செய்யப்பட்டது.

''....இலங்கைப் புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலையைத் தனியார் மயப்படுத்துவதற்கு அரசு தயாரகிறது என்ற தகவலொன்று தவக்கால் நிறுவனப் பணிப்பாளர்களில் ஒருவரான ஜாவிட் தவக்காலுக்கு அறியக் கிடைத்தது. ஜாவிட் தவக்கால் முதலாவதாகக் கலாநிதி லெஸ்லி ஹேரத்தைச் சந்தித்து விசாரித்தார். தவக்கால் நிறுவனத்துக்கும், அரசுக்கும் இடையில் அனுப்பப்பட்ட இடைத் தரகராகக் கலாநிதி லெஸ்லி ஹேரத் செயற்பட்டார். ஜாவிட் தவக்கால் பாகிஸ்தானிலிருந்து இலங்கைக்கு வந்தார். அவ்வேளையில் பிரபலமான நிறுவனங்கள் புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலையை விலைக்கு வாங்க முன் வந்திருந்தன. கோல்டர் பாங்க் நிறுவனம் இவற்றினுள் பிரதான இடத்தை வகித்தது. கோல்டர் பாங்க் நிறுவனம், சீமெந்துத் தொழில் பற்றித் தெரிந்த பிரதான நிறுவனமாகும். சீமெந்துத் தொழில் அவர்களின் ஒரு வியாபாரமாக இருந்தது. ஆனாலும், அவர்கள் புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலையை வாங்க முன்வந்ததோ குறைந்த விலைக்கேயாகும். தவக்கால் நிறுவனம் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அதற்காகக் கூடிய விலையொன்றை முன்வைத்தது. அப்போது இருந்த ஐ.தே.க. அரசாங்கம் சீமெந்துத் தொழில் தொடர்பாகத் தவக்கால் நிறுவனத்துக்கு உள்ள அறிவு, அனுபவம் ஆகியவற்றைக் கருத்திலெடுக்காது, அவர்கள் முன்வைத்த கூடுதல் விலைக்கு விருப்பம் தெரிவித்தது. தவக்கால் நிறுவனத்தின் அபகீர்த்தியை கவனமெடுக்கவில்லை. தவக்கால் நிறுவனம் மட்டுமன்றி அதனுடன் தொடர்பான ஐந்து வேறு நிறுவனங்களுக்கு நற்பெயர் இல்லையென்று அன்று சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.




அந்த நிறுவனங்கள் ஐந்தும் பாகிஸ்தானிய வரையறுக்கப்பட்ட யூனியன் வங்கிக்கும், முஸ்லிம் வர்த்தக வங்கிக்கும் கொடுக்க வேண்டிய கொடுப்பனவுகளைக் கொடுக்காது தவிர்த்து வந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவித்தன. இவை எவை பற்றியும் கவனத்திலெடுக்காது அப்போதிருந்த ஐ.தே.க. அரசாங்கம் சீமெந்துத் தொழிற்சாலையை தவக்கால் நிறுவனத்துக்கு விற்பனை செய்யத் தீர்மானித்தது.''

இவ் வரலாற்றின் பின் 1993ம் ஆண்டு பாகிஸ்தானின் தவக்கால் இணை நிறுவனம் சார்பாகப் புத்தளம் சீமெந்து நிறுவனத்தின் பங்குகளில் 90%ஐ விலைக்கு வாங்க 'வனிக் இன் கோப்பரேஷன்' நிறுவனம் முன்வந்தது. அவர்கள் அதற்குப் பதிலாக அமெரிக்க டொலர் 41.1மில்லியனை வழங்க விருப்பம் தெரிவித்தனர். அது இலங்கை நாணயத்தில் ரூபா 2028மில்லியன் ஆகும். அரசாங்கத்தின் நிபந்தனையானது முழுப் பெறுமதியையும் வெளிநாட்டுப் பணத்தில் வழங்க வேண்டுமென்பதாகும். ஆனாலும் தவக்கால் நிறுவனம் ரூபா 2028மில்லியனில் அரைவாசியை இலங்கை நாணயத்தில் வழங்க அனுமதி கோரியது. அவ் அனுமதியைப் பெற்றுக் கொள்ள அக் கால அரசியல்வாதிகள் சிலருடன் வைத்திருந்த நட்பு நிறுவனத்தினால் பயன்படுத்தப்பட்டது.

தவக்கால் நிறுவனத்தினர் வெளிநாட்டு நாணயத்தில் கொடுக்க வேண்டிய அளவு பணத்தைக் கண்டு பிடிப்பதற்காக ஹொங்கொங் நகரத்திற்குச் சென்றது அதன் பின்பாகும். ஹொங்கொங் நகரில் வைத்து இலங்கையின் வர்த்தகப் பங்குகளை விலை கொடுத்து வாங்குவதில் ஈடுபட்டிருந்த நிறுவனங்கள் சில தொடர்பாக அவர்கள் தேடிப் பார்த்தனர். அஸ்கானியோ மார்ட்டினே என்ற நபர் தவக்கால் விவகாரத்திற்குள் பிரவேசித்தது இக் காலத்திலாகும். அவரினூடாக வெளிநாட்டு நாணயத்தில் கொடுக்க வேண்டிய பகுதியான ரூபா 1,128மில்லியன் ஐப் பெற்றுக்கொள்ளத் தவக்கால் நிறுவனத்தினரால் முடிந்தது. இறுதியில் தவக்கால் நிறுவனத்தினர் புத்தளம் சீமெந்துத் தொழிற்சாலையை விலைக்கு வாங்கத் தேவையான சூழ்நிலை உருவானது. அதனோடு பொதுத் தேர்தலும், ஜனாதிபதித் தேர்தலும் வந்தது. தவக்கால் நிறுவனத்தினர் ஐ.தே.க. அரசியல் வாதிகளைக் கைவிட்டுப் பொ.ஐ.மு. அரசியல்வாதிகளின் பின்னால் செல்ல வேண்டி ஏற்பட்டது.

1995ஆம் ஆண்டு மார்ச் மாதம் சீமெந்துத்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சொல்வதைத்தவிர வேறு வழியில்லை!



# பௌத்த பேரினவாதம் முஸ்லிம்களை அச்சுறுத்தவில்லையா?

சிறுபான்மை மக்களுக்கு அது தமிழர்களாய் இருந்தாலும் சரி, முஸ்லிம்களாக இருந்தாலும் சரி, இந்த நாட்டில் அவர்களுக்கு கிடைக்கவேண்டிய அனைத்து உரிமைகளையும் பெற்றுக்கொள்வதற்கு பெரும் போராட்டங்களை நடத்தவேண்டிய நிலைக்கு பௌத்த மேலாதிக்க வாதிகள் சிறுபான்மை இனங்களை தள்ளிவிட்டிருக்கின்றனர்.

சுமூகமாகப் பேசித்தீர்க்கவேண்டிய; பேசித் தீர்த்திருக்கக்கூடிய அனைத்து விடயங்களிலும் அவை வழங்கப்பட வேண்டிய அனைத்து நியாயங்களையும் மறுதலித்து - ஆளும் இனமாகவும், ஆளப்படும் இனங்களாகவும் தொடர்ந்திருக்கவேண்டிய சமத்துவமற்ற சூழலை இந்த நாட்டில் தொடர்ந்தும் வைத்திருக்கும் மனோபாவத்தை சற்றும் மாற்றாதவர்களாக; சிங்கள பேரினவாத அரசியல் தலைமைகளும், பௌத்த பிக்குகளும் காணப்படுகின்றனர்.

சுதேசிகள் இந்த நாட்டின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் அழகிய இலங்கை இரத்த ஆறாக மாற்றிய பெருமை பௌத்த பிக்குகளையே சாரும். பண்டாரநாயக்கா போன்ற தேசியவாதிகளின் ஆட்சிகாலத்திலிருந்து துறவிகளாக இருக்க வேண்டிய பிக்குகள் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றும் போக்கில் முக்கிய பாத்திரங்களாக மாறிவிட்டனர்.

பௌத்த மடாலயங்களுக்குள் இருந்துகொண்டு அன்பு, கருணை, அகிம்சை, உயிர் கொல்லாமை போன்ற உயரிய கோட்பாடுகளை போதிக்கவேண்டியவர்கள் இவற்றிற்கு முற்றிலும் எதிரான மாறுபட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் இவர்களின் கரங்கள் பின்னிருந்து செயற்படுவதை இலங்கையின் அரசியல் வரலாற்றை உற்று நோக்கும் ஒருவர் மறுதலிக்கமாட்டார்.

அரசியலை வெறுத்த புத்த பெருமானின் கோட்பாட்டை விற்றுவிட்டு, இன்று அரசியலை பிரதானமாகக் கொண்டவர்களாக பௌத்த பிக்குகள் மாறிவிட்டனர். 1957ம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்ட காலம் தொடக்கம் இன்று சந்திரிகாவின் தீர்வு யோசனைகள் முன்வைக்கப்பட்டது வரை தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் நியாயமான உரிமைகள் வழங்க பௌத்த மேலாதிக்கவாதிகள் முன்வராத நிலையே காணப்படுகிறது. இதுதான் வரலாறாகவும் இருக்கிறது.

பண்டா - செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது தீவிர பௌத்த மேலாதிக்கவாதிகளின் எதிர்ப்பின் காரணமாகத்தான். இந்திய - இலங்கை ஒப்பந்தம் 1987ம் ஆண்டு கைச்சாத்திடப்பட்டபோது அவ்வொப்பந்தத்தை தீவிரமாக எதிர்க்கும் சக்தியாக பௌத்த மேலாதிக்கவாதிகள் மாறினர். பௌத்த மடாலயங்களுக்குள் இருந்த பிக்குகள் கச்சை கட்டிக்கொண்டு வீதிக்கு வந்தனர். இன்று சந்திரிகாவினால் முன்வைக்கப்பட்ட பெரிதாய்ச் சொல்வதற்கு ஒன்றுமில்லாத இத் தீர்வைக் கூட எதிர்க்கும் பாரிய சக்தியாக பௌத்த பேரினவாதத்திற்கு தலைமை தாங்கும் பிக்குகள் மாறிவிட்டனர்.

''இது பௌத்த நாடு, பௌத்த மதமே அரச மதம், சிங்கள மொழியே அரச மொழி, சிங்களவர்களே இந்த நாட்டின் ஆட்சியாளர்கள். தமிழர்களும் முஸ்லிம்களும் இந்த நாட்டில் சிங்கள மக்களின் கீழ் அடிமைப்பட்டும் நலிந்தும் வாழ்தல் வேண்டும்'' என்பதே பௌத்த மேலாதிக்க வாதிகளின் தத்துவமாகும்.

இவர்களின் இவ் விட்டுக்கொடாத கோட்பாடுகளிலிருந்து இறங்கி வருவார்கள் என்ற இறுதி நம்பிக்கையும் பொய்த்துப்போன இறுதித்தருணம் இதுதான் எனக் கொள்ளப்படல் வேண்டும். அண்மையில் 5 தமிழ்க் கட்சிகளின் கூட்டு, தலதா மாளிகையில் பௌத்த மேலாதிக்க நாயக்கர்களைச் சந்தித்து உரையாடியது. அச்சந்திப்பின் போது அவர்கள் தமிழ்க்கட்சிப் பிரதிநிதிகளிடம் கேட்ட கேள்வி, தமிழர்களுக்கு பிரச்சினை உள்ளதா? என்பதாகும்.

இக்கேள்விபற்றி தமிழர்களும், முஸ்லிம்களும் ஆழ்ந்து சிந்தித்தல் வேண்டும். இக்கேள்வியின் பின்னுள்ள ஆலகாலவிசம் தமிழர்களையும், முஸ்லிம்களையும் கொன்றுவிடக் காத்துக்கொண்டிருக்கிறது. நான் ஒரு சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவன் என்ற ரீதியில் இக்கேள்வி என்னைப்பயமுறுத்துகிறது. நாளை முஸ்லிம் மக்கள் விடயத்திலும் இக்கேள்வி கேட்கப்படும். இதுபற்றி முஸ்லிம் அரசியல் தலைமைகள் ஏன் மௌனமாக இருக்கின்றன என்பது புரியவில்லை.

முஸ்லிம் காங்கிரஸ் தனது முஸ்லிம் இனவிடுதலைப் போராட்டத்தில் கொடூரகோட்பாடுகளை உடைய பௌத்த மேலாதிக்கவாதிகளை இன்னும் சந்திக்கவில்லையா? அல்லது தனது இனவிடுதலைப் போராட்டத்தை தமிழர்களுக்கு எதிராக மட்டுமா வரையறுத்துக் கொண்டுவிட்டது? எனும் கேள்விகளை முஸ்லிம் அரசியல் தலைமைகள் இன்றைய குரல்களிலிருந்து எழுப்பத் தோன்றுகிறது.

தேசிய இனங்கள்; உரிமைகள் தொடர்பான விடயங்களில் சிங்கள பௌத்த மேலாதிக்க வாதிகளுக்கு தமிழர்களும் ஒன்றுதான், முஸ்லிம்களும் ஒன்றுதான். சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இக்கண்ணோட்டம் மாறவில்லை. ஆனால் தமிழர்கள் தங்களுடைய கல்வியறிவு, பொருளாதார மேம்பாடு, சர்வதேச தளங்களில் காலூன்றல் போன்ற சிறப்பான அம்சங்களைப் பெற்றிருந்த ஒரு இனம் என்ற வகையில் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகளின் அடக்கு முறைகளை தொடர்ந்தும் சகித்துக் கொள்ள முடியாத நிலையில் பௌத்த மேலாதிக்க சக்திகளுக்கு எதிராக அரசியல், ஆயுத போராட்டங்களை நடாத்தி இருக்கிறார்கள், நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

**முஸ்லிம்கள் பௌத்த மேலாதிக்கவாதிகளை இன்னும் துணிந்து எதிர்க்கும் நிலையை அடையவில்லை. நலன்களுக்காகவும் பதவிகளுக்காகவும் பௌத்த மேலாதிக்க சக்திகளோடு சமரசம் செய்து கொள்ளும் சரணாகதிமனம் படைத்தவர்களாகவே செயற்பட்டு வருகின்றனர். இத்துரதிர்ஷ்டம் மிகு சரணாகதி போக்கின் ஊடே; தமிழர்களின் தேசிய இனவிடுதலைப் போராட்டத்தை சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகளுக்கு சார்பாக நின்று முறியடிக்கும் போக்கில் இன்று முற்றுமுழுதாக ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் முஸ்லிம் காங்கிரசும் ஏனைய முஸ்லிம் தென்னிலங்கை தலைவர்களும் தமிழர்களின் நியாயமான கோரிக்கைக்கு துரோகம் இழைக்கும் அதேவேளை; முஸ்லிம் மக்களுக்கும் பாரிய துரோகமிழைத்துக் கொண்டிருக்கின்றனர்.**

இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரங்களில் முதல் இனக்கலவரமாகக் கொள்ளப்படுவது சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகள் முஸ்லிம்களுக்கெதிராக நடாத்திய 1915ம் ஆண்டைய சிங்கள - முஸ்லிம் இனக்கலவரம்தான் வடக்கு - கிழக்கு தவிர்ந்த நாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் முஸ்லிம்களுக்கெதிரான கலவரமாக இது மாறியிருந்தது. இக்காலகட்டத்தில்தான் ''பொன் இராமநாதன்'' போன்ற தமிழ்த் தலைவர்கள் சிங்கள மக்களின் உற்ற நண்பனாக இருந்தனர். முஸ்லிம்களையே இந்த நாட்டில் சிங்களவர்கள் முதல் எதிரிகளாகக் கொண்டிருந்தனர் என்பதை வரலாறு நமக்குச் சுட்டுகிறது. இருந்தும் முஸ்லிம்களின் சரணாகதி நிலை காரணமாக தமிழர்கள் போராட்டத்தில் இறங்கினர். சிங்கள மேலாதிக்கவாதிகளின் போராட்டம், தமிழர்களுக்கெதிராக மாறியது. முஸ்லிம்கள் இரண்டாவது எதிரி நிலைக்கு வந்தனர்.

முஸ்லிம்களின் அதிகூடிய ஜனத்தொகை கொண்ட தாயகமான அம்பாறை மாவட்டத்தை பௌத்த மேலாதிக்கவாதிகளிடம் முஸ்லிம்கள் இழந்துவிட்ட நிலையில், முஸ்லிம்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தலைமைகளின் அதுபற்றிய தொடர்ச்சியான மௌனமும் எம்மைச் சிந்திக்கவைக்கிறது.

அம்பாறையில் சிங்களக் குடியேற்றம் கதைக்க மாட்டார்கள்; ஏறாவூரில் சிங்களப் பொலிசாரால் முஸ்லிம் தாய் பாலியல் வல்லுறவு- கதைக்கமாட்டார்கள்:அம்பாறை பள்ளிவாசலில் ஒலிபெருக்கியால் பாங்கு சொல்ல முடியாது தடை - கதைக்கமாட்டார்கள். புனானை மன்னம்பிட்டி சிங்கள குடியேற்றங்களின் ஊடே ஓட்டமாவடி, வாழைச்சேனை முஸ்லிம்களின் காணிகள் பறிபோகிறது. கதைக்கமாட்டார்கள். தீகவாவி பௌத்த புனித பிரதேசம் - மூச்சுவிடமாட்டார்கள். மாறாக பௌத்த பேரினவாதிகளைகாக்கா பிடிக்கும் வேலைகளுக்காகவும் அவர்களை குஷிப்படுத்துவதற்காகவும் முஸ்லிம் அரசியல் தலைமைகளுக்குள் போட்டா போட்டி, அஷ்ரஃப் ஐம்பது அடி பாய்ந்தால் அவருடன் இருக்கும் பாராளுமன்றப் பிரதிநிதி யூ. எல்.எம்.மொஹிதீன் நூறு அடி பாயக் காத்துக் கொண்டிருக்கின்றார்.

பௌத்த மேலாதிக்கவாதிகளின் அநியாயக் குடியேற்றங்கள் அதிகார காட்டுத் தர்பார்களினால் குரலிழந்து போன முஸ்லிம்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த நாட்டில்; முஸ்லிம்களை இன்னும் பலவீனமாக்கும் பௌத்த மேலாதிக்கவாதிகளின் சூழ்ச்சிகளை எதிர்த்து அஷ்ரஃபோ மொகிதீனோ? ரஹூப் ஹக்கியோ, சுஹைரோ குரல் எழுப்பி உள்ளார்களா? இக்கேள்விக்கு எனது ஆணித்தரமான பதில் இல்லை என்பதுதான். அப்படி எழுப்பி இருப்பின் ஒரு ஆதாரத்தை தானும் உங்களால் காட்ட முடியுமா? தமிழர்களை எதிரிகளாகவும் சிங்கள மேலாதிக்க வாதிகளை நண்பர்களாக் கொள்ளும் போக்கு நீண்டகால அடிப்படையில் முஸ்லிம்களுக்கு ஒரு போதும் நன்மையளிக்க போவதில்லை.

அண்மையில் அம்பாறையில் அமைச்சர் அஷ்ரஃப் ''சமுர்த்தி'' நியமனம் வழங்கும் வைபவத்தில் உரையாற்றும் போது ''நான்தான் கிழக்கு மாகாணத்திற்கு ராஜா'' எனக் குறிப்பிட்டிருந்தார். நீங்கள் இப்படியே ஆலாபனை செய்து கொண்டு போவீர்களேயானால் ராஜாவாக மட்டுமல்ல ராஜாக்களுக்கு ராஜாவாக மாறிவிடலாம். ஆனால் உங்களுக்கு வாக்களித்தவர்களும் இந்த நாட்டின் முஸ்லிம்களும் தொடர்ந்தும் அடிமைகளாக இருந்து வருவார்கள் என்பதே உண்மையாகும்.

முஸ்லிம்கள் ஒன்றை நன்றாக உணர்ந்து கொள்ளல் வேண்டும். இந்த நாட்டில் இவ்வளவு இழப்புகளும் இவ்வளவு இரத்தக்களரிகளும் ஏற்பட்ட பின்னும் கூட, தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பிரச்சினை இருப்பதாக எந்த பௌத்த மேலாதிக்கவாதிகளும் ஏற்றுக்கொள்ளவில்லை.

பௌத்த மேலாதிக்கம் ஒரு பசித்த முதலைக் கொப்பானது; அது தமிழர்களையும் முஸ்லிம்களையும் விழுங்கக் காத்துக்கொண்டிருக்கிறது. இப்போது பௌத்த மேலாதிக்க வெறியின் வாயில் தமிழர்கள். தமிழர்களின் போராட்டம் பௌத்த மேலாதிக்கவாதிகளிடம் தோல்வி அடைந்தால் முஸ்லிம்கள் சிங்கள பௌத்த மேலாதிக்கவாதிகளுக்கு ஒரு சிறு தூசிதான். இதை உணரின் முஸ்லிம் தலைமைகள் இப்படி நடப்பரோ?

இந்த நாட்டில் ஒரு பண்டாரநாயக்காவை உருவாக்கியவர்கள் பௌத்த மேலாதிக்கவாதிகள்தான். அதே நேரம் ஒரு பிரபாகரனையும் உருவாக்குவதற்கு காரணமாக இருந்தவர்களும், இந்த பௌத்த மேலாதிக்க வாதிகள் தான். என்பதை நாம் உணர்தல் வேண்டும்.

முஸ்லிம் சமூகமே!

எப்போது நீ உண்மைக்காய் குரல் எழுப்புவாய்?

எப்போது உண்மையை உணர்வாய்?

## புத்தளம்.........

தொழிற்சாலையை விற்பதற்கு இடமளிப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வழி தேடப்பட்டது. சீமெந்துத் தொழிற்சாலைப் பிரச்சினை தொடர்பாக வர்த்தக, வாணிபத்துறை அமைச்சர் கிங்ஸ்லி ரீ. விக்கிரமரத்ன அமைச்சரவைக்கு விளக்கமளித்தார். அது பற்றி ஆராய்ந்து பார்க்குமாறு நிறுவனச் சட்டங்கள் தொடர்பான நிபுணத்துவம் வாய்ந்தவரான வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரிடம் ஜனாதிபதி தெரிவித்தார்.

உடன்பட்டபடி தவக்கால் நிறுவனம் இப்பணத்தை வெளிநாட்டுப் பணத்திலேயே கொடுக்க வேண்டுமெனவே அவர் தெரிவித்தார்.

இக் காலப்பகுதியினுள் தவக்கால் நிர்வாகத்துக்கு எதிராக வெளிநாட்டுப் பங்குதாரர்கள் சார்பாக ஹொங்கொங் வர்த்தகரொருவர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். வழக்கைத் தொடுத்தவர் அஸ்கானியோ மார்ட்டினோ.

இந் நெருக்கடியைத் தீர்க்கும் முகமாக ஜாவிட் தவக்கால் ஹொங்கொங்கின் வெளிநாட்டு நிதிமுகாமையாளர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார். அதன்படி தொலைபேசி உரையாடலொன்று 1996 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 04ஆம் திகதி நடைபெற்றதாகக் கூறப்படுகின்றது. அங்கு இலங்கையில் எதனையும் பணத்துக்காகச் செய்யலாம் எனவும், இப் பிரச்சினையை இல்லாதொழிப்பதற்கு அரசாங்க அமைச்சரொருவர் ரூபா ஒரு கோடியும், அரச அதிகாரியொருவர் இன்னும் ரூபா ஒரு கோடியும் கோருவதாகக் கூறப்பட்டது.

இதே சமயம் லக்ஷ்மன் கதிர்காமரின் கோரிக்கை மீறபபட்டு Cabinet Paperமூலமாக இரகசியமாகத் தவக்கால் நிறுவனத்தினரின் கோரிக்கை அங்கீகரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

''இவ்வாறானதொன்றுக்கு அங்கீகாரம் வழங்குவதானால் நிலவும் சட்ட திட்டங்களிற்கிணங்க Public Enterprises Reform Commission of Sri Lanka (P.E.R.C.) மற்றும் அந்நிய செலவாணியைப் பாதுகாக்கும் ஆணைக்குழுவின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். அவை அனைத்தினதும் அனுமதியைப் பெற்றுக் கொண்டு அமைச்சரவை Cabinet Paperயை மாற்றி இந் நடவடிக்கைக்கு இடமளிக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஜனாதிபதியிடம் 1996.01.09 திகதியிட்ட கடிதமொன்றை அனுப்பினார்.''

ஜனாதிபதிக்குக் கடிதம் அனுப்ப முன் அமைச்சர் கதிர்காமரினால் அவ்வாறான அமைச்சரவை அங்கீகாரமொன்று இதற்கு வழங்கப்பட்டதா?'' என அமைச்சரவைச் செயலாளரிடம் கேட்கப்பட்டது. 'இல்லை' என்பதே அவரின் பதிலாகும்.

ஆனாலும் அமைச்சரவைக் குழுத் தகவலொன்றினூடாகத் தவக்கால் நிறுவனத்தின் கோரிக்கைக்கு 1995 ஜுன் 20ஆந் திகதி அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகப் பின்பு வெளிவந்தது. இச்சம்பவங்களின் பின் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் ஜனாதிபதிக்குமிடையே அடிக்கடி கடிதப் பரிமாற்றங்கள் நடந்தன. அவ்வாறான கடிதமொன்று Sunday Leader பத்திரிகையில் வெளிவந்த பின்பு தவக்கால் நிறுவனத்தினரின் பிரச்சினை சிக்கலடைந்து சென்றது. பொதுசன தொடர்புகளினூடாக இது தொடர்பான ரூப்பைகள் கிளரப்பட்டன.

எவ்வாறெனினும் லக்ஷ்மன் கதிர்காமர் 1996 மார்ச் 07ஆந் திகதி பாராளுமன்றத்தில் தவக்கால் விவகாரத்தைப் பூசி மெழுகினாலும் தொடர்பு சாதனங்களினால் தொடர்ந்தும் இப் பிரச்சினை கிளப்பப்பட்டது. தொடர்பு சாதனங்களின் அடிப்படைப் பிரச்சினைகளாயமைந்தவை இவை தான்.

(1) வெளிநாட்டமைச்சர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததன்படி தவக்கால் நிறுவனத்தினர் ரூபா 30மில்லியன் பணத்தை கொடுத்த அமைச்சரும் அதிகாரியும் யார்?

(2) அவர்கள் தெரிவித்துள்ளதன்படி, பணத்தைப் பெற்றுக்கொண்ட அதிகாரி அல்லது அமைச்சரின் நிபந்தனையின் படி, அமைச்சரவை தகவல்கள் திரிபுப்படுத்தப்பட்டதா?

(3) அவ்வாறு திரிபுப்படுத்தப்பட்டிருப்பின், அத்தகவல் அமைச்சரவையின் ஏனைய அமைச்சர்களின் கவனத்திற்குட்படவில்லையா?

(4) கவனத்திற்குட்படுத்தப்பட்டாவிடின், அவ்வாறானதொரு அமைச்சரவை தகவல், அமைச்சர்களுக்கு தெரியாமல் இரகசியமாக நடைமுறைப்படுத்தப்பட்டது எந்த அடிப்டையின் கீழ்? இத்தகவல் அமைச்சர்களால் அங்கீகரிக்கப்பட்டதா?

(5) இவ்வாறு அமைச்சரவை தகவல் ஒன்று திரிபுப்படுத்துப்படாவிடின், 96 ஜன. 19ஆந் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் வெளிநாட்டு அமைச்சர் அவ்வாறு ஒரு திரிபுப்படுத்தலும் செய்யப்படவில்லை என விபரிக்காதது ஏன்?

(6) இறுதியாக உரிய கடிதத்தில் வெளிநாட்டமைச்சர் குறிப்பிட்டுள்ளவை தொடர்பாக விசாரித்தறிய ஜனாதிபதி இதுவரை எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

தற்போது யாவரது கவனமும் குவிந்திருப்பது, அரசாங்கத்தினால் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ள விசாரணையிலும், பாராளுமன்ற விவாதத்திலுமாகும். பாராளுமன்ற விவாதம் மார்ச் 19-21 வரை நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சி தவக்கால் விவகாரத்தில் அரசியல் இலாபம் பெற நினைத்திருந்தாலும், அவர்களும் இவ் ஊழல், மோசடி வேலைத்திட்டத்துக்குப் பொறுப்பானவர்கள் என்பதும் தற்போதே பொதுசனத் தொடர்பு சாதனங்களூடாக அறியக் கிடைத்துள்ளது. அதனாலேயே, இப் பாராளுமன்ற விவாதத்தைத் தொலைக்காட்சியில் நேரடி ஒளிபரப்புச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்ரமசிங்ஹ தவக்கால் விவகாரம் தொடர்பாக மிகுந்த கவனத்துடன் செயற்படுவதாகத் தெரிந்தாலும், பாராளுமன்ற விவாதங்களில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இலாபம் பெற முடியாது போகலாம்.

தவக்கால் நிறுவனத்தினரின் பிரச்சினை தொடர்பாக எனது அரசியல் நண்பரொருவரிடம் நான் இவ்வாறு கேட்டேன்.

'தவ்க்கால் நிறுவனத்தாரின் வேலை எப்படி?'


'முதலாளித்துவ முறை எனப்படுவதே சுரண்டலும் திருட்டும் தானே. எனவே தற்போது குறையவும், கூடுதலாகவும் திருடுவதற்குமிடையே கோடொன்றைத் தேடிக் கண்டுபிடிக்க உழைப்பதே அதுவாகும்'

***தமிழில்: சி.வி.வினோத்.***

***-சத்துன்***

www.tamilarangam.net





# இந்திய அமெரிக்கா கடற்படைக் கூட்டு: திருமலை மீது கண்

என்.எஸ்.குமரன்

இந்தியாவும், அமெரிக்காவும் புதிய கூட்டணி அமைத்துள்ளன. இதன்படி இந்திய கடற்படையும் அமெரிக்க கடற்படையும் தென்னிந்திய கடற்பிரதேசத்தில் கூட்டு ரோந்து நடவடிக்கையில் ஈடுபட முடிவெடுத்துள்ளன எனத் தெரியவருகிறது. இந்த ரோந்து நடவடிக்கைக்கான அமெரிக்க - இந்திய கடற்படையின் பயிற்சி எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடக்கவிருப்பதாக தெரியவருகிறது. இக்கூட்டுப் பயிற்சி கேரள கடற்பிரதேசத்தில் மூன்று நாட்கள் நடத்தப்படுமென்றும் தெரிகிறது.

இந்த கூட்டு ரோந்து நடவடிக்கையின் நோக்கங்களாக:-

1. இலங்கையின் வட பிராந்தியத்திலிருந்து புலிகள் இந்தியாவிற்குள் கடற்பாதையினூடாக வந்து போவதைத் தடுப்பது.

2. புலிகளின் ஆயுத விநியோகப்பாதையை கண்காணிப்பது; தடுப்பது.

3. இந்தியாவுக்குள் போதைப் பொருள் கொண்டுவரப்படும் கடற்பாதையை கண்காணிப்பது அடைப்பது என்கிற காரணங்களை இந்தியா காட்டினாலும் கூட அமெரிக்காவின் தரப்பில் உள்ள லாபம் என்ன என்பது பற்றி அது எதையும் வெளிக்காட்டவில்லை. அமெரிக்காவுக்கு ஏன் இந்தத் திடீர் கரிசனை இப்போது ஏற்பட்டுள்ளது? அமெரிக்காவின் புதிய தந்திரோபாய வியூகம் மிகவும் கவனமாக அவதானிக்கப்பட வேண்டியது.

அமெரிக்கா மீண்டும் திருகோணமலை துறைமுகத்தின் மீது கண்வைத்துவிட்டதாகவே அறியக்கிடைத்திருக்கிற செய்திகளின்படி தெரிகிறது. இந்தியா இவ்விடயத்தில் நிபந்தனையுடனான உடன்பாட்டுக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது. அதாவது இருநாடுகளும் சேர்ந்தே திருகோணமலைக்குள் ஊடுருவுவது என்பதே அமெரிக்க - இந்திய குள்ளநரிகளின் திட்டம். திருகோணமலையின் கடந்த கால வெளிநாட்டு தலையீடுகளை திரும்பிப்பார்ப்பது இங்கு அவசியமாகிறது.

## திருகோணமலை பின்னணி:


பிரித்தானியாவின் காலனித்துவ நாடாக இலங்கை இருந்தபோது 1947ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் ஆட்சியமைத்த டி.எஸ். சேனநாயக்க தலைமையிலான அரசாங்கத்துடன் - டி.எஸ். சேனநாயக்க பதவிக்கு வந்த இரண்டு மாதங்களுக்குள் அதாவது 1947 - நவம்பர் 11ம் திகதியன்று பிரித்தானிய அரசாங்கம் பாதுகாப்பு உடன்படிக்கையொன்றை செய்து கொண்டது. இவ்வுடன்படிக்கையின் படி இலங்கைக்குள் பிரித்தானிய விமானப் படை, கடற்படை, தரைப்படை என்பன செயற்படுவதற்கு இலங்கை சம்மதித்தது. அதன்படி திருகோணமலையை கடற்படைச் செயற்பாட்டுக்காகவும், கட்டுநாயக்காவை விமானப்படைச் செயற்பாட்டுக்காகவும் தளங்களாக பிரித்தானியா பயன்படுத்தியது. இவ்வுடன்படிக்கையின்போது 'டி.எஸ். சேனநாயக்க, ஆசியாவிலேயே நம்பர் வன் துரோகி' என எதிர்க்கட்சியினரால் கண்டனத்திற்குள்ளானார்.

1956ஆம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க, தான் பதவிக்கு வந்தால் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தின் தளங்களை அகற்றி இலங்கைக்கு பூரண சுதந்திரத்தை பெற்றுத் தருவதாக வாக்குறுதியளித்தார். அதே போல் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்க பிரித்தானியா விட்டுக்கொடுக்கப்போவதில்லை என்பதை உணர்ந்து 1956 டிசம்பரிலிருந்து பிரித்தானிய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி 1957 யூன் மாதம் அது தொடர்பான உடன்படிக்கையையும் செய்துகொண்டார். 1957 ஒக்டோபர் 15ந் திகதிக்குள் திருகோணமலையிலிருந்து தனது தளங்களை அகற்றுவதாக பிரித்தானியா ஒப்புக்கொண்ட போதும் மூன்று ஆண்டுகள் சென்றன. வேண்டா வெறுப்பில் அகன்ற பிரித்தானிய படைத்தளங்கள், இலங்கையிடமிருந்து 22 மில்லியன் ரூபாவையும் (உடன்பட்டபடி) பெற்றுக்கொண்டு திரும்பியது.

இதேகாலப்பகுதியில் அமெரிக்கா இந்து சமுத்திரத்தில் இருந்து தளம் அமைக்க முயற்சித்த வேளையிலேயே பிரித்தானியா அப்பிராந்தியத்தை விட்டகன்றது. இதே காலப்பகுதியில் இலங்கைக்கு தென்மேற்கே 700 கிலோமீற்றர் தொலைவிலுள்ள பிரித்தானிய குடியேற்ற தீவான டியாகோ கார்சியாவை 1960களில் அமெரிக்கா 99 வருடங்களுக்கு குத்தகைக்குப் பெற்றுக் கொண்டது. 1971இல் அங்கு ஒரு பாரிய இராணுவத் தளத்தையும் நிறுவியது. கெடுபிடிப்போர் உக்கிரமாக இருந்த அந்த காலப்பகுதியில் அமெரிக்காவின் எதிரியாக ரஷ்யா காணப்பட்டது. ரஷ்யாவின் கூட்டாளியான இந்தியாவை (இந்து சமுத்திரத்தின் வல்லரசுமான இந்தியாவை) கண்காணிப்பதில் தனது உறுதியான இராணுவத்தளத்தை நிறுவியது. ஆனாலும் அமெரிக்கா திருப்தியடையவில்லை. இலங்கையிலும் குறிப்பாக திருகோணமலையில் தனது தளத்தை அமைக்கும் நீண்ட நாள் ஆசையை தீர்த்துக்கொள்ள முயன்றது.

## CIA யின் அறிக்கை

ஜே. ஆர். அரசாங்கம் பதவிக்கு வந்த போது ஜே. ஆர். கடைப்பிடித்த திறந்த பொருளாதாரக் கொள்கை, முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளுடனான உறவு என்பவை அமெரிக்காவுக்கு சாதகமாக அமைந்தது. அமெரிக்க இராணுவ உயர்பீடமான பெண்டகன் (Pentagon) அதன் உளவுப் பிரிவான சீ. ஐ. ஏ. ( CIA- Central Intelligence Agency) திருகோணமலைத் துறைமுகத்தில் எண்ணெய் நிரப்புவதற்கு உள்ள பாதுகாப்பான சாதகமான சூழல்பற்றிய அறிக்கையொன்றை வெளியிட்டிருக்கிறது. அதனைத் தொடர்ந்து சீ.ஐ.ஏ. உளவுப்பிரிவின் தலைவர் ஜெனரல் வர்னன் ஏ. வோல்டர், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவை இரகசியமாக இலங்கையில் சந்தித்தார். ஆனால், ஜே.ஆர். தெளிவான உறுதியான பதிலை அளித்திருக்கவில்லை. இந்திய உளவுப்பிரிவான 'றோ' (RAW- Research



and Analys Wing) இதே காலத்தில் இலங்கை - அமெரிக்க பேச்சுவார்த்தையைக் கண்காணித்து வந்தது. இலங்கையுடன் பேச்சுவார்த்தைக்கு அமெரிக்க அதிகாரிகள் தொடர்ச்சியாக வந்து போனார்கள். இவ்விஜயத்தின் நோக்கங்களுள் (VOA - Voice Of America) 'அமெரிக்காவின் குரல்' ஐ அமைப்பது, திருகோணமலைத் துறைமுகத்தைப் பயன்படுத்துவது ஆகிய இரண்டு காரணங்களும் அடங்கியிருந்தது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் ஜே.ஆர்.; அமெரிக்காவுக்கு உறுதியான பதிலை தராமல் இருந்ததற்கான பிரதான காரணம்; இலங்கையின் இனப்பிரச்சினைத் தொடர்பானதே. ஏனெனில் அமெரிக்காவுக்கு திருகோணமலையைப் பயன்படுத்த விடுவதன்மூலம் இந்தியாவைப் பகைத்துக்கொள்ள வேண்டி வரும். இந்தியாவை பகைத்துக்கொண்டால், தமிழ் இயக்கங்களை ஏற்கெனவே இலங்கைக்கு எதிராக வளர்த்து விட்டிருக்கின்ற இந்தியா அவ்வியக்கங்களை இலங்கைக்கு எதிராக கையாளலாம். எனவே அமெரிக்காவை திருப்தி படுத்துவதை விட ஆயுதப்போராட்டத் தலைவலியை குறைப்பதே நல்லது என எண்ணினார். இதன் விளைவே இந்திய - இலங்கை ஒப்பந்தம். இந்தியா இந்தத் தருணத்தை எதிர்பார்த்து காத்திருந்தது. தருணம் வந்த போது ஒப்பந்தத்தில் நைசாக திருகோணமலை விவகாரத்தையும் திணித்தது, அவ்வுடன்படிக்கையின் 2.2 பிரிவின் படி.

**'திருகோணமலை மற்றும் ஸ்ரீலங்காவின் இதர துறைமுகங்களை இந்தியாவின் நலன்களுக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்குடன் எந்த ஒரு நாட்டின் இராணுவ வசதிக்காகவும் அளிக்கப்படமாட்டாது.**

2.3பிரிவின் படி.

***'திருகோணமலை எண்ணெய்க் கிடங்குகளை சரிசெய்து பயன்படுத்தும் செயல் இந்தியா - ஸ்ரீலங்கா அரசுகளின் கூட்டு நடவடிக்கையாக (Joint Venture) மேற்கொள்ளப்படும்'.***

என குறிப்பிடப்பட்டது.

இவ்வுடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட போது 'இந்திய தலையீட்டுக்கு இடம் கொடுத்து இலங்கையின் இறைமையை அழிக்கும் வகையில் செய்து கொளளப்பட்ட ஒப்பந்தம் இது' என அன்றைய பிரதமர் பிரேமதாச, பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி ஆகியோர் ஜே. ஆருக்கு தனிப்பட்ட முறையில் தெரிவித்து கொண்டனர்.

## அமெரிக்காவின் புதிய வியூகம்

எவ்வாறிருந்தபோதும் இந்தியா திருகோணமலை விடயத்தில் வெற்றிகண்டதைப்போல அமெரிக்கா 'அமெரிக்க குரல்' விடயத்தில் வெற்றிக் கண்டது. ஆனுலும் அமெரிக்கா திருகோணமலை பற்றிய எதிர்பார்ப்பை கைவிடவில்லை.

கெடுபிடிப்போர் முடிவுற்று ரஷ்யா அமெரிக்காவின் காலில் சரணடைந்ததன் பின் இந்தியாவுக்கும் போக்கிடமில்லாது போனது. இந்தியாவுக்குள் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் புதிய பொருளாதார கொள்கையின் காரணமாகவும் இந்தியாவும் அமெரிக்காவும் சமரசம் செய்து கொண்டு போனது.

இந்தியாவின் புதிய இராணுவ தளபாட தயாரிப்பு, ரொக்கட் தயாரிப்பு, ஏவுகணைத்தயாரிப்பு என்பன அவ்வப்போது அமெரிக்காவின் அதிருப்திக்குள்ளானது. கண்டனத்துக்கும் உள்ளானது. ஆனாலும் அமெரிக்காவுடனான இந்தியாவின் சமரசப்போக்கு அமெரிக்காவை ஆறுதல் படுத்தியது. இந்த சமரசப்போக்கின் பயன்படுத்தற் கட்டமே இப்போதைய இந்திய - அமெரிக்கப் படைகளின் கூட்டு.

இன்று அமெரிக்கா ஐ.எம்.எப். உலக வங்கி என்பவற்றுக்கூடாக தனது சர்வதேச சுரண்டலை தடையில்லாமல் நடத்தி வருகிறது. இவற்றைப்பாதுகாக்க தனது அடாவடித்தனங்களையும் பலநாடுகள் மீது செய்து வருகிறது. உலகின் பொலிஸ்காரன் எனச்சொல்லப்படுகின்ற அமெரிக்கா தனது சண்டித்தனத்தையும் சர்வதேச சுரண்டலையும் நியாயப்படுத்துவதற்காக நிறுவியிருக்கிற பிரசார நிறுவனங்களே VOA, CNN போன்ற ஒளிபரப்புச் சேவைகள்.

ஏற்கெனவே இலங்கையில் ஐ.தே.க. எனும் உள்நாட்டுத் தோழமை முதலாளித்துவ கும்பலின் அனுசரனையுடன் VOA வை ஸ்தாபித்த அமெரிக்காவுக்கு கடந்த மாதம் பெப்ரவரி 28ம் திகதியிலிருந்து சீ. என். என். (CNN- Cable News Network ) ஒளிபரப்பை நடத்த இன்னுமொரு சுரண்டல் கும்பலான பொ.ஐ.மு. அனுமதியளித்துள்ளது. சென்ற வாரம் கியூபாவின் ஆகாய எல்லைக்குள் அமெரிக்காவிலிருந்து பறக்கவிடப்பட்ட விமானமொன்றை வீழ்த்திய செய்தியை சீ.என்.என். சேவை அமெரிக்காவை நியாயப்படுத்தியும் கியூபாவைக் கண்டித்தும் பிரச்சாரம் செய்தது தெரிந்ததே. எமது உள்நாட்டு தொலைக்காட்சி சேவைகள் கூட சீ.என்.என்னை ஆதாரங்காட்டி இச்செய்தியை காண்பிப்பதன்மூலம் அமெரிக்க ஏகாதிபத்தியத்தையும் நியாயப்படுத்தியே வருகின்றன.

இவ்வாறிருக்க இந்திய - அமெரிக்க படைகளின் புதிய கூட்டு நடவடிக்கை நாளை இலங்கைக்கும், இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையில் ஏற்படுத்தப் போகும் பாதிப்பை இந்த தொடர்பு சாதனங்களாலேயே உலகளவில் ஒடுக்குகின்ற கும்பலுக்கு சார்பான வகையில் பிரச்சாரப்படுத்தப் போகின்றன.

இன்னமும் இலங்கை - இந்திய ஒப்பந்தம் நடைமுறையிலேயே இருக்கிறது. திருகோணமலையில் இந்தியாவின் கையும் அப்படியே இருக்கிறது. இந்நிலையில் அமெரிக்க - இந்திய கூட்டு உடன்படிக்கையும் ஏற்பட்டிருக்கின்றபோது, இன்றைய அமெரிக்க - இந்திய கூட்டுப் படைகள் திருகோணமலை எண்ணெய் கிடங்குகளைப் பயன்படுத்துமா? அது இலங்கையின் தற்போதைய நிலவரத்தில் எத்தகைய பாதிப்பைச் செலுத்தும்? இலங்கை அரசாங்கம் - மற்றும் இலங்கை கடற்படை என்பன இக்கூட்டுடன் எதிர்காலத்தில் இணையுமா? புலிகளின் கடற்படைப்பலத்தை நசுக்குவதில் திருகோணமலை மைய நிலையமாக இந்திய - அமெரிக்க படையினரால் பயன்படுத்தப்பட விருக்கிறதா? இவை இன்று எழுந்துள்ள புதிய கேள்விகள்!

## ஒட்டு வெயில்

வலை எறிந்த் செம்படவன்
அதை மீண்டும் கொசுவுதல்போல்,
வெயிலை
கொசுவிக்கொண்டிருந்தது சூரியன்.

மரங்களுக்கு,
பச்சயமில்லாமல் போனாலும் பாதகமில்லை;
இந்த ஊத்தை நிலத்தில், இன்று வெடித்த பெருங்குண்டில்
தன் இளவெயிலின் நுனிவாலும் சிதைந்து நசிந்ததனால்
புசு புசுவென,
பேய் அறைந்தவனைப்போல
வேகமாய் கொசுவி,வெயிலை மடித்தது.
கைக்கடங்காத் தொங்கல் ஒரு பக்கம் நிலம் வழுக.

சிகப்பு மீசை துடிதுடித்து
சில மயிர்கள் நிலம் உதிர,
வால் நசிந்த வெயில் கொசுவி மடிக்கும் சூரியனே,
வெயில் வீசி ஊரில்,
மீன் பிடித்த செம்படவா;
வெயில் ஒட்டும் தொழிற்சாலை
வானத்தில் இருக்கிறதா?
உன் வெயில் இல்லா ஒரு தினத்தில்
நான் பூக்களுக்கு ஒளியூட்ட
ஒரு சின்னக் கிண்ணத்தில் கொஞ்சம் குருத்து வெயில் நோண்டி
சேமிக்கத் தானிருந்தேன்,
கை,விரல் நகத்தில் கூரில்லை.

அள்ளு, சுடுவெயிலை, உன் நெருப்பு மனைக்குள்ளே
கொண்டுபோய் குவித்துவிட்டு
என் மரத்தின் துளிரில் கறுப்பால் கரைகளிலே
முலாம் பூசும் *சாச்சா!
இதுதான் எங்கள் மண்.
இதற்குள்தான் நாங்கள் இரவுகளில் நிலா பார்த்து
கடற்கரையில் புரள்வதெல்லாம்.

பல நிலா பார்த்த இரவுகளில்
இருள் பிசுபிசுக்கும்.
பிசுபிசுக்கும் அதை முகர்ந்தால்
இரத்த வெடுக்கிருக்கும்.
சாச்சா! கேள், கடற்கரையில் நுரைபோல மனிதனது
இதயம் மிதந்து வந்து
குருட்டு நண்டின் கால் இடறி உடையும்.
ஊர் மூக்கைப் பொத்தும்.
நாற்றம்!

நாங்களென்ன நிலா பார்த்து ரசிக்காமல் புரண்டோமா,
ரசித்தோம்தான்!
சா பூமி பிறந்தால்
சாவே பெரு வாழ்வு!
நீ மட்டும் கண்கலங்கி, என் பெண்டாட்டி பிடவையினை
கொசுவிக் கட்டி கடப்புக்குள் ஓடுதல் போல்
மீன் வாங்கத் தெருவில்;
ஓடுகின்றாய் அவசரமாய்,சாச்சா! இது நியாயமில்லை!
வால் ஒட்டி
உன் வெயிலை மீண்டும்
அள்ளியெறி ஒரு துண்டு போட்டேனும் பொருத்தி.
ஒட்டு வெயில் விழுந்த தினம் என்றாலும் எங்களூரில்
பச்சை கருகாது, எங்கள் மூத்தம்மா அவித்த நெல்லுப்
பாயும் கிடக்கிறதே காயாமல்.

*சாச்சா-சித்தப்பா

10.2.96.

சோலைக்கிளி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







# எப்போது வருவோம் : எங்கள் தாயகமே!

## -வடக்கு முஸ்லிம்களின் துயரமிகு வாழ்வு

-எம்.பௌசர்

எமக்கொரு சுதந்திரமிருந்தது;
எமக்கென்றொரு நிலமிருந்தது;
எமக்கென்றொரு வீடு இருந்தது;
எமக்கென்றொரு சுற்றமிருந்தது;
இன்று எங்களுக்குரிய இவையெல்லாம் எங்கே? அனாதைகளாய்; அகதிகளாய் தெருவில் தவிக்கும் அவல மானிடராய் அல்லல்பட்டுக் கிடக்கிறோம்.
இது எப்படி எமக்கு நேர்ந்தது?
யாரெமக்கு இக் கொடுமைகளை இழைத்தார்?
நாமென்ன செய்தோம் இவர்களுக்கு?

அது 1990, ஒக்டோபர் மாதம் 30ம் திகதி, நாங்கள் பிறந்த; எம்மூதாதையர் வாழ்ந்த எம்பிரிய மிக்க வடக்கு மண்ணைவிட்டு பலாத்காரமாக துரத்தப்பட்ட கடைசி நாள்! இரண்டு மணி நேர அவகாசத்தின் ஊடே; ஒஸ்மானியக் கல்லூரியில் திரட்டப்பட்ட முஸ்லிம்களை; யாழ் மண்ணை விட்டு ஓடி விடுமாறு புலிகள் பலத்கரித்து நின்ற போது; எங்கள் வாழ்வில் பேரிடியொன்று விழுந்து விட்டதாகவே உணர்ந்தோம்!

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் பாரம்பரியமாக வாழ்ந்து வந்த எம்மை; இனச்சுத்திகரிப்பு நோக்கில் புலிகள் துரத்திய போது எங்கே போவதென்று எமக்குத் தெரியவில்லை. 16, 400 குடும்பங்கள் இரவோடு இரவாக வடக்கை விட்டு விரட்டப்பட்டன.

அழுதோம், அடம்பிடித்தோம், மனிதாபிமானத்தை கிஞ்சித்தேனும் எதிர்பார்க்க முடியாத துப்பாக்கிக் குழாய்கள் எம்மீது கருணை காட்டவில்லை. சுற்றமிருந்த தமிழ் மக்கள் கண்ணீர் விட்டனர். வேதனை கொண்டனர். நெஞ்சம் வெடித்தழும் சோகம் தாளாமல், உடுத்த உடைக்கு மாற்றில்லாமல் எம்பிரிய மிக்க தாயகத்தை விட்டு வந்தோம்.

அன்றுடன் இருள் கப்பிய எமது வாழ்வு இன்னும் புலரவில்லை. 5 வருடங்கள் கழிந்து விட்டன; அகதி முகாம்களிலும் அந்நிய வீட்டுத்திண்ணைகளிலும் அபலைகளாக அனாதைகளாக காலம் தள்ளிக் கொண்டிருக்கிறோம். புத்தளம், கொழும்பு, கம்பஹா, அனுராதபுரம், களுத்துறை, மாத்தளை மாவட்டங்களில் எங்கள் சொந்தங்கள் சிதறிக் கிடக்கின்றன.

பார்க்கும் நெஞ்சங்களை உருக்கும் - எங்கள் அகதி முகாம்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

கிடுகுகள் இன்று வானம் தெரியும் கொட்டில்கள், ஈரம் கசிந்து படுக்கையை நனைக்கும் தரைகள், குடிப்பதற்குக் கூட சுத்த மான நீரில்லாது தவித்து நிற்கும் மக்கள், உலர் உணவு நிவாரணம் என்ற போர்வையில் உண்பதற்குக் கூட தரமற்ற உழுத்த அரிசிக்காய் நாள் கணக்கில் வரிசையில் நிற்கும் எமது மக்கள், கைக்குழந்தைகளுக்கு பாலில்லாது அழும் தாய்மார்கள் மருத்துவ வசதிகள் இல்லாமல், மலசல கூட வசதிகள் இல்லாமல் தொற்று நோய்க்கிருமிகளால் அரித்து, அழிந்து போய்க் கொண்டிருக்கும் மக்கள் ''முக்காடு'' போட்டு மூடி வாழ்ந்தவர்கள் முகமிழந்து போய் நிற்கும் பரிதாபம்....

வடக்கில் இருந்து துரத்தப்பட்ட முஸ்லிம்கள் இன்று புத்தளம் மாவட்டத்திலேயேதான் அதிகம் வாழ்கின்றனர். புத்தளம் மாவட்டத்தில் புத்தளம், பாலாவி, கரத்தீவு, புளிச்சாங்குளம், கனேமுல்ல, கடையாமோட்டை, விருதோடை, புழுதிவயல், பூலாச்சேனை, நுரைச்சோலை, குறுஞ்சாப்பிட்டி, கரம்பை, முசலிப்பிட்டி, கண்டங்குளி, கற்பிட்டி போன்ற கிராமங்களில் அமைந்துள்ள அகதி முகாம்களில் அல்லல் பட்டுக்கிடக்கின்றனர். புத்தளம் மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகப்பிரிவுகளில் அகதி முகாம்களில் வாழும் மக்களின் விபரம்:-(அட்டவணையில்)

| பிரதேசசெயலகப் பிரிவு. | முகாம்களின் எண்ணிக்கை | ஆண் | பெண் | குடும்பங்களின் எண்ணிக்கை | விதவைகளின் எண்ணிக்கை | மொத்தசனத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| கற்பிட்டி | 75 | 9186 | 9215 | 4243 | 631 | 18401 |
| முந்தல் | 47 | 3272 | 2806 | 1068 | 165 | 6078 |
| புத்தளம் | 14 | 2277 | 2180 | 980 | 171 | 4457 |
| வண்ணாத்தி வில்லு | 07 | 941 | 974 | 428 | 56 | 1915 |
| பள்ளம | 02 | 130 | 149 | 54 | 07 | 279 |

புத்தளம் மாவட்டத்திற்கு அடுத்ததாக, வடக்கு முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மாவட்டம் கம்பஹா மாவட்டமாகும். கம்பஹா மாவட்டத்தில் முகாம்களுக்கு வெளியேதான் அதிகமானவர்கள் வாழ்ந்து வருகின்றனர். நீர்கொழும்பு, பெரியமுல்லை. பலகத்துறை, போன்ற பிரதேசங்களில் இவர்களின் வாழ்வு கழிகிறது.



கம்பஹா மாவட்டத்திற்கு அடுத்ததாக; வடக்கு முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மாவட்டம் அநுராதபுர மாவட்டமாகும். அகதி முகாழ்களிலும் முகாம்களுக்கு வெளியேயும் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அநுராதபுரம், நொச்சியகம, இக்கிரிகொல்லாவ, கலாவெவ, மதவாச்சி, போன்ற பிரதேசங்களில் வடக்கு முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர்.

அநுராதபுர மாவட்டத்திற்கு அடுத்ததாக வடக்கு முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மாவட்டம் களுத்துறை மாவட்டமாகும். பாணந்துறை, சரிகமுல்ல, பலக்த்துறை, அம்பலாந்தொடுவ போன்ற ஊர்களில் அகதி முகாம்களிலும் தனியார் காணிகளிலும் இவர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

களுத்துறை மாவட்டத்திற்கு அடுத்ததாக முஸ்லிம்கள் அதிகமாக வாழும் மாவட்டம் கொழும்பு மாவட்டமாகும், மட்டக்குளி, மருதானை, மாளிகாவத்தை, வெள்ளவத்தை ஆகிய பகுதிகளில் உள்ள அகதிமுகாம்களிலும் அகதி முகாம்களுக்கு வெளியேயும் வடக்கு முஸ்லிம்கள் வாழ்கின்றனர். சிலாபம், மாத்தளை, கண்டி மாவட்டங்களிலும் குறிப்பிட்ட தொகை வடக்கு முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர்.



யாழ்ப்பாணம் பொம்மை வெளியைச் சேர்ந்த பீடித் தொழிலாளி ஏ.சி. அபூசாலி அவர்கள் தங்களது நிலைபற்றி தெரிவிக்கையில் ''நான் யாழ்ப்பாணத்திலேயே பிறந்தேன். எனக்கு இப்போது 48 வயதாகிறது. எனது வாழ்நாளின் பெரும்பகுதியை அம்மண்ணிலேயேதான் கழித்தேன், புலிகள் எங்களை வெளியேற்றும் வரை; நான் யாழ் மண்ணிலேதான் மௌத்தாகி அடக்கம் செய்யப்படுவேன் என நம்பியிருந்தேன், எனது பிள்ளைகளும் பொம்மை வெளியில்தான் பிறந்தார்கள். நான் கனவினிலும் நினைக்கவில்லை எங்களுக்கு இப்படியொரு நிலை வருமென்று தமிழ் மக்களுடன் நாங்கள் அன்னியோன்யமாகவே வாழ்ந்தோம். என்ன காரணம் எனத் தெரியாது. புலிகள் எங்களைத் துரத்திவிட்டார்கள்; இங்கு நாங்கள் படும் துன்பத்தை விபரிக்க முடியாது!'' என்றார்.

யாழ்ப்பாணம் முஸ்லிம் கல்லூரி வீதியைச் சேர்ந்த ஏ.எஸ்.சலீம் தங்களது நிலைபற்றி தெரிவிக்கையில்:-

''1990ம் ஆண்டு புலிகள் எங்களை வெளியேற்றுவதற்கு சில மாதங்களின் முன்பே தான் குவைத்தில் தையல் வேலைசெய்து விட்டு யாழ்ப்பாணம் திரும்பி இருந்தேன். எனக்கு 3 குழந்தைகள், யாழ்ப்பாணத்தில் சொந்தமாக ஒரு தையற் கடையை வைப்பதற்காக குவைத்தில் நான் இரவு பகல் பாராது கஷ்டப்பட்டு உழைத்தேன். உழைத்த பணத்துடன் நாடு திரும்பிய எனக்கு சில மாதங்களில் பேரிடி வீழ்ந்தது. அனைத்தையும் பறித்து விட்டு புலிகள் எம்மை துரத்தி விட்டனர். சாப்பிடுவதற்கோ, உடுப்பதற்கோ மாற்று வழியில்லாமல் எந்த வழியும் இல்லாமல் புத்தளம் வந்தோம். சொல்லிமாளாத துன்பங்கள் எல்லாம் அனுபவித்துவிட்டோம். நாங்கள் இருக்கும் ''சோல்டன்A முகாமில் 170 குடும்பங்கள் உள்ளன. 8 மாதங்களின் முன்பேதான் எமது முகாம் தீப்பற்றி எரிந்தது, யாழ்ப்பாணத்தில் அனைத்தையும் இழந்து தவித்து வந்து; புத்தளத்தில் சேர்த்த சிறுபொருட்கள் அனைத்தும் அத்தீயில் எரிந்து சாம்பராகிவிட்டது; இரண்டு முறை அனைத்தையும் இழந்திருக்கிறோம்'' என்றார்.



மன்னாரைச்சேர்ந்த, எம்.சறூக் தங்களது நிலைபற்றி தெரிவிக்கையில்:-

அரசாங்கத்தால் வழங்கப்படும் உலர் உணவு நிவாரணம் கூட எமக்கு ஒழுங்காக வழங்கப்படுவதில்லை; தரும் அரிசியோ,மனிதர்கள் சாப்பிடுவதற்கு உகந்ததல்ல; என்ன செய்யலாம்; பசியின் காரணமாக அந்த அரிசியை சாப்பிட வேண்டியுள்ளது.கடந்த நவம்பர் மாதத்திற்குரிய உலர் உணவுதான் இப்போது வழங்கப்படுகிறது. அனைத்து இடங்களுக்கும் போய் முறையிட்டு விட்டோம். நடவடிக்கைகள் எதுவுமில்லை''என்கிறார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 'பறக்கத் மர்லினா' தங்களது நிலைபற்றி தெரிவிக்கையில் :-

''நான் யாழ்ப்பாணத்தில் 9ம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கும் போதே புலிகளால் துரத்தப்பட்டேன்; எனது கல்வி நிலை இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டது. நாங்கள் இக்கிரி கொல்லாவையில் சில காலம் இருந்தோம். அங்கு எனது தாய் மரணித்து விட்டார். மீண்டும் நாங்கள் புத்தளம் வந்துவிட்டோம்.

யாழ்ப்பாணத்தில் நாங்கள் இருக்கும் போது எங்கள் சொந்த பூமியில் இருப்பதாகவே உணர்ந்தோம். 5 வருடங்கள் கடந்து விட்ட பின்னும் இங்கிருப்பதை ஒரு வேற்றூரில் இருப்பதாகவே உணர்கிறோம். எனது கனவுகள் நிறைந்த அந்த மண்ணுக்கு எப்போது நான் திரும்பிப் போவேன் என்பதே எனது கேள்வியாகும்'' என்கிறார்.

முல்லைத்தீவைச் சேர்ந்த சுல்தான் முகைதீன் 62. தங்களது நிலைபற்றித் தெரிவிக்கையில்:-

''வாழ்நாளில் நான் இனி யாழ்ப்பாணம் திரும்பிப்போவேனா என்பது எனக்கு சந்தேகமாகவே இருக்கிறது; தமிழ் மக்களுடன் அக்காலங்களில் நாங்கள் வாழ்ந்த வாழ்க்கையை நான் இப்போதும் நினைத்துப்பார்க்கிறேன்'' என்கிறார்.

ஆஸாத் வீதியைச் சேர்ந்த முதிய தாய் எம். எச்.ஜனுபா தங்களது நிலைபற்றி தெரிவிக்கையில்:-

''எப்படியாவது சமாதானம் வந்து, நாங்கள் யாழ்ப்பாணம் போனால் போதும், அப்பதான் நான் நிம்மதியாக நித்திரை கொள்ளுவேன், இங்கு நாங்கள் படும் துன்பங்கள் அதிகம், யாருக்கும் இபபடியான வாழவு வாய்க்கக்கூடாது!'' என்கிறார்.

இம்முகாம்களில் வாழும் மக்கள், உணவுப்பிரச்சினை, உறைவிடப்பிரச்சினை, கல்விப் பிரச்சினை, சுகாதாரப் பிரச்சினை, கலாசார சீரழிவுபோன்ற பிரச்சினைகளுக்கு உள்ளாகி அடிப்படைத் தேவைகள் கிடைக்கப் பெறாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

நரகினிலும் கொடிய வாழ்வு இதுதானா எனக் கேட்கத் தோன்றுகிறது?

இவர்கள் பற்றி இன்று பேசுவார் யாரும் இல்லை. அரசியல், பொருளாதார தலைமைத்துவம் அற்ற ஒரு அபலைச்சமூகமாக இம்மக்கள் காலம் தள்ளிக்கொண்டிருக்கின்றனர். வடக்கு கிழக்கில் பணிபுரியும் தொண்டர் ஸ்தாபனங்களில் பெருமளவு இம்மக்களுக்கு தங்களது சேவையை வழங்க முன்வருவதில்லை. முஸ்லிம் நாடுகள் வழங்கும் உதவிகள் இம்மக்களின் கரங்களுக்கு நேரடியாகச் சென்றடையாமல் தனிநபர்களின் பொக்கற்றுக்களுக்குள் முடங்கி விடுகிறது.

கடந்த பாராளுமன்ற தேர்தலில் இடம் பெயர்ந்த இம்மக்களின் வாக்குகளைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதிநிதிகள் இருவர் தெரிவாகியுள்ளனர். இப்பிரதிநிதிகளால் இம்மக்களுக்குக் கிடைத்த உதவிகள், நம்பிக்கைகள் என்று பெரிதாய் எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

இம்மக்களின் துன்ப துயரம் பற்றி வெகுஜன மயப்படுத்தப்படுவதற்கு வெகுஜன ஏற்பாடுகள் இல்லாதது மாபெரும் குறையாகும். இவ் வடக்கு மக்களை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கும் அம்மக்களின் துன்ப துயரத்தை எடுத்துரைப்பதற்கும் ''வடமாகாண முஸ்லிம் உரிமைகள் அமைப்பு'', ''வடக்கு முஸ்லிம் இடம் பெயர்ந்தோர் அமைப்பு'' போன்றவை ஓரளவு உழைத்து வருகின்றன.

சகோதரர்களே!
அரசியல் வாதிகளே!
இம்மக்களின் துன்பங்கள் உங்கள் நெஞ்சங்களை நனைத்தால்; நீங்கள் இவர்கள் மீது அக்கறை காட்டுங்கள். இவர்களுக்காக குரல் எழுப்புங்கள்.
எப்போது நாங்கள் வடக்கே போவோம்?
எப்போது எங்கள் குரல்கள் எங்களுக்காக ஒலிக்கும்?
எங்கள் துயரங்களை எப்போது உலகறியும்?
என்பதே இவர்களின் இன்றைய கேள்வியாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சித்திரவதைகளும் சித்திரவதைக்குள்ளாகிச் சீவித்திருப்போரும்

ஒளவை

நீங்கள் இப் பத்தியை வாசிக்கத் தொடங்குகிறீர்கள். ஓய்வாக இருக்கும் பொழுதில் ஏதேனும் இலகுவாக வாசிக்கலாம் என்ற எண்ணத்துடன் வாசிக்கத் தொடங்கி இருத்தல் கூடும். ஆனாலும் இந்தப் பத்தி கனதியானதாக, உங்கள் மனதில் துயரத்தைக்கிளப்புவதாக அமைந்து விடக்கூடும். நான் உண்டு, என் குடும்பம் உண்டு, எங்கள் சின்னக் கனவுகள் உண்டு. என உழைத்து உண்டு குடித்து நீங்கள் வாழ்ந்த காலங்கள் போய்விட்டன. முழுமொத்தச் சமூகமும் பல்வேறு விதமான புது நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கத் தொடங்கியாயிற்று.

இது வரை காலமும் சிந்திக்காத புதிய வாழ்க்கைப்பரிமாணங்களைப் பற்றி சிந்திக்கவும் அவை தரும் பிரச்சினைகளுக்கு கூட்டாக சேர்ந்து முகம் கொடுக்கவும் வேண்டிய தேவைகள் உருவாகி உள்ளன.

நான் இங்கு விபரிக்கப் போகும் நிலைக்கு நீங்களோ, உங்கள் உறவினரோ உங்கள் அயலவரோ ஆளாகி வாழ்தல் கூடும். நீங்கள் அந்நிலைக்கு ஆளாகி இருந்திருப்பின் உங்களுக்குள்ளேயே அமுக்கப் பட்டிருந்த உணர்வுகளை இப்பத்தி கிளறி விடக்கூடும். சித்திரவதையையும் சித்திரவதைக்குள்ளாகி வாழ்பவர்களையும் (Torture Survivors) பற்றி இப்பத்தி பேசமுற்படுகிறது. குடும்ப உறவுகளுக்குள் பாவிக்கப்படும் சித்திரவதை என்னும் பதம் தன் முழு அர்த்தப்பரிமாணத்தையும் புலப்படுத்துவதில்லை. சித்திரவதை எவ்வளவு கொடூரமானது என்பதை அனுபவித்தவர்களாலும் கூட விபரிக்க முடியாது. சித்திரவதை பற்றி நாங்கள் முதலில் அறியத் தொடங்குவது சமயப் புராணக் கதைகளில் தான்.

இந்த உலகத்தில் தீமை புரிவோர் நரலோகத்தில் கொதிக்கும் எண்ணெய்க் கொப்பரைகளில் இடப்பட்டுப் பின் ஈட்டி முனைகளில் செருகி விடப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறார்கள் என அக் கதைகள் கூறுகின்றன. இந்துக்களின் சைவ சமய பாடக் கதைகளில் சமயகுரவரான அப்பர் சமணர்களால் சித்திரவதை செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கிறது. இயேசுபிரான் தலையில் முட்கிறிடம் சூட்டப்பட்டு பாரச் சிலுவை சுமத்தப்பட்டு பின் அதன் மீதே ஆணிகளால் அறையப்பட்டார் என அறிகிறோம்.

இந்தக் கொடூரமான எண்ணங்களின் தோற்றுவாய் இந்தச் சமயப்புராணக் கதைகள் தானோ என ஐயுற வேண்டியுள்ளது.

மனிதரை மனிதர் சித்திரவதை செய்யும் எண்ணம் எவ்வாறு தோன்றுகிறது என்பது துயரமான வியப்பல்லவா?

மனிதர்களின் பரம்பரை இயலை ஆராய்ந்த மருத்துவர்கள் ஒரு சில மனிதர்கள் பிறக்கும் போதே கொடூரமான இயல்புகளை வெளிப்படுத்துவதற்குரிய நிறமூர்த்த அலகுச் சேர்க்கைகளை கொண்டிருக்கிறார்கள் எனக்கூறுகிறார்கள்.

ஆனால் சித்திரவதை என்னும் செயல்முனைப்பு புறநடையான தனிமனித இயல்பினால் மேற்கொள்ளப்படும் ஒரு சிறு நிகழ்வாக கருதப்பட முடியாத ஒன்றாகும்.

ஏனெனில் சித்திரவதை என்பது ஒழுங்கு முறைக்குட்பட்ட செயல் வடிவமாக தத்தமது நோக்கங்களை அடைவதற்குரிய ஒரு ஆயுதமாக கையாளப்பட்டு வருகிறது.

உலக வரலாற்றில், மத்திய காலத்தில் குறிப்பாக 15ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் சித்திரவதை (Torture) மிக அதிகளவில் நடைமுறையில் இருந்துள்ளது. பின் அது படிப்படியாக குறைவடைந்து மீண்டும் இரண்டாம் உலக யுத்தத்தின் போது மிகப்பரவலாக இடம் பெறத்தொடங்கி இன்றளவும் நீடித்து வருகின்றது.

இரண்டாம் உலக யுத்த காலத்தில் மனித குலம் வெட்கப்பட வேண்டிய அநாகரிகமான வரலாறு எழுதப்பட்டது. ஜேர்மனிய நாசிகளால் யூதர்கள் மீது புரியப்பட்ட சித்திரவதைகளும் கொலைகளும் உலகின் ஆன்மாவை உலுக்கியதை யார் மறப்பார்?

யூத இனம் அடைந்த அவமானமும் மரணமும் ஊனமும் மனித நாகரீகத்திற்கு எதிரியானதாகும். யூத நாவலாசிரியரான லியோன் யூரிஸ் தனது நாவலான Exodus இல் அவ் அவமானத்தையும் அவலத்தையும் எழுதிச் செல்கிறார்.

சித்திரவதை யுத்தத்தின் இணைபிரியாத தோழன் என்பதை நாங்களும் இப்பொழுது உணர்கிறோம் யுத்தத்தின் போது மட்டுமல்ல சித்திரவதை.

அரசாங்கங்கள் (அரசு) விடுதலைப் போராட்ட ஸ்தாபனங்கள், பலம் பெற்ற முதலாளிகள், யாவரும் தத்தமது கொள்கைகளுக்கும் இருப்புக்கும், தமது அதிகாரத்துக்கும் அச்சுறுத்தலாக இருப்பவர்களை சித்திரவதை செய்கிறார்கள்.

பொலீஸ் குற்றவாளிகளிடம் இருந்து உண்மைகளைக் "கறப்பதற்கு"; புரட்சி செய்பவனை அழித்து விடுவதற்கு சித்திரவதை செய்கிறது.

விடுதலை இயக்கங்களோ அரசுக்கு ஆதரவானவர்களை, சக விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களை தனக்குள்ளேயே அதிகாரப் போட்டியாளரை, சித்திரவதை செய்கிறது.

ஆக, சித்திரவதை எல்லாப் புறத்திலும் வேரூன்றி உள்ளது. சித்திரவதையை ஏன் நீ செய்கிறாய் எனக் கேட்டால் தமக்கு தேவைப்பட்ட ஒரு தகவலைப்பெற அல்லது புரிந்த (புரியாத) குற்றம் ஒன்றை ஒப்புக்கொள்ளவைக்கவே, என ஒரு பொலிஸ் அதிகாரி விடையளிப்பான். விடுதலைப் போராளியை கேட்டாலோ, தேசத்துரோகம் அல்லது ஸ்தாபனத் துரோகம் அல்லது தலைமைத்துரோகம் பற்றி அறிந்து கொள்ளவே சித்திரவதை செய்தோம் என விறைத்த முகத்துடன் கூறுவான்.

ஆனால், சித்திரவதை உண்மையிலும் எதற்காகச் செய்யப்படுகிறது என்பதற்கான உண்மையான விடை அதுவல்ல.

உலகத்திலுள்ள எல்லாவகையான அதிகார சக்திகளும் தமது இருப்பை பேணவே சித்திரவதையைச் செய்கின்றன. சாதாரண குடும்ப உறவுகளில் தொடங்கி அரசு - மக்கள் உறவு வரை இதையே அவதானிக்க முடிகிறது. அதிகார அடிப்படையிலான மனித, சமூக உறவுமுறைகளைப் பேண சித்திரவதை உதவுகிறது.

தமிழர்களைப் பொறுத்தவரை விடுதலைப் போராட்டம் தொடங்கிய பின்னர் சித்திரவதை பற்றி நிதர்சனமான அறிவு தோன்றத் தொடங்கியது.

விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றிய இளைஞர் யுவதிகள் தேடப்பட்டனர்; சுற்றிவளைக்கப்பட்டனர், இராணுவம் வீடுகளுக்குள் புகுந்து அட்டகாசம் புரியத் தொடங்கியது. இளைஞர்கள் கைது செய்யப்படத் தொடங்கினர்.

மக்கள் நாலாம் மாடிபற்றியும், பனாகொடை இராணுவமுகாம் பற்றியும், வெலிக்கடைச் சிறைச்சாலைபற்றியும், பூசா இராணுவ முகாம்பற்றியும் கேள்விப்படத் தொடங்கினர்.

தாங்கமுடியாத சித்திரவதைகளில் அகப்பட்டு இளைஞர்கள் கதறிய குரல் கேட்டு இன்னும் இளைஞர்கள் போராட்டங்களுக்கு எழுந்தனர்.

ஆனால், காலப்போக்கில் அரச வதைக்கூடங்கள் தந்த அதிர்ச்சியையும் அச்சங்களையும் விட மோசமான அதிர்ச்சியை நாங்கள் சந்தித்தோம். இளைஞர்கள் தங்களுக்குள்ளும் ஒருவரையொருவர் சித்திரவதை செய்ய ஆரம்பித்திருந்தனர் என அறிய வந்தபோது..... மக்கள் மத்தியில் போராட்டத்தின் மானுடப் பொறுமதி பற்றிய கேள்வி பலமாக எழுந்தது.

இந்தியாவில் தமது பயிற்சி முகாமை அமைத்திருந்த புளொட் இயக்கம் தமது உறுப்பினர்களைச் சித்திரவதை செய்ய சித்திரவதைக் கூடங்களை அமைத்திருந்தமை தெரியவந்தது. தலைமையின் பிழையான போக்குகளுக்கு எதிராக குரல் எழுப்பியவர்கள் சித்திரவதை செய்யப்பட்டனர். அந்தச் சித்திரவதைக் கூடங்களில் எழுந்த அவலக் குரல்கள் கோவிந்தனின் 'புதியதோர் உலகம்' நாவலில் பிரதிபலிக்கின்றன.

முன்னணி நிலையில் இருந்த விடுதலைத் தாபனங்களான விடுதலைப் புலிகள், புளொட், டெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப்., ஈரோஸ் ஆகிய யாவும் ஜனநாயக உறவுகளை மழுங்கடிக்கும் விதத்தில் சித்திரவதை என்பதை ஏதோ ஓரளவில் பயன்படுத்தத் தொடங்கிவிட்டிருந்தன. அதிகாரவெறியும் மிருக குணமும் எங்கள் போராட்டத்துடன் இணைந்து வளர்ந்தது. எவ்வாறெனினும் சித்திரவதை என்பது ஒழுங்கு முறைக்கு உட்பட்ட வடிவமாக கையாளப்படத் தொடங்கியது. புளொட்டிற்குப் பிற்பாடு புலிகளாலேயாகும்.

விடுதலைப் புலிகளின் துணுக்காய் இராணுவமுகாம் சித்திரவதைகளுக்கு பிற்காலத்தில் பெயர் பெறத்தொடங்கியது. தம்மை இலங்கை இராணுவத்திற்கு காட்டிக்கொடுக்க முனைந்தவர்கள் தமது சிவில் நிர்வாகம் நிலவிய பிரதேசங்களில் கைதுசெய்யப்பட்ட கிரிமினல் கைதிகள், மாற்றுக் கருத்துக் கொண்ட அரசியல் கைதிகள் ஆகியோரை ஆங்காங்கே அமைக்கப்பட்டிருந்த முகாம்களில் சித்திரவதை செய்யும் போக்கை கடைப்பிடித்தனர்.

87ம் ஆண்டின் முற்பகுதி தலைமறைவு அமைப்பாக செயற்பட்டார்கள் எனும் சந்தேகத்தில் தடை செய்யப்பட்ட இயக்கம் ஒன்றில் இருந்த சில இளைஞர்களை புலிகள் கைது செய்தனர். (இந்திய இராணுவம் வருவதற்கு முன்பு) பலமாதச் சித்திரவதைகளின் பின்பு அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். ஆனால், விடுவிக்கப்பட்டவர்கள் சித்திரவதையின் விளைவுகளை சுமந்தே வந்தனர். முகம் உப்பி, உடல் வீங்கி, உடல்மூட்டுக்கள் யாவற்றிலும் நோவை சுமந்தே வந்தனர். வீதியில் செல்லும் வாகனங்கள் யாவும் தம்மை கைது செய்பவர்களை சுமந்து வருவதாக எண்ணிக் கலக்கமுற்றனர்.

வாழ்க்கை அவர்களுக்கு வெறுமையாகத் தோன்றியது. 86ம் ஆண்டு காலப்பகுதி என நினைக்கிறேன். இலங்கை இராணுவத்தினால் சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். பூசா இராணுவ முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். பாரிய பண பல முயற்சிகளின் பின் விடுதலை செய்யப்பட்ட இளைஞன் ஒருவன் இராணுவச் சித்திரவதைகளால் பாலுறுப்பில் குறைபாடு உடையவனாகவே வெளிவந்தான். இக்குறைபாடு காரணமாக அவ்விளைஞன் தான் நேசித்த பெண்ணை பிரிந்ததுடன் அவனுக்கு வாழ்க்கையும் வெறுமையானது. ஆண்மைகுறித்த எமது சமூகக் கருத்துக்கள் இவ்வாறானவர்களை ஆண்கள் எனக் கருதுவதற்கு இடமளிப்பதில்லை. ஆணாதிக்க சமூக மதிப்பீடுகள் அவனுக்கு தாழ்வுச்சிக்கல் தோன்றக் காரணமாகின.

எமது விடுதலைப் போராட்ட வரலாறு முழுவதும் பலபெண்கள் இராணுவத்தினரால் பாலியல் சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இலங்கை - இந்திய இராணுவங்களினால் பாலியல் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்ட பெண்கள் பாலியல் சித்திரவதைக்குள்ளான ஆண்களை விடவும் மோசமான பாதிப்புக்களுக்கு உட்பட்டனர். கற்பு பற்றி நிலவும் கோட்பாடுகள் இந்தப் பெண்களை இன்னும் சித்திரவதை செய்கின்றன. மேலும் இவ்வாறு அறியப்பட்ட பெண்களை தமது பாலியல் இச்சைக்கும் இலகுவாக பயன்படுத்தக் கூடியவர்களாக கருதும் போக்கு எமது சமூகத்தில் நிலவுகின்றது.

87ம் ஆண்டின் பிற்பகுதியில் எங்கள் பிரதேசமெங்கும் கறையான் புற்றுக்கள் போல இந்திய இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டன. எனது வீட்டிற்கு தெற்குப் புறமாக நூறு யார் தூரத்தில் இந்திய இராணுவ முகாம் ஒன்று இருந்தது. அங்கிருந்து அவ் இராணுவ முகாம் அகலும் வரை ஒவ்வொரு இரவும் இளைஞர்களின் அவலச்சத்தங்களால் நிரம்பியது. நாங்கள் அவற்றை கேட்க நேர்ந்த கையாலாகாத் துயரம் மனதைப் பற்றிக்கொள்ள மௌனமாக இருந்தோம். ஈரல் கருகியது என்பார்களே, இரத்தம் வற்றியது என்பார்களே, அதுவேதான். ஏன் இப்படி நிகழ்ந்தது? ஏன் இப்படி நிகழ்கிறது??

நான் அறிந்தவைக்கு அப்பால் இன்னும் இன்னும் நெஞ்சைப்பிழியும் அனுபவங்கள் உங்களுக்குள் உறைந்து போயிருக்கலாம். அச்சத்தாலும் புரிந்து கொள்ள மனிதர்கள் இல்லாததாலும் அவை உங்களுக்குள் கிடந்து உங்களை சித்திரவதை செய்யக்கூடும் உங்கள் ஆத்ம உயிர்ப்பை அழித்துக்கொண்டிருக்க கூடும். நாங்கள் இவற்றுக்கு எதிரான புதிய வாழ்க்கை நிலைமைகளை- மதிப்பீடுகளை உருவாக்கிக்கொள்ள வேண்டும்.

இனிச்சித்திரவதை என்பது எவ்வாறு ஒழுங்கு முறைக்குட்பட்ட ஒரு வடிவமாக உள்ளது என்பதைக் கவனிப்போம்.

### சித்திரவதை (Torture) வரைவிலக்கணம்:

திட்டமிட்ட ரீதியில் தனி ஒருவர் மீதோ அல்லது பலர் மீதோ தானாகவோ, அல்லது ஏதாவது ஒரு அதிகார சக்தியின் உத்தரவினாலோ புரியப்படும் உடல் உள வேதனைகளை சித்திரவதை எனலாம்.

### சித்திரவதையின் நோக்கம் ( Purpose of the Torture)

சித்திரவதையின் நோக்கம் குற்றத்தை ஒப்புக்கொள்ளச்செய்தல் அல்லது தேவைப்படும் தகவல் ஒன்றைப் பெறுதல் எனப்படுகிறது. ஆனால் குற்றம் ஒன்றை நிரூபிப்பதற்கு வேறுபல வழிகள் இருக்கின்ற போதும், தேவைப்பட்ட தகவலைப்பெற வேறுவழிகள் உள்ள போதும், அல்லது அந்தத்தகவல்கள் பெறப்பட்ட பின்னரும் கூட சித்திரவதை மேற்கொள்ளப்படுவதேன்?


சாட்சி (Victim) ஒருவரை சித்திரவதைக்குள்ளாக்குவதன் மூலம் அவரது உடலை மட்டுமன்றி உள்ளத்தையும் அதாவது அவரது ஆத்ம உறுதியையும் அழிக்க விரும்புகிறார்கள்.

சாட்சி ஒருவரின் தனிப்பட்ட ஆளுமையை ஏன் அழிக்கவேண்டும்?

இத்தகைய சந்தர்ப்பம் அதிகார சக்திகளுக்கு மிகவும் தேவையானதாகும். ஏனெனில் அரச அமைப்பை எதிர்த்து புரட்சி செய்பவர்கள். பிழையான சமூக அதிகாரத்தை எதிர்ப்பவர்கள் பிழையான தலைமையை எதிர்பவர்கள் போன்றவர்கள் அவற்றுக்கெதிரான உள்ளத்தையும் அவற்றுக்கெதிரான வாழ்க்கை எப்படி இருக்கவேண்டும் என்ற கற்பனையையும் கொண்டிருக்கிறார்கள். எனவே இத்தகையவர்களின் மன உறுதியையும் கொள்கைகளையும் உடைத்து விடுவது அதிகார சக்திகளுக்கு அவசியமானதாகும். "பொலிசை எதிர்க்காதே! அரசாங்கத்தை எதிர்க்காதே! தலைமையை எதிர்க்காதே! எங்களை விமர்சிக்காதே! விமர்சித்தால் உனக்கு என்ன நடக்கும்!" என உணர்ந்த சாட்சியை சித்திரவதை செய்து நடைப்பிணமாக்க வேண்டிய தேவை உள்ளது.

இவ்வாறு சித்திரவதை செய்து நடைப்பிணமாக்கப்பட்டவரை காணுகையில் சமூகத்தினரிடையே ஒரு அச்ச உணர்வு பரவுகிறது. இந்த அச்ச உணர்வு அதிகாரத்துக்கு எதிரான சக்திகளுக்கு எச்சரிக்கையாகும்.

சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையின் படி உலகின் ஆறில் ஐந்து பங்கு நாடுகளில் அரச ரீதியான சித்திரவதைகள் இடம் பெற்றுவருகின்றன. உலகம் முழுவதும் அகதிகளாகி உள்ளவர்களில் 10%, 30% மானவர்கள் சித்திரவதைக்குள்ளானவர்களே ஆகும்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## மகஸீன் சிறையில் தமிழ் கைதிகள் மீது தாக்குதல் :

# மூன்றாவது அற்புதம்?

''இரகசிய முகாம்களிலும் தடுப்பு, முகாம்களிலும் எந்த வித சட்ட நடவடிக்கைகளுக்கும் உட்படுத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கிற அனைவரும் உடனடியாக விடுதலை செய்யப்படுவார்கள். அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கான முயற்சிகள் துரிதமாக்கப்படும்.''

இது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் அதிகாரத்துககு வருவதற்கு முன் அளித்த வாக்குறுதி. (பார்க்க - தேர்தல் விஞ்ஞாபனம்) அதிகாரத்திற்கு வந்தபின், ஜனாதிபதி சந்திரிகா, 1995 ஜனவரி மாதம் 6ம் திகதியன்று பாராளுமன்றத்தில் ஆற்றிய அரச கொள்கை விளக்க உரையின் போது....

''எமது அரசாங்கம் பொறுப்பேற்றபோது எந்த வித நீதி விசாரணையுமின்றி விடுதலை மறுக்கப்பட்ட பலர் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். அவர்களில் பலர் சட்டத்தின் உதவியேயின்றி ஐந்து வருடங்களுக்கும் மேலாக நீண்ட கால தடுப்பில் இருக்கின்றனர். இந்நிலைமை தொடர்வதற்கு எனது அரசாங்கம் சிறிது கூட அனுமதிக்காது....'' எனக் குறிபபிட்டிருந்தார்.

இன்று அரசாங்கம் பதவியேற்று ஒன்றரை வருடங்களும் கழிந்து விட்டன. அரசாங்கம் அளித்த வாக்குறுதிகள் பல பம்மாத்து என்பது அம்பலத்துக்கு வந்து கொண்டேயிருக்கின்றன. அவற்றில் ஒன்று மேற்படி வாக்குறுதி.

முன்னைய அரசாங்கத்தின் மனிதப் புதைகுழிகள் தொடக்கம் இரகசிய முகாம்கள், கண்மூடித்தனமான கைதுகள், கடத்தல்கள், வதைகள், படுகொலைகள், தடுப்புக்காவல், இராணுவ வெறியாட்டங்கள், இனப்படுகொலைகள்... என எல்லாவற்றையும் கண்டித்ததுமல்லாமல், அவற்றுக்கெதிரான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் தமது அரசாங்கத்தில் அப்படி எதுவும் நடக்காதென்றும் அள்ளி, அள்ளி வீசிய வாக்குறுதிகள் வழமைபோல பொய்யாகி விட்டன.

இந்த அரசாங்கம் மட்டுமல்ல இந்த அரச அமைப்பு முறையின் கீழான எந்த ஆளும் அதிகார வர்க்கமும் அடக்கு முறைக்கு எதிராக பேசுவதும், பின்னர் அதே அடக்கு முறைக்கு தலைமை கொடுப்பதும் யதார்த்தமானது.

அண்மைக்காலங்களில் அம்பலத்துக்கு வந்த மேலும் சில சம்பவங்கள் இதை உறுதி செய்கின்றன. அவற்றுள் ஒன்று தான் மகஸீன் சிறைச்சாலையில் தமிழ்க்கைதிகள் வெறித்தனமாகத் தாக்கப்பட்ட சம்பவம். இந்த நடவடிக்கையில் அரசாங்கத்தின் பாத்திரம் நிச்சயமாக கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று.

இந்த விடயத்தில் அரச யந்திரத்தை பாதுகாக்கின்ற காவல் நாய்களான, அரச தொடர்பு சாதனங்கள் (லேக்ஹவுஸ் பத்திரிகைகள், ரூபவாஹினி, லங்காபுவத் சேவை) நீதித்துறையாற்றிய பங்கு என்பன அம்பலப்படுத்தப்பட வேண்டியவை.

மகஸீன் சிறைச்சாலை கொழும்பு தெமட்டகொடைக்கும் பொரல்லைக்குமிடையிலான பேஸ்லையின் வீதியில் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு இடது புறமாக அமைந்துள்ளது. 1983 யூலை இனப்படுகொலையின் போது வெலிக்கடையில் 53 தமிழ் அரசியற் கைதிகள் (குட்டிமணி, தங்கத்துரை உள்ளிட்ட) சிங்களக்காடையர்களால் கொல்லப்பட்டிருந்தனர். அந்த வெலிக்கடையையும் மகஸீன் சிறைச்சாலையையும் பிரிப்பது ஒரு சிறு பாதையும் இரண்டு மதில்களுமே. வெலிக்கடையில், குற்றச்செயல்கள் புரிந்த கைதிகளும், தமிழ் சந்தேகநபர்களுமே பெரும்பாலும் அடைக்கப்பட்டுள்ளனர். 'புதிய மகஸீன்' சிறைச்சாலையில் அரசியல் கைதிகளே பெரும்பாலும் தடுத்து வைக்கப்படுகின்றனர். (குறிப்பாக ஜே.வி.பி. மற்றும் புலிச் சந்தேக நபர்கள்)

மகஸீன் சிறைச்சாலையில் துப்பரவு செய்தல், சமையல் செய்தல், போன்ற வேலைகளைச் செய்விப்பதற்காக வெலிக்கடையிலிருந்து தண்டனை பெற்ற சிறைக்கைதிகள் கொண்டு வரப்பட்டு தனியாக அடைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் J எனும் வார்ட்டிலியே அடைக்கப்பட்டுள்ளனர். தாக்குதல் சம்பவத்தில் ஈடுப்பட்ட வெறியர்களும் இவர்களே. இத்தண்டனை பெற்ற கைதிகளினால் நீண்ட காலமாகவே தமிழ் அரசியல் கைதிகள் அச்சுறுத்தல்களுக்குள்ளாகி வந்திருக்கின்றனர். இது பற்றி குறிப்பிட்ட தமிழ் கைதி ஒருவர் ''இச்சம்பவம் எந்த நேரத்திலும் நடக்கலாம் என்ற அச்சம் சகல கைதிகள் மத்தியிலும் காணப்பட்டது. குறிப்பாக கொலன்னாவைச் சம்பவத்தின்போது அதிகளவான பீதி காணப்பட்டது. அதேபோல் மத்திய வங்கிக் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் போதும் உள்ளே பீதி நிறைந்த நிலை காணப்பட்டது. சிறைக்கு வெளியிலும் களேபரங்கள் எதுவும் பெரிதாக இல்லாததனால் தப்பித்தோம் இல்லாவிட்டால் இழப்புக்கள் நேர்ந்திருக்கும்.'' என்கிறார். இப்படியாக கொழும்பு நிலைமை சூடு பிடித்துக் கொண்டு வந்த நேரத்திலேயே இந்த வெறியாட்டச் சம்பவம் நடந்தது.

### திட்டமிட்ட கெடுபிடி நிலை:

சம்பவம் நடந்த தினத்தன்று வழக்கம் போல கைதிகளை 6.15க்கு திறந்துவிட்டு மீண்டும் 7 மணிக்கு அடைத்தார்கள். இந்த நேரத்திற்குள் கைதிகள் தங்களது காலைக்கடன்களை முடிப்பது வழக்கம். மீண்டும் 8.00 மணிக்கு திறந்து விட்டார்கள். (இந்த நேரத்தில் விளையாடுவது, குளிப்பது போன்ற நடவடிக்கைகள் செய்வர்) அன்றைய தினம் ஜெயிலர் சரத் சந்திர தலைமையிலான 25 பேரைக்கொண்ட சிறைக்காவலர்கள் தமிழ்க் கைதிகள் உள்ள பகுதிகளை சுற்றி வளைத்து சோதனையிட்டனர். வெளியே போன கைதிகளை உள்ளே வரவிடாமல் தடுத்தும் அதே நேரம் சோதனை செய்யப்பட்ட கைதிகளை சுற்றிவளைப்பு வலயத்துக்கு வெளியேயும் விட்டனர். 8.30 மணியளவில் சிரேஸ்ட பொலிஸ் இன்ஸ்பெக்டர் தலைமையிலான 15 பேரைக் கொண்ட குழுவொன்று வார்ட்டுகளையும் சோதனையிட்டது. வழமைக்கு மாறான ஏதோவொன்று நிகழ்வதை உணர்ந்த கைதிகள் பீதி கொண்டனர். பொறுமையாக அவதானித்தனர். சோதனை போட்டவர்கள் எதனையும் கண்டுபிடிக்காத நிலையில் வெளியேறினர். இவர்களது சோதனை முடிந்ததன் பின் வெளியே விடப்பட்ட கைதிகள் வார்ட்டுக்குள் மீண்டும் அடைக்கப்பட்டு 9 மணியளவில் பூட்டப்பட்டனர்.

இதே வேளை தண்டனை பெற்ற சிங்களக்கைதிகள் 20 பேர் தோட்ட வேலைக்காக ஆயுதங்களுடன் வந்து சேர்ந்தனர். இவர்களோடு தலைமை சிறையதிகாரியும் பியசேன எனும் சிறைக்காவலரும் இருந்தார்கள். பியசேனவின் கையில் இரும்புத்துண்டுகள் காணப்பட்டன. இவர்கள் தமிழ்ச் சிறைக்கைதிகளால் அத்தனை காலம் விருப்பமாக வளர்க்கப்பட்ட குரோட்டன் செடிகள், ஜாம்மரம் ஏனைய பூ மரங்கள் என்பவற்றை வெறித்தனமாக வெட்டியெறிந்தனர். நிலத்தையும் வெறித்தனமாகக் கிண்டினர். மரங்களையும் வேரோடு சரித்தனர். இந்த அல்லோலகல்லோலங்களை வார்ட்டுக்குள் உள்ளேயிருந்து கொண்டே தமிழ்க் கைதிகள் ஏக்கத்துடனும் பீதியுடனும் பார்த்துக்கொண்டிந்தனர். அந்த வெறியாட்டம் புரிந்தவர்களோடு, சிறைக்காவலர்களும் சேர்ந்திருந்ததைக் கண்டு ஆச்சரியமும் சந்தேகமும் கொண்டனர். எல்லாமே அன்று வழமைக்கு மாறாக நடந்தது.

மதிய உணவுக்காக 12.15க்கு கைதிகளை திறந்து விட்டபோது தான் வெளியில் உள்ள கோரத்தனமான நிலையை தமிழ்க்கைதிகள் முழுமையாகக் கண்டனர்.

### இனவெறியாட்டம்

இரண்டு மணியளவில் கைதிகள் தங்களது பொழுதைக் கழிப்பதற்காக திறந்து விடப்பட்டனர். அந்த நேரத்தில் E.F வார்ட்டுக்களின் காவலர் ஒருவர் தமிழ்க் கைதியான சுதாகரனை (வயது 17) அழைத்து, வெட்டப்பட்டுக்கிடந்த மரங்களை சுத்தப்படுத்துமாறு பலவந்தப்படுத்தினார்.

இது 'தமிழ் அரசியல் கைதிகளின் வேலையல்ல' என்றும் தன்னால் முடியாது என்றும் கூறவே தூஷண வார்த்தைகளால் திட்டி அச்சுறுத்தியிருக்கிறார் அந்தக் காவலர். இதைக் கண்டுவிட்ட கண்ணன், சுதாகரனை அழைத்து வர முயற்சித்தபோது அந்தக் காவலர் கண்ணனின் கன்னத்தில் அறைந்தார். இதைக்கண்டு ஏனைய காவலர்களும் வந்து கண்ணனைக் கடுமையாகத் தாக்கினர். (தமழ்க் கைதிகள் சிலர் இதனைப் பார்த்துக்கொண்டிருந்தனர்) இரண்டாவது காவலர் திடீரென்று விசில் ஊதியதுமே எட்டுப் பேர் குண்டாந்தடிகளுடன் ஓடி வந்தார்கள். இந்த குண்டாந்தடிகள் 4 அடி நீளமானவை. விசில் ஊதியதுமே இவர்கள் தயார் நிலையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தவர்களைப்போல் வந்து நின்றனர். அதுமட்டுமன்றி இவர்கள் கைகளில் காணப்பட்ட குண்டாந்தடிகள் 3 மட்டுமே களஞ்சியத்தில் இருந்தது. ஏனைய அனைத்தும் தலைமை ஜெயிலரின் (வரைபடத்தில் 28ம் இலக்கம்) அலுவலத்திலேயே இருந்தது. இவை எப்படி திடீரென்று இவர்கள் கைக்கு வந்தது. எனவே இந்நிகழ்வுகள் திட்டமிட்டு நடந்துகொண்டிருப்பதை அவதானிக்க முடிந்தது.

கண்ணன் அடி தாளமுடியாது ஓடிப்போகும் போது தண்ணீர் தொட்டியருகில் விழுந்தார். வரைபடத்தில் இல.36) விழுந்த கண்ணனை கயிற்றால் பிடித்துக் கட்டி எட்டுபேருமாக பொல்லுகளால் கடுமையாகத் தாக்கினர். இரத்தம் கொட்டிக்கொண்டிருந்த நிலையில் ஏனைய தமிழ்க்கைதிகள் கண்ணனை வார்ட்டினுள் (E வார்ட்) தூக்கி வந்து கிடத்தினர். அரை மயக்க நிலையில் இருந்த கண்ணன் படுத்திருந்தபோது சந்தன, கருணாதிலக்க, வல்பிட்ட ஆகிய மூவரும் நுழைந்து கண்ணனை மீண்டும் அடித்து வெளியே இழுத்துச் சென்றனர். மயக்கநிலையில் இரத்தம் ஒழுகிக்கொண்டிருந்த நிலையிலும் தரதரவென்று இழுத்துச் சென்றனர்.

இந்த நேரத்திலேயே சிறைக்காவலர் ஏ.கே. சந்திரசிறி தலைமையில் (இவர் அடுத்த நாள் அடையாளம் காட்டப்பட்டவர்.) 15 பேர் குண்டாந்தடிகளுடன் ஓடிவந்தனர். இவர்களுடன் தண்டனைபெற்ற சிங்கள சிறைக்கைதிகள் பலர் அலவாங்கு கத்தி, கடப்பாறை, கோடாரி என்பவற்றுடன் வெறித்தனமாக ஓடிவந்தனர். 2.30 மணியளவில் 25 காவலர்களும் 8 பொலிசாரும் இரும்புக்கம்பிகள், பெரிய மர அகப்பை பொல்லுகள் என்பவற்றுடன் வெறித்தனமாக ஓடிவந்தனர். இவர்கள் தமிழ் அரசியல் கைதிகள் இருந்த A,B வார்ட்டுகளுக்குப் போக எத்தனித்தனர். ஆனால் அப்பகுதிகளுக்கான கேட் (வரைபடத்தில் இல.5க்கு அருகிலுள்ளது) பூட்டப்பட்டிருந்ததால் கேட்டை தட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். தூஷண வார்த்தைகளால் திட்டினர். அப்பகுதி மூடப்பட்டதாலேயே அங்கிருந்த தமிழ்க் கைதிகளின் உயிர்கள் தப்பித்தன என்பது கவனத்திற்கொள்ளத்தக்கது. அதே வேளை இந்தத் தண்டனை பெற்ற இனவெறிபிடித்த கைதிகள் அவர்களது வெறித்தனத்தைச் செயற்படுத்த பெரும்பாலான சிறைக்காவலர்கள் அனுமதித்திருந்தனர் என்பதும் தெளிவானது.

இதில் அன்றைய தினம் 27பேர் இருந்தனர். E வார்ட் மட்டும் பூட்டியிருக்கவில்லை அதற்குள் நுழைந்த சந்திரசிறி தலைமையிலான கோஷ்டியினர் அதற்குள் புகுந்து முக்கிய சம்பவங்களைச் சுட்டிக்காட்டி அச்சம்வங்களுக்குள்ளான சந்தேகநபர்கள் ஒவ்வொருவராக அழைக்கப்பட்டனர்.

''ஜே. ஓ.சி. புலி எங்கே?'' (சந்தேக நபர் அருணாசலம் சுரேந்திரன் என்ற இளைஞர் அச்சத்தால் சுவரோடு ஒட்டிக்கொண்டார் மதன்ராஜ் என்ற இன்னொரு கைதி அவரை மறைத்தபடி நின்றார்)

''கிளன்ஸி கேஸ் புலி எங்கே?''


''லலித் கேஸ் புலி எங்கே...?''

இப்படிக் கேட்டுக்கொண்டே போக, பியசேன எனும் காவலாளி 'இதோ இங்கிருக்கிறான்!' எனக் காட்டி அடித்து இழுத்தான். ஏனையோரையும் தாக்க முயற்சி செய்தபோது ''ஐயோ! எங்களைக் கொன்று போடாதீங்கோ'', அடிக்காதீங்கோ''என்று கதறினர். கெஞ்சினர். அச்சத்தால் கத்தினர்.

அப்போது ஷஹீர், லிங்கேஸ்வரன், பரமேஸ்வரன் மற்றும் அந்த வார்ட்டில் கைதிகளின் தலைவர் சந்திரசேகரன் என்பவர்களை மாத்திரம் இனங்கண்டு அடித்து நொறுக்கினர். இவர்கள் இன்னொரு பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டு சுமார் 30 பேரால் பியசேன தலைமையில் தாக்கப்பட்டனர். இவர்களில் லிங்கேஸ்வரன் D வார்ட் பக்கமாக ஓடினார். சுதாகரன் C வார்ட் அருகில் உள்ள பூச்செடிகளுக்குள் ஒளிந்து கொண்டார். ஷஹிர் களஞ்சியத்தைச் சுற்றி ஓடினார். (வரைப்படத்தில் இல. 15) பரமேஸ்வரனும் சந்திரசேகரனும் சமையலறைப்பக்கம் ஓடினர். அந்த இடத்திற்கு ஓடிவந்த தண்டனை பெற்ற சிங்களக் கைதிகளும் சேர்ந்து கொண்டு விறகுக் கட்டை, இரும்புப் பொல்லுகள் என்பவற்றைக் கொண்டு தாக்கினர். இவர்களது அடியினால் சந்திரசேகரனின் மண்டை பிளந்தது. பரமேஸ்வரனுக்கு கால்முறிந்தது, லிங்கேஸ்வரனைத் துரத்திப் போன போது D வார்ட்டினுள் நுழைந்து 'காப்பாற்றுங்கள். காப்பாற்றுங்கள்' என அவர் கத்தினார். அதற்குள் துரத்தி வந்தவர்கள் ''எவரும் தலையிடாதீர்கள்'' என எச்சரித்தனர். காவலாளிகளில் ஒருவரான வசந்த குமார என்பவர் லிங்கேஸ்வரனின் காலைக்கட்டிப்பி

டித்து வீழ்த்தியபின்
யால் இடது பக்க இடு
பட்டார். பல தடவைக
(இடுப்பில்) பட்ட அ
என கதறியவாறே ம
லிங்கேஸ்வரன்.
மதுபோதையிலேயே
இருந்தார்கள். அவர்க
கைதிகளைப் பார்த்
பல்லோ! உங்களுக்கு
திருக்கிறோம். எங்க
என்ன? எங்களை அ
மையாக வைத்திருக்
அப்போது தான் தமி
காலையிலிருந்து ந
டத்தை நியாயப்படுத்
வாக்கிவிட்டனர் என்
அரசைச்சார்ந்த தெ
தமிழ்ச் சிறைக்கைதி
யோட முயற்சித்ததா
யப்படுத்தின)
பிற்பகல் 3 மணியா
ய்டசகர் அந்தப்பக்க
மில்லாமல் இருங்க
கவனிக்க வேண்டு
னிக்கிறோம்'' என கூ
தமிழ்க் கைதிகளுக்கு
டுச் சென்றார்.
அவர், லிங்கேஸ்வர
இழுப்பதைப்பார்த்து
போது குமார எனும்
னின் முகத்திற்கு கா
இறுதியில் மயங்கி
தோய்ந்த நிலையில்
ரையும் பெட்சீட்டு
போனார்கள். இவர்க
னர் என்றே ஏனைய

அன்றைய தினம்
தமிழ்க்கைதிகளும்
ருந்து சாப்பாட்டை
றைய இரவு 8 மண
இருகாவலாளிகள் வ
டுமே வைத்திருப்ட



### தாக்குதலுக்குள்ளான ஆறு பேர்

**சுதாகர்**

இவர் மட்டக்களப்பைச் சேர்ந்தவர். தற்போது இவரது வயது 17. இவர் கைதாகும் போது 14 வயது. கே.எஸ். ராஜாவைக் கொல்வதற்காக புலிகளால் அனுப்பிவைக்கப்பட்டவர் என்ற குற்றச்சாட்டு இவர் மீது சுமத்தப்பட்டுள்ளது. கே.எஸ். ராஜா கொல்லப்படுவதற்கு முன்னமே இவர் அந்தக் குற்றச்சாட்டின்பேரில் கைதானார்.

**லிங்கேஸ்வரன்**

யாழ்ப்பாணம் : கொழும்புத்துறையைச் சேர்ந்த இவர் கொழும்பு 'மீன்கடை'யருகில் வாகனச் சோதனையின் போது இவரிடமிருந்து பிஸ்டல் இருந்ததாக குற்றச்சாட்டு. இவரது வயது 24. லலித் கொலையுடன் தொடர்புள்ளவர் என்ற குற்றச்சாட்டு இவர் மீது சுமத்தப்பட்டுள்ளது.

**பரமேஸ்வரன்**

இவர் காங்கேசன்துறையைச் சேர்ந்தவர். வயது 25. 94ம் ஆண்டு இறுதியில் கொட்டாஞ்சேனை பரமானந்த விகாரையருகில் கண்டெடுக்கப்பட்ட வெடிமருந்துப் பொருட்களை இவர் வைத்திருந்தார் என குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

**ஷகீர்**

செல்வராசா சேகர் அல்லது அருணாசலம் சுரேந்திரன் அல்லது ஷகீர் என அழைக்கப்படும் இவர் அளவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வயது 24. ஐந்து வருடகாலமாக இவர் சிறையில் இருக்கிறார். ஜே ஓ.ஸி. வரதன் நடத்தியதாகச் சொல்லப்படும் ஏஜென்சியுடன் இவரும் தொடர்புற்றிருந்தாலேயே ஜே.ஓ.ஸி. சம்பவத்தின் நேரடியாக தொடர்புள்ளவராக இவரைக் காட்ட முயற்சிகள் செய்யப்பட்டன.

**சந்திரசேகரன்**

வயது 29. இவர்மீது கிளன்ஸி பெர்ணான்டோ கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. இவர் 1992 டிசம்பரில்தான் மத்திய கிழக்கிலிருந்து வேலை செய்துவிட்டு நாடுதிரும்பியவர். தொடர்பில்லாவிட்டாலும் பரவாயில்லை. தொடர்பிருப்பதாக ஒப்புக்கொண்டால் சீக்கிரமாக விடுதலையடைவாய் என்ற ஆலோசனையினால் இவர் 95 நடுப்பகுதியில் குற்றத்தை ஒப்புக்கொண்டு 5 வருட சிறைத்தண்டனையை அனுபவித்து வருபவர்.

**கண்ணன்**

வயது 23. ஊர் நீர்வேலி. இவர் புலிகள் அமைப்பில் இருந்து விலகி வவுனியா வந்த வேளை கைதாகி, 1 1/2 வருடங்களாக பண்டாரவளையில் புனர் வாழ்வு நிலையத்தில் தடுக்கப்பட்டிருந்தவர். பின்னர் விடுதலையாகி வவுனியாவில் வசித்து வந்த போது மீண்டும் 94 ஒகஸ்டில் கைதானவர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கப்படுவீர்கள்'' என அச்சுறுத்திவிட்டு சென்றனர்.

இந்த நிலையில் அன்றைய இரவு சிங்களக் கைதிகள் இருவிரவாக குதூகலமாக பாட்டுப் பாடி சத்திமிட்டுக்கொண்டிருக்கவே இன்று இரவு எதுவும் தங்களுக்கு நடக்கலாம் என்றே பயமுற்றிருந்தனர்.

ஆனால் அன்று எதுவும் நடக்கவில்லை. அடுத்தநாள் 20ம் திகதி மேல்நீதிமன்றத்தில் சுதாகரன் மற்றும் யேசுதாஸ் ஆகியோர் வழக்குக்கு ஆஜராகிய போது முன்னைய நாள் சம்பவத்தையும் அம்பலப்படுத்தினர்.

அதன் பிறகே இச்சம்பவம் பலருக்கு தெரியவந்தது. அதைத் தொடர்ந்து சுந்தரமூர்த்தி எனும் கைதியும் (5 வருடங்களின் பின் ) விடுதலையானதோடு அவரும் பல விடயங்களை வெளிக்கொணர்ந்தார்.

### உண்ணாவிரதக் கோரிக்கைகள்

இச்சம்பவத்தைத் தொடர்ந்து தமிழ்க்கைதிகள் அனைவரும் உண்ணாவிரதமிருந்தனர். இவ்வுண்ணாவிரதத்தின் போது கீழ்வரும் கோரிக்கைகளை முன்வைத்திருந்தனர்.

1. சம்பவத்தில் ஈடுபட்ட உயரதிகாரிகள் உடனடியாக இடமாற்றம் செய்யப்பட்டு புதிய நிர்வாகம் கொண்டுவரப்படல் வேண்டும்.
2. சம்பவத்தில் ஈடுபட்டவர்களை அடையாள அணிவகுப்பொன்றின் மூலம் இனங்காட்ட வழிசெய்து தரவேண்டும்.
3. ஜனாதிபதி ஆணைக்குழு அல்லது உயர் நீதிமன்ற நீதியரசர் தலைமையிலான விசாரணைக்குழு ஒன்றை அமைக்கவேண்டும்.
4. காயமடைந்த கைதிகள் உயிருடன் இருக்கும் பட்சத்தில் அவர்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு சக கைதிகளுடன் சேர்க்கப்படல் வேண்டும்.
5. கைதிகளின் சொந்தப் பிரதேசங்களில் அமைந்திருக்கும் சிறைச்சாலைகளுக்கு அவர்கள் மாற்றப்படவேண்டும்.

இவர்களது இக் கோரிக்கைள் பகிரங்கப்படுத்தப்பட்டதாலும், தமிழ் அரசியல் பிரமுகர்கள சிலரின் முயற்சிகள் காரணமாகவும் இது வெளியுலகிற்கு தெரியவந்ததால் அரசு வழமைபோல விசாரணைக் குழு எனும் பம்மாத்து வித்தையைக் காட்டியது. மறுபக்கம் சிறைக்குள் நடந்ததையெல்லாம் மூடி மறைக்க முயற்சிகள் செய்யப்பட்டன. சிங்களப் பேரினவாத சக்திகளுக்கும் இவற்றை மூடி மறைக்க வேண்டிய 'தார்மீக' பொறுப்பு இருந்ததால் 'இத்தனைக்கும் காரணம் தமிழ்க் கைதிகளே' என குற்றமும் சுமத்தியது. இதோ சில உதாரணங்கள்

### பேரினவாத பிரச்சாரம்

''சிறைச்சாலையில் புலிச்சந்தேக நபர்கள் அதிகாரிகளைத் தாக்கி 'போராட்டம்'

புலிச் சந்தேகநபர்கள் ஆயுதங்கள் மறைத்து வைத்திருந்ததாக கிடைத்த தகவலைத் தொடர்ந்து சோதனை செய்ய முயன்ற போது அதிகாரிகளை அவர்கள் தாக்கியதனால் ஏற்பட்ட மோதலில் 4 புலிச் சந்தேக நபர்களும் இரண்டு சிறையதிகாரிகளும் காயமுற்றனர்.

ஜே. ஓ. ஸி சம்பவ புலிச் சந்தேக நபரினதும், லலித் அத்துலத் முதலியின் கொலையில் சந்தேக நபருமான கரும்புலியினது தலைமையிலேயே இந்த தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது...''

தலைப்புச் செய்தி (லங்காதீப- 22-02-1996)

மகஸீன் சிறைச்சாலையிலிருந்து புலிகள் தப்பியோட சதி;

''....இவர்கள் தப்பிபோய் தலைமறைவாக இருக்கின்ற புலிகளுடன் சேரப்போவது பற்றிய சந்தேகம் தொடர்பாக விசாரணை நடக்கின்றன. இவர்கள் கொழும்பில் குண்டு வெடிப்புக்களை நடத்த திட்டமிட்டுள்ள, புலிகளோடு சேர தயாராகியிருப்பதாக தெரியவருகிறது..

... தங்களை மட்டக்களப்பு சிறைச்சாலைக்கு மாற்றும்படியும் அப்படிச் செய்யாவிட்டால் சிறையிலிருந்து தப்பிவிடுவதாகவும் அச்சுறுத்தியிருப்பதுடன் அக்கோரிக்கையை முன்வைத்து உண்ணாவிரதமும் இருக்கின்றனர்.

லேக்ஹவுஸ் பத்திரிகையான (ஜனதா - 22-02-1996)

சிங்கள மக்களுக்கு இறுதிவரை உண்மையான நிலைமை தெரியாமலேயே போனது. தமிழ் பத்திரிகைவாயிலாக சென்றடைந்த செய்திகளெல்லாம் கூட 'இதோ, தமிழ் கைதிகள் தாக்கப்பட்டது தொடர்பாக நீதியமைச்சர் ஜீ.எல். பீரிஸ் விசாரணைக் குழு அமைத்திருக்கிறார். சிறைச்சாலை ஆணையாளர் விசாரணை செய்து வருகின்றார்' என்றே பிரச்சாரப்படுத்தப்பட்டது.

விசாரணைக்குழு அமைக்கப்பட்டதுதான். ஆனால் தமிழ் பத்திரிகைகள் தமிழ் அரசியல் தலைவர்கள் சொன்னதைப்போல் 'தமிழ்க் கைதிகளுக்கு நடந்த கொடூரம் பற்றியல்ல. விசாரணை தமிழ் அரசியல் கைதிகள் தப்பியோட முயற்சித்தார்களா? தாக்குவதற்கான கம்பிகளை தயார் படுத்தியிருந்தார்களா? அதிகாரிகளைத் தாக்கினார்களா?'' என்பது பற்றிய விசாரணையே நடத்தினர் என்பது தான் உண்மை. இதோ சிங்களப் பத்திரிகைகளில் சிறை ஆணையாளர்கள்:

''புலிச் சந்தேக நபர்கள் சிறைக்குள்ளேயே குட்டி யுத்தமொன்றை நடத்தி தப்ப முயன்றனர். இதற்கு முன்னமும் இப்படியான முயற்சிகள் செய்திருக்கின்றனர். இது தொடர்பாகவே விசாரணை நடத்திவருகிறோம்''

- ஆணையாளர் ஜீ. தர்மதாச (திவயின - 23-02-96)

''...பயங்கரவாதிகள் என்ற சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இனத்தவர்கள் அங்கு கலவரம் உண்டுபண்ண முயற்சி செய்த சம்பவம் பற்றி விசாரணை செய்ய அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் விசாரணை குழுவை நியமித்துள்ளார்.''

- ஆணையாளர் எச். ஜீ. தர்மதாச (தினமின - 23-02-96)

இப்படி பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலையும் காட்டுவது போல பேரினவாத அரசாங்கம் தமிழ் மக்களுக்கொன்றையும் சிங்கள மக்களுக்கு வேறொன்றையுமே காட்டி, உண்மையை மறைக்க முயன்றதை எம்மவர்களால் புரிந்து கொள்ள முடியாமலேயே போனது. விசாரணை நடத்தி கிழித்து விடுவர் என்ற நம்பிக்கையை, இன்னும் வைத்திருக்கின்றனர்.

### போலி விசாரணை

அரசாங்கம் தொடங்கிய நாள் முதல், எத்தனை விசாரணைக் கமிஷன்கள் குழுக்கள் அமைக்கப்பட்டாகிவிட்டது. விஜய குமாரணதுங்க படுகொலை விசாரணையைத் தவிர வேறெதுவும் இன்னமும் அரைநிலையைக் கூட தாண்டவில்லை. விசாரணை என்கிற பம்மாத்தை அறிய நாங்களும் ஆர்வப்பட்டோம். சிறைச்சாலை உதவி ஆணையாளரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோம் எங்களுக்கு செவ்வியொன்று தரும்படி கேட்டோம்.

''என்ன விடயம் பற்றியது?''

''மகஸீன் சம்பவம் பற்றியது.''

''அது பற்றி எனக்கு எதுவும் சொல்லமுடியாது. ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுங்கள்''

ஆணையாளருடன் தொடர்பு கொண்டோம்.

''எங்களுக்கு அது பற்றி எதுவும் கூற அனுமதியில்லை. விசாரணையை நடத்த நீதியமைச்சின் மேலதிகச் செயலாளர் எம்.எஸ். ஜயசிங்கவை அமைச்சு நியமித்துள்ளது. அவருடன் தொடர்பு கொள்ளுங்கள்''

அவருடனும் தொடர்பு கொண்டோம்.

''பத்திரிகைகளுக்கோ, எவற்றுக்குமோ அவை பற்றிக்கூற எங்களுக்கு அனுமதியில்லை. நீதியமைச்சின் செயலாளருடன் பேசுங்கள்.''

நீதியமைச்சின் செயலாளர் திருமதி தர்ஷினி விஜேதிலக்கவுடன் பெப். 15ம் திகதி தொடர்பு கொண்டோம்.

''எங்களுக்கு அது பற்றி எதுவும் கூற முடியாது''

''சரி; விசாரணை என்ன நிலையில் உள்ளது?''

விசாரணையை முடித்து விட்டோம்''

''எப்போது''

''13ம், 14ம் திகதியளவில்''

விசாரணையின் சாராம்சம் என்ன?''

இனி அமைச்சர்தான் அறிக்கை வெளியிட வேண்டும்''

விசாரணை எதுவுமே சரியாக நடக்கவில்லை என்பதுதான் உண்மை.

சம்பவம் நடந்த மூன்றாவது நாள் பெப். 21ம் திகதியன்று சிறைச்சாலை உதவி ஆணையாளர் தலைமையிலான குழு விசாரணையொன்றை தொடங்கியபோது அவர் தமிழ் கைதிகளின் உண்ணாவிரதத்தை கலைப்பதிலேயே கண்ணும் கருத்துமாய் இருந்திருக்கிறார். கைதிகளோ விடாப்பிடியாக நாங்கள் உங்களுக்கு வாக்குமூலமளிக்க தயாரில்லை. எங்களது கோரிக்கைகள் இவைதான் என முன்னர் குறிப்பிட்ட கோரிக்கைளை முன் வைத்து இவற்றிற்கு முதலில் தீர்வுகாணுங்கள். அதன்பிறகு நாங்கள் வாக்கு மூலமளிக்கிறோம். பசியோடு எங்களால் வாக்கு மூலமளிக்க முடியாது. 'சுய நினைவிலேயே வாக்கு மூலமளிக்கிறோம்' என எங்களால் இறுதியில் கையெழுத்திட முடியாது என உறுதியாக இருந்திருக்கின்றனர்.

இதைவிட சம்பந்தப்பட்ட காவலாளிகளை அடையாளம் காட்டுவதற்கான அடையாள அணிவகுப்பு மார்ச் 9ம் திகதியன்று நடத்தப்பட்டபோது சம்பந்தப்பட்டவர்கள் பலரை அதில் கொண்டு வந்து நிறுத்தப்படாதது ஏன்?

இன்னமும் நேரில் சம்பவங்களைப் பார்த்த சாட்சியங்களை விசாரிக்காகதது ஏன்? பாதிக்கப்பட்ட தமிழ்க் கைதிகளிடமிருந்து கூட சரியான வகையில் வாக்குமூலம் பெறப்படவில்லை என அறியக்கிடைத்திருக்கிறது. அவர்கள்து சாட்சியங்களை இன்னமும் பெறாதது ஏன்?

விசாரணை முடியும் வரையாவது புதிய சிறை உத்தியோகத்தர்களை கடமையில் ஈடுபடுத்தாதது ஏன்? சம்பவத்தில் ஈடுபட்டதாக கருதப்படும் தண்டனை பெற்ற சிறைக்கைதிகள் இன்னமும் அடையாள அணிவகுப்பில் கொண்டு வந்து நிறுத்தப்படாதது ஏன்?

இத்தனையும் செய்யாத நிலையில் விசாரணை எப்படி பூர்த்தியாகும்?

ஆனால் விசாரணை பூர்த்தியாவிட்டது.

எப்படி பூர்த்தியாகியது?


வழமைபோலவே எல்லா விசாரணைக் கமிஷன்களைப் போலதான்.

இது அரசின் இயல்பு!

பேரினவாதத்தின் பண்பு!

அடக்கு முறை சக்திகளின் தந்திரோபாயம்!

நாளையும் போவோம் வாக்குச் சாவடிக்கு! புள்ளிபோட!.




### இலக்கமிட்டு காட்டப்பட்ட இடங்கள்


1. லோன்டறிக்குரிய நீர்த்தொட்டி
2. லோன்டறிக்கும்,சிறைக்காவலர்களுக்குமான மலசலகூடம்
3. லோன்டறி
4. லோன்டறிக்கான களஞ்சியம்
5. A,B பகுதி வாயிலுக்கான சிறைக்காவலர் அரண்
6. நீர்த்தொட்டிகள்
7. உணவு வழங்கும் கூடம்
8. பிள்ளையார் கோவில்
9. மலசல கூடங்களும் அதற்கானநீர்த் தொட்டியும்
10. நீர்த்தொட்டி
11. A,B பகுதிகளுக்கான காவலர் நிலையம்
12. கிணறு
13. உணவு வழங்கும் கூடம்
14. JVP கைதிகளுக்கான உடற்பயிற்சிக் கூடம்
15. களஞ்சியம்
16. சலூன்
17. D,J க்கான நீர்த்தொட்டி
18. பெளத்த விகாரை
19. முஸ்லிம் கைதிகளுக்கான மசூதி
20. ஆவணக்காப்பகமும். கைதிகளின் கடிதங்கள். பத்திரிகைகள் என்பவற்றை தணிக்கை செய்யும் கூடமும். இது SM பகுதி என அழைக்கப்படுகிறது.
21. நீர்த்தொட்டி
22. Superintendent of Prison, Chief Jailor ஆகியோருக்காக புதிதாக கட்டப்பட்டு வரும் அலுவலகம் மற்றும். புதிய விடுதி. இவை 28. 30 என அடையாளப் படுத்தப்பட்டுள்ள தற்போதைய விடுதிகளுக்குப் பதிலாகவே இவை கட்டப்பட்டு வருகின்றன.
23. Superintendent of Prison, Chief Jailor ஆகியோரது தற்போதைய விடுதி.
24. பொலிஸ் சோதனைக் கூடம்
25. நீர்த்தொட்டி
26. மலசலகூடம்
27. சிறைகாவலர்கள் உடைமாற்றும் கூடம்
28. S.P. அலுவலகம்
29. பார்வையாளர்கள் காத்திருக்கும் இடம் (Waiting Hall)
30. சிரேஷ்ட தலைமை ஜெயிலர்
31. நீர்த்தாங்கி
32. குப்பைத்தொட்டி
33. முட்கம்பிகள் கொண்ட பாதுகாப்பு வேலி
34. கடப்பாரைகள். அலவாங்குகள் கத்திகள் மண்வெட்டி போன்றவை உள்ள களஞ்சியம். சம்பவத்துக்கு பாவிக்கப்பட்ட பொருட்கள் இங்கிருந்தே கைதிகளால் எடுக்கப்பட்டிருந்தது.
35. இரவுக் கடமையில் ஈடுபடும் காவலர்கள் ஓய்வு எடுக்கும் இடம்.
36. நீர்த்தொட்டி
37. கத்தோலிக்க தேவாலயம்
38. களஞ்சியம்
39. சிறைக் காவலர் நிலையம்
40. வைத்திய நிலையம்
41. J யில் உள்ள தண்டனை பெற்றகைதிகளுக்கு உணவு வழங்கும் இடம்.


வாயிற் கதவுகள்

இப்பகுதிகளிலேயே ( P,G,H) கடும் போக்காளர்கள் என கருதப்படுவோர் அனைவரும் அடைத்து வைக்கப்படுவர். இவர்களுக்கும் ஏனைய சிறைக் கைதிகளுக்கும் எந்த வித தொடர்பும் ஏற்படாத வகையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. உதாரணத்திற்கு வைத்திய நிலையம் போன்ற இடங்களுக்கு போகவேண்டியேற்பட்டால் அங்கு வேறெவரையும் அனுமதிக்காது பலத்த காவல் போடப்படும். கடந்த ஜே.வி.பி காலப்பகுதியில் பல இளைஞர்கள் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட இடமும் இதுவே. இன்னமும் ரயர் எரிப்பு அடையாளங்கள் சுவரிலிருந்து மறையவில்லை என தெரியவருகிறது. 94ம் ஆண்டு பெப்ரவரி மாதம் A,B யிலுள்ள எல்லைச்சுவர் இடிந்து விழுந்தபோது இந்த P,G,H இலேயே தமிழ் கைதிகளை அடைத்து வைத்திருந்தனர். 15 பேரை மட்டுமே கொள்ளக்கூடிய இந்த கட்டடத்தில் அன்று 60 பேர் திணிக்கப்பட்டிருந்தனர்.

அரசமரம்.

- A,B,E,F என்பவை தமிழ் அரசியல் கைதிகள் (சந்தேக நபர்கள்) அடைத்து வைக்கப்பட்டுள்ள பகுதி.
- J யில் பல்வேறு குற்றச்செயல்கள் காரணமாக தண்டனை பெற்ற வெலிக்கடை சிறைக்கைதிகளை மகசீன் சிறைச்சாலைக்கு வேலைக்காக கொண்டு வரப்பட்டவர்கள் அடைக்கப்பட்டுள்ளனர். தற்போது 80-90 வரையான கைதிகள் இதிலிருக்கிறார்கள்.
- D யில் முஸ்லிம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர் D,J ஆகியவை மண்டபங்கள்.
- C யில் தற்போது எஞ்சிய ஜே.வி.பி கைதிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். தற்போது ஏறத்தாழ 25 பேர் அளவில் இருப்பதாக அறியப்படுகிறது.
- A,B,C ஆகியவை மாடிகளைக் கொண்டது இவற்றிலுள்ள மாடிகள் மண்டபங்களாகவே காணப்படுகிறது.
- B மண்டபத்தில் தண்டனை பெற்ற தமிழ்க் கைதிகள் வைக்கப்பட்டுள்ளனர்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உங்கள் குழந்தையின் கோபத்தை தணிப்பது எப்படி?

அபிண்

## குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே...2

குழந்தைகளுடனான உரையாடலின் போது பெற்றோர்கள் சலித்துப்போகின்றார்கள். ஏனென்றால், அந்த உரையாடல்கள் அவர்களை எங்கும் இட்டுச் செல்வதில்லை. இந்தப் புகழ் பெற்ற உரையாடலைப் பாருங்கள்:

''எங்கே போனாய்?''

''வெளியே''

''என்ன செய்தாய்?''

''ஒன்றுமில்லை''

தாம் நியாயமானவர்களாக இருக்க விரும்பும் பெற்றோர்கள் விரைவிலேயே இத்தகைய உரையாடல்கள் எவ்வளவுக்கு களைப்பூட்டுபவை என்பதை கண்டு கொள்வார்கள். ஒரு தாய் சொல்கிறாள்: ''நான் எனது முகம் கறுத்துப்போகும் அளவுக்கு எனது பிள்ளையுடன் நியாயமாக நடந்து கொள்ள முயல்கிறேன். ஆனால், அது என்னைக் கவனிப்பதே இல்லை. நான் அழும் போது மட்டும் த்தான் நான் சொல்வதை அது கேட்கிறது..''

குழந்தைகள் பெற்றோர்களுடனான உரையாடல்களை பெரும்பாலும் எதிர்க்கிறார்கள். அவர்கள் போதனை செய்யப்படுவதை, ஏதாவது சொல்லப்பட்டுக் கொண்டே இருப்பதை, விமர்சிக்கப்படுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள். அவர்கள், பெற்றோர்கள் தேவைக்கதிகமாக பேசுவதாக உணர்கிறார்கள். எட்டு வயது டேவிட் தனது தாயிடம் கேட்கிறான்: ''நான் ஒரு சின்னக் கேள்வி கேட்டால் ஏன் இப்படி ஒரு நீண்ட பதிலைச் சொல்கிறீர்கள்'. தனது நண்பர்களுக்கு அவன் இப்படிச் சொல்வான்: 'நான் அம்மாவுக்கு எதுவும் சொல்வதில்லை. நான் அவளுடன் கதைக்க தொடங்கினாலோ... எனக்கு பிறகு விளையாடவே நேரமிருக்காது!'

ஒரு குழந்தைக்கும் பெற்றோருக்கும் இடையிலான உரையாடலைக் கூர்ந்து கவனிக்கும் ஒருவர், அவர்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் ஆச்சரியத்துக்குரியவிதத்தில் எவ்வளவு தூரம் அக்கறையுள்ளவர்களாக பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை கண்டு கொள்ளலாம். அவர்களுக்கிடையேயான உரையாடல் தனி நடிகர்களது உரையாடல் போன்று தமக்கு தாமே பேசிக்கொள்வதாக இருக்கும். ஒருவரது விமர்சனங்களையும் அறிவுறுத்தல்களையும் கொண்டதாகவும், மற்றவரது மறுப்பும் ஒப்புக் கொடுத்தலுமாக அந்த நாடக வசனங்கள் அமைந்திருக்கும். இத்தகைய உரையாடல்களின் துயரம் என்ன வென்றால், அவை அன்பு இன்மையால் வருபவை அல்ல; மாறாக ஒருவரை ஒருவர் கௌரவிக்காமையால் வருகின்றன; அறியாமையால் வருபவை அல்ல, மாறாக தேர்ச்சியின்மையால் வருபவை என்பதாகும்.

நமது நாளாந்த பாவனையிலுள்ள மொழி குழந்தைகளுடன் பயனுள்ள விதத்தில் தொடர்பாடப் போதுமானதல்ல. குழந்தைகளை நெருங்கிச் செல்லவும், பெற்றோர்களது மனக்கவலையை குறைக்கவும் நாம் புதிய ஒரு வழியைக் கையாள வேண்டும்; புதிய முறையில் அவர்களுடன் உரையாட வேண்டும்.

### புதிய முறை தொடர்பாடலின் ஒழுக்கநெறி:

குழந்தைகளுடனான புதிய முறை தொடர்பாடல் ஒழுக்கநெறிகள் தேர்ச்சியினையும், கௌரவித்தலையும், அடிப்படையாகக் கொண்டவை. இது, குழந்தைகளதும் பெற்றோர்களதும், சுய கௌரவத்தைப் பாதுகாக்கின்ற செய்திகளையும், அறிவுறுத்தல்களுக்கும் ஆலோசனைகட்கும் முன்பாக புரிந்துணர்வு உள்ளது என்று வெளிப்படுத்துவதையும் கோரி நிற்கிறது.

எரிக் - வயது ஒன்பது- கடும் கோபத்துடன் வீட்டுக்கு வந்தான். அவனது வகுப்பு அன்று ஒரு சுற்றுலா போக ஏற்பாடாகியிருந்தது. ஆனால் அதை மழை வந்து குழப்பி விட்டது. தாய் ஒரு புதிய அணுகு முறையை கையாள்வது என்று தீர்மானித்தாள் கடந்த கால அணுகு முறைகள் மோசமாக்கவே செய்தன என்பதால் அவற்றை தவிர்க்கவே அவள் விரும்பினாள்: ''மழையினால் நின்று போன சுற்றுலாவுக்காக அழுவதில் பயனில்லை'', ''இப்படியான சந்தோசங்களுக்கு இன்னுமொருநாள் வரும்தானே'', மழையை நானா வரச் செய்தேன்... உனக்கு தெரியும்தானே... அப்ப ஏன் என் மீது ஆத்திரப்படுகிறாய்?'' இது கடந்த கால அணுகு முறை.

அவருடைய புதிய அணுகுமுறை இப்படியிருந்தது;

தாயார் தனக்குள் சொல்லிக்கொண்டாள்: '' இன்றைய சுற்றுலா குழம்பியது மகனை மிகவும் பாதித்துள்ளது. இவன் ஏமாற்றமுற்றுப் போய் இருக்கிறான், தனது ஏமாற்றத்தை என்மீது கோபிப்பதன் மூலம் பகிர்ந்து கொள்கிறான். அவனுக்கு அவனது உணர்ச்சிகளை கொண்டிருக்க உரிமையிருக்கிறது. அவனது உணர்வுகளை கௌரவிக்கவும், அவற்றை புரிந்து கொள்ளவும் செய்கிறேன் என்று காட்டுவதன் மூலம் அவனுக்கு என்னால் உதவ முடியும்''

எரிக்கிடம் அவள் சொன்னாள்:

தாய்: உனக்கு சரியான ஏமாற்றமாகப் போய் விட்டது, என்ன?

எரிக்: ஆம்.

தாய்: இந்த சுற்றுலாவிற்கு நீ மிகவும் ஆசைப் பட்டாய், என்ன?

எரிக்: ஓம்... நிறைய...

தாய்: நீ எல்லாத்தையும் தயார் பண்ணி ரெடியாக இருக்க இந்த பாழாய்ப்போன மழை வந்து கெடுத்துவிட்டது...

எரிக்: ஓம்.. அதுதானே....

சில கணம் எரிக் மௌனமாக இருந்தான். பிறகு தானாகவே சொன்னான். ''ம்...பரவாயில்லை.... இன்னொருநாள் வராமலா போகப்போகிறது....''

அவனது கவலைமறைந்து போய்விட்டது. அன்று மாலை முழுவதும் அவன் மிகவும் இயல்பாகவே இருந்தான். வழமையாக எரிக் கோபத்துடன் வரும்போது அந்த வீடு இரண்டுபட்டுவிடும். அவன் அந்த வீட்டினுள் ஒவ்வொருவரையும் ஏதாவது ஒரு காரணத்தை வைத்து சீண்டிக் கொண்டேயிருப்பான். கடைசியாக அவன் களைத்துப் போய் தூங்கும் வரை, அங்கு அமைதியே இருக்காது.

இந்த அணுகுமுறையில் அப்படி என்னதான் சிறப்பம்சம் இருந்தது? இதிலிருந்து பயன் மிக்க பகுதிகள் தான் என்ன?

ஒரு குழந்தை தீவிரமான உணர்வுகளால் பாதிக்கப்பட்டிருக்கும் போது அது ஒருவரையும் கணக்கெடுக்கமாட்டாது. அது புத்திமதியையோ, சமாதானத்தையோ, ஆக்கபூர்வ விமர்சனத்தையோ ஏற்றுக்கொள்ள தயாராக இராது. தனது மனதில் தான் அனுபவித்துக்கொண்டிருக்கும் அவஸ்தைகளை தான் அதை முழுமையாக தெரிவிக்காமலேயே, பிறரால் விளங்கிக்கொள்ளப்பட வேண்டுமென்று என்று எதிர்பார்க்கிறது. தனது உணர்வுகளில் ஒரு பகுதியை மட்டும் வெளியிட்டுவிட்டு மற்றவற்றை நாம் ஊகித்துக்கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறது.



ஒரு குழந்தை எம்மிடம் 'இன்று ஆசிரியர் எனக்கு அடித்து விட்டார்' என்று சொல்லும் போது, நாம் அது தொடர்பாக மேலதிக விபரங்களை கேட்கக் கூடாது. அது மட்டுமல்ல, 'நீ என்ன செய்தாய்...? உன்னை ஆசிரியர் அடித்தார் என்றால், நீ ஏதாவது செய்திருக்க வேண்டும் என்ன செய்தாய்? என்று கூறுதலும் கூடாது. நாம் அது அடிக்கப்பட்டதற்காக கவலைப்படுவதாக சொல்வதும் கூட (Sorry) தேவையற்றது. நாம் செய்யவேண்டியதெல்லாம் அதன் உணர்வுகளை, கவலையை, அவனது அந்தரமான நிலையை, வெட்கத்தை, பழிவாங்கும் ஆத்திரத்தை எல்லாம் புரிந்து கொள்வதாக காட்ட வேண்டும். அவனது உணர்வுகளை எப்படி நாம் அறிவது? அதை கவனிப்பது, அது பேசுவதைக் கேட்பதுடன் எமது சொந்த உணர்வுகளையும் வெளிப்படுத்த வேண்டும். தனது சகாக்கள் மத்தியில் அவமானப்படுகின்ற ஒரு குழந்தை எப்படி உணரும் என்பதை நாம் அறிவோம். எனவே, அதன் உணர்வை நாம் புரிந்து கொண்டுள்ளோம் என்று காட்டக்கூடிய விதத்தில் நாம் பேசவேண்டும். கீழ்வரும் ஏதாவது ஒரு வசனம் இதற்குப் பொருத்தமானது.

'இது ஒரு பயங்கரமான அந்தரமான ஒன்றாக இருந்திருக்கும்'

'அது உனக்கு பயங்கர ஆத்திரத்தை கொடுத்திருக்கும்'

'அந்த நேரத்தில் அந்த ஆசிரியர் மீது உனக்கு பயங்கர வெறுப்பு ஏற்பட்டிருக்கும்'

'இது உனது உணர்வுகளை பயங்கரமாக தாக்கியிருக்கும்'

'இன்றைக்கு உனக்கு ஏதோ ஒரு கூடாத நாள் போல'

ஒரு குழந்தைக்கு 'நீ அப்படி கருதுவது சரியல்ல' என்று கூறுவதன் மூலம் அதன் ஆழமான உணர்வுகளை இல்லாமலாக்கிவிட முடியாது. அல்லது 'அப்படி நினைப்பதற்கு அங்கே ஒன்றும் இல்லை' என்று கூறுவதும் அப்படியேதான். ஆழமான மனப்பதிவுகளை விரட்டி இல்லாமல் செய்துவிடமுடியாது. அவற்றின் அழுத்தங்கள், மற்றவர்களால் தாம், அனுதாபத்துடன் புரிந்துகொள்ளப்படுகிறோம் என்று தெரியும் போது கொஞ்சம் கொஞ்மாக முனை மழுங்கி குறைந்து போகின்றன.

இது குழந்தைகட்கு மட்டுமல்ல, பெரியோர்களுக்கும் கூட பொருத்தமானது. பெற்றோர்களது கலந்துரையாடலிலிருந்து எடுக்கப்பட்ட கீழ்வரும் பகுதி இதை தெளிவாக காட்டுகிறது.

தலைவர்: ஒரு காலை நேரம் என்று எடுத்துக கொள்வோம். அன்றைக்கு எல்லாம் மோசமாக நடக்கின்றன. டெலிபோன் அடிக்கிறது; குழந்தை அழுகிறது, நீங்கள் கவனிக்குமுன்னரே அடுப்பிலிருந்த உணவு கருகி விடுகிறது. உங்களது கணவர் இதைக்கண்டு விட்டு கேட்கிறார்: ''கடவுளே நீ எப்பதான் சாப்பாட்டை கருக்காமல் சமைக்கப் பழகப் போகிறாயோ?''

உங்களது எதிர்வினை என்ன?

திருமதி அ: சாப்பாட்டை தூக்கி அவரது முகத்தில் வீசி எறிவேன்.

திருமதி ஆ: உன்ரை சாப்பாட்டை நீயே சமைத்துத் தின்னேன்' என்று சொல்லுவேன்.

திருமதி இ: இது என்னை சரியாக பாதிக்கும். நான் அழுவேன்.

தலைவர்: உங்களது கணவர் மீது எப்படிப் பேசியிருந்தால் உங்களை அது அவரை நோக்கி கவர்ந்திருக்கும்?

பெற்றோர்கள்: கோபம்; பொறுப்பு; மனக்கசப்பு...

தலைவர்: உங்களால் இன்னொரு தடவை சமைக்க முடியுமா?

திருமதி அ: அதற்குள் கொஞ்சம் நஞ்சை ஊற்ற முடியும் என்றால் மட்டும்!

தலைவர்: உங்கள் கணவர் வேலைக்குப் போனபின் உங்களுக்கு வீட்டை சுத்தம் செய்ய முடியுமா?

திருமதி அ: இல்லை. அன்று முழுவதுமே பாழ்தான்.

தலைவர்: உதாரணமாக, அதே நிலைமை. சாப்பாடு கருகுகிறது. உங்கள் கணவர் நிலைமையை அவதானித்துவிட்டு சொல்கிறார்.. ஓ... அன்பே... இன்றைக்கு உனக்கு நல்லாத்தான் விடிஞ்சிருக்கு... முதல் குழந்தை, பிறகு டெலிபோன்... இப்ப சாப்பாடு....''

திருமதி அ: என்னுடைய கணவன் அப்படிச் சொன்னாலோ.. நான் செத்தே போவேன்.

திருமதி ஆ: ஆ... எவ்வளவு சந்தோசமாக இருக்கும்.

திருமதி இ: என்னுடைய சந்தோசத்தில் கட்டிப்பிடித்து ஒரு முத்தம் கொடுத்துவிடுவேன்.

தலைவர்: ஏன்...? குழந்தை இன்னமும் அழுகிறது... சாப்பாடு கருகிவிட்டது... அப்படியிருந்துமா?

பெற்றோர்கள்: அது ஒன்றும் பிரச்சினையில்லை.

தலைவர்: அப்ப எது நிலைமையை மாற்றுகிறது.

திருமதி ஆ: அவர் என்னோடு நிற்கிறார், அவர் என்னை விமர்சிக்கவில்லை.. அவர் எனக்கு எதிராக இல்லை, என்பது சந்தோசத்தையும் நன்றியுணர்வையும் ஏற்படுத்தும்.

தலைவர்: இப்போது, உங்கள் கணவர் வீட்டுக்குப் போனதும், உங்களுக்கு வீட்டைத் துப்பரவாக்குவது சிரமமாக இருக்கிகாதா?

திருமதி இ: இல்லை. நான் அதை உல்லாசமாக பாடிப்படியே செய்வேன்.


தலைவர்: இப்போது ஒரு மூன்றாவது வகை கணவனைப்பற்றி சொல்லப்போகிறேன். எரிந்து போன சாப்பாட்டை மாற்றுவதில் உதவியது என்ன?

திருமதி ஆ: அதாவது யாராவது உங்களை புரிந்து கொள்கிறார்கள் என்பது.

திருமதி அ: அதாவது உங்களை எப்படி திருத்திக் கொள்வது என்று ஆலோசனை கூறாமல், புரிந்து கொள்வது.

இந்த உதாரணம் சொற்களின் பலத்தை உணர்த்துகிறது. சந்தோசத்தையோ, சச்சரவையோ அவை ஏற்படுத்தக் கூடியன. சக்தி வாய்ந்தவை என்பதை இதன்மூலம் நாம் காணலாம். இந்தக் கதையின் அடிநாதம் என்னவென்றால் எமது எதிர்வினைகள் (சொற்களும், உணர்வுகளும்) ஒரு எதிர்பார்த்த மாற்றத்தை ஏற்படுத்தவும் எமது இல்லத்தில் அமைதியை உருவாக்கவும் வல்லன என்பதே!

வரும்...





TAMIL POETRY NOW

EDITED & TRANSLATED

BY M.S.RAMASWAMY

PUBLISHEDBY:

A WRITERS WORKSHOP PUBLICATION.

பல கவிஞர்களுடைய கவிதைகளை ஒன்றாகத் தொகுக்கும் (Anthology) தொகுப்புக்கள் தமிழிலும் குறைவாகத்தான் வந்துள்ளன என்பதை இப்புத்தகத்தைக் கையிலெடுக்கிறபோது புரியமுடிகிறது. ஏற்கெனவே 'பதினொரு ஈழத்துக்கவிஞர்கள்' (1981) மரணத்துள் வாழ்வோம் (1985) சொல்லாத சேதிகள்' காலம் எழுதிய வரிகள் (1995, யாழ்ப்பாணம்) போன்ற தொகுதிகளும் புலம்பெயர்ந்த ஈழத்துக் கவிஞர்களின் தொகுதியொன்றும் வெளிவந்துள்ளன. தமிழ் நாட்டிலிருந்து இவ்வாறானவை (Anthology) கள் வெளிவந்ததாக ஞாபகம் இல்லை.

42 சமகால தமிழகக் கவிஞர்களினதும் சேரனினதும் 153 கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தொகுத்துள்ளார். இத் தொகுதியில் வைரமுத்து, அப்துல் ரகுமான், மேத்தா, காமராசன் போனற மலின நச்சுக்கவிதைகள் எழுதுகின்ற 'கவிஞர்களை' முற்றாக ஒதுக்கியிருப்பது வரவேற்கப்பட வேண்டிய ஒன்று.

மற்றப்படி சேரனுடைய கவிதையை மட்டும் போட்டுவிட்டு 'Tamil Poetry Now' என்று தலைப்பிடுவது எந்த வகையில் நியாயமானது என்று கேட்கத் தோன்றுகிறது? ஒன்றில் சேரனுடைய கவிதைகளை விலக்கிவிட்டு Indian Tamil Poetry Now எனத் தலைப்பிட்டிருக்கலாம். அல்லது மஹாகவியிலிருந்து சோலைக்கிளி வரையான ஈழத்துக் கவிஞர்களையும் உள்ளடக்கியிருக்க வேண்டும். குறைந்த பட்சம் தன்னுடைய முன்னுரையிலாவது இத்தவறை ராமசாமி குறிப்பிட்டிருக்கவேண்டும். அதுவும் ஒப்பீட்டளவில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகள் இந்திய தமிழ்க் கவிதைகளை விட சிறந்தவை என்ற ஏடு கோள் பலம் பெற்று வருகின்ற இக்காலப்பகுதியில் இது மிகப் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். இப்புத்தகம் மட்டுமே சமகாலத்தமிழ்க் கவிதைகள் என்று பார்க்கும் ஏனைய மொழி ஆய்வாளர்கள் யானை பார்த்த குருடரைப் போலவே அமைவர்.

இப்புத்தகத்தை வெளியிட்ட Writer's Workshop என்ற அமைப்பு இதற்கு முதலும் Modern Tamil Poetry, Modern Tamjl stories (two volumes) The Vision: Tamil Short Story Now போன்ற புத்தகங்களை வெளியிட்டுள்ளது.

முகவரி:-

Writers Workshop
P.Lal
162/92, Lake Gardens,
Calcutta, 700045,
India.

நட்சத்திரன் செவ்விந்தியன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# அவளுக்கு எதிரான பாலியல் வல்லுறவு!

**கீழ்வரும் கருத்தாடல் பாலியல் வல்லுறவு, பற்றியது. 'பெண்களும் தொடர்பு ஊடகமும்'' (Woman and Media ColleCtive) எனும் அமைப்புக்காக அனோமா ராஜகருணா நெறியாள்கை செய்த தொலைக் காட்சி விவரணச்சித்திரத்திலிருந்து எடுக்கப்பட்ட சுருக்கிய தமிழ் வடிவம் இது. பெண்களின் உரிமைகளுககாக பணியாற்றி வரும் பெண்கள் சிலரின் கருத்துக்கள் இங்கே முன்வைக்கப்படுகின்றன. 'மார்ச் - 8; சர்வதேச பெண்கள் தினத்திற்கு ரூபவாஹினியில் ஒளிபரப்பப்படுவதற்கிருந்த இந்த விவரணச் சித்திரத்தை 'வில்ஸ் உலகக்கிண்ண கிரிக்கெட் நிகழ்ச்சிக்கு முக்கியத்துவமளிக்கும் பொருட்டு ரூபவாஹினி ஒதுக்கி வைத்து விட்டது. உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி முடிவடைந்து ரூபவாஹினியும் மனது வைத்தால் இதனைப் பார்க்கிற வாய்ப்பு உங்களுக்குக் கிடைக்கலாம்.**

**சோமா:-** இன்று பெண்கள் பண்டங்களைப் போன்று நோக்கப்படுகிறார்கள். இன்றைய இளம் ஆண்கள் தனக்கு அம்மா, சகோதரி என்போர் இருந்தும் கூட வேறு பெண்களை 'சாமான்', 'துண்டு' என்ற பதங்களைக் கொண்டு அழைக்கின்றனர்.

**சமன்மலி:-** சுதந்திர வர்த்தக வலயப்பகுதிகளில் பெண்களை 'சாமான்', 'காய்', பழக்கம் என்றுதான் அழைக்கிறார்கள் ஆண்கள்.

**சுனிலா:-** புராதன கருத்தியலின்படி பெண்கள் எனப்படுவோர் பண்டம். திருமணத்தின் போது அந்தப் 'பண்டம்' கணவனின் பண்டமாக கைமாறுகிறது.

பெண்ணைப் பண்டமாகக் கையாளுகின்ற கணவனால் அப்பண்டம் இப்படிக் கையாளப்படுகின்றது என்பதை பாலியல் குற்றங்களுக்கூடாக தொடர்பு சாதனத்துறையினர் வெளிக்கொணர்ந்துள்ளனர்.

**சீதா:-** பெண்கள் மீதான பாலியல் குற்றங்கள் அதிகரித்துள்ளது என புதிதாகச் சொல்ல தேவையில்லை. ஆரம்பத்திலிருந்தே இக் குற்றச்செயல் இடம் பெறத்தான் செய்கிறது. ஆனால் அன்று அவை பெரும்பாலும் வெளிக்கொணரப்படவில்லை. இன்று அவை வெளிக்கொணரப்படுகிறது.

**குமி:-** இன்று பாலியல் வல்லுறவு தொடர்பாக தொடர்பு சாதனங்களில் அதிகளவான விடயங்கள் வெளியிடப்படுகின்றன. அரசியல் வன்முறைகள் இடம் பெறும் காலங்களில் பாலியல் குற்றச்செயல் அதிகளவு உயர்ந்திருப்பதை நாம் காண்கிறோம்.

**சீதா:-** அத்தோடு இவை கொலையோடு சேர்த்து நடப்பதால் அதிகளவு வெளியாகின்றது. இப்படியான சில சம்பவங்கள் பெரியளவு எழுப்பப்பட்டதனாலேயே இன்னமும் எமக்கு அவை ஞாபகத்திலுள்ளது. அப்படியான ஒரு சம்பவமாக 'மனம்பேரி' சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

1971ம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியின் போது படையினரால் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு பின் கொல்லப்பட்ட மனம்பேரியின் சம்பவமே அது. 1977ஆம் ஆண்டு அரசாங்கம் கவிழ்வதற்கும் அச்சம்பவம் காரணமாக இருந்தது. அப்படியான ஒரு சலசலப்பை ஏற்படுத்தியகொலையாகவும், பாலியல் வல்லுறவாகவும் அதைக் குறிப்பிடலாம்.

**சமன்மலி:-** கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திற்குள் பெண்கள் பாலியல் வல்லுறவுக்கும், வன்முறைக்கும் உள்ளாவது வெளிவருவதேயில்லை. இப்பெண்கள் பொலிஸ் நிலையம் சென்று புகார் செய்யவும் வெட்க்ப்படுகின்றனர். இன்னொரு பக்கம் அவர்களுக்கு இது பற்றி முறையிடுவதற்கு நேரம் கிடைப்பதில்லை. உண்மையில் பொலிசுக்கு மாத்திரமல்ல தங்களுடன் விடுதியில் வசிக்கின்ற ஏனையோருக்கும் கூட கூறாமல் இருப்பதற்கான காரணம் நடந்ததைச் சொன்னால் அப்பெண் அன்றிலிருந்து ஏளனத்துக்குள்ளாவாள் என்பதே.



**சுனிலா:-** கடந்த வாரம் என்று நினைக்கிறேன். ஒரே நாளில் இரு சம்பவங்களைப் பத்திரிகையில் வாசித்தேன். ஒன்று தனது தாயை வல்லுறவு புரிய முயற்சித்த மகனை அதே குடும்பத்தைச் சேர்ந்த இன்னொரு மகன் அடித்து நொறுக்கிய சம்பவம். அடுத்தது பாட்டியை வல்லுறவு புரிய முயற்சித்த பேரன். இச்சம்பவங்களைப் பார்த்தால் குடும்பம் எனப்படும் நிறுவனத்துக்குள்ளும் கூட இவ்வாறான வல்லுறவுச் சம்பவங்கள் இடம் பெறுகின்றன. இன்னும் இப்படி எத்தனையோ....!

**சமன்மலி:-** மேலும் சுதந்திர வர்த்தகவலயப் பகுதியில் மாதத்துக்கு ஒரு முறை இசை நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. எல்லா இசை நிகழ்ச்சியின் போதும் பாலியல் வன்முறைகள் இடம் பெறுகின்றன. அது போல கடமையிலிருக்கிற பொலிசாருக்கும் படையினருக்குமிடையில் கூட மோதல்கள் ஏற்படும். ஏனெனில் வலயத்தில் வேலை செய்யும் பல பெண்கள் பொலிசாரையோ படையினரையோ காதலிக்க ஆசைப்படுகின்றனர். உண்மையிலேயே அவர்கள் விரும்புகிறார்களா என்பது பற்றி இப்பெண்களுக்குத் தெரியாது. அவர்களுடன் ஒரு இரவைக் கழிக்க எங்கேனும் போய்விடுகிறார்கள். பிரச்சினையிலும் விழுந்து விடுகிறார்கள்.

''பொருளியல் நோக்கில் ஒரு நாளைக்கு நீர்கொழும்பைச் சூழ உள்ள பகுதிகளில் மாத்திரம் 238 கருக்கலைப்புச் சம்பவங்கள் இடம் பெறுகின்றன என குறிப்பிடுகிறது.

**சீதா:-** 1971இல் மனம்பேரி சம்பவத்தால் 1977இல் அரசாங்கம் கவிழ காரணமானதைப்போல் 1994 தேர்தல் மேடைகளில் பிரதான விடயங்களில் ஒன்றாக சந்தரேகா விவகாரமும் கையாளப்பட்டது.

**சமன்மலி:-** உண்மையில் கிழவனானாலும் கூட ஒருபெண்ணை பாலியல் வல்லுறவு புரியும் நோக்கிலேயே பார்க்கிறான். அண்மையிலும் கூட அப்படி ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. சுதந்திர வர்த்தக வலயப் பெண்கள் வாடகைக்கு இருக்கின்ற பல அறைகள் காட்போட்டுகளாலேயே மறைக்கப்பட்டிருக்கின்றன. அந்தப் பெண் இரவு வேலையை முடித்து விட்டு பகல் நேரம் நித்திரையாக இருந்த போது பலகையையும் உடைத்துக் கொண்டு உள்ளேபோன கிழவன் அப் பெண்ணை பாலியல் வல்லுறவு புரிந்துள்ளான். இன்று வலயத்தில் வேலை செய்கின்ற அனேகமான பெண்கள் அனேகமாக வல்லுறவுக்குள்ளாகுவது; அவர்களுடன் தொழில் புரிகின்ற ஆண்களால் அல்ல. மாறாக அவர்கள் தங்கியிருக்கும் விடுதி உரிமையாளர்களால் மற்றும் உரிமையாளரின் குடும்பத்தவர்களாளுமே.

**குமி:-** பாலியல் வல்லுறவு என்பது நிச்சயமாக ஒரு குற்றமே. பெண்கள் அமைப்புகள் மனித உரிமை அமைப்புகள், பொதுநிறுவனங்கள் என்பன இது தொடர்பாக செயற்படுவதோடு அதற்கெதிரான நடவடிக்கைகளிலும் ஈடுபடவேண்டும்.

**ரமணி:-** பாலியல் வல்லுறவு குற்றம் என்பதை நாம் முதலில் ஏற்றுக்கொள்ள வேண்டும். இது ஒரு பெண்ணுக்கு எதிரானது மட்டுமல்ல, முழுச்சமூகத்துக்குமெதிரானது, அரசுக்குமெதிரானது.

**குமி:-** சட்டத்திற்கு முன்; பாலியல் வல்லுறவு வழக்கொன்றைக் கொணர்வதாக இருந்தால் சட்டம், பொலீஸ், வைத்தியசாலை என்பன போன்ற தடைகளை பெண்தாண்ட வேண்டியிருக்கும். இவ்விடயங்களை அப்பெண் அணுகுகின்ற போது வேறு விதமான கண்ணோட்டத்துடனேயே அணுகப்படுகிறது. வல்லுறவு தொடர்பாக இவ்விடயங்களுடன் அணுகும் போது பெண்கள் இரண்டாம் பட்சமாகவே நடத்தப்படுகிறார்கள். இவ்விடயங்களில் பார்க்கப்படும் கண்ணோட்டத்தின் காரணமாக பல பெண்கள் புகார் செய்யக் கூட முன்வருவதில்லை. பின்வாங்கவேண்டியுள்ளது. இவை மாறக்கூடிய சூழ்நிலை இன்னமும் ஏற்படவில்லை.

**ரமணி:-** பாலியல் வல்லுறவுக்கு ஆளானவள் அதன் பின் எடுக்கின்ற நடவடிக்கைகளின் போது கூட மிகுந்த கஷ்டங்களுக்கு உள்ளாக்கப்படுகிறாள். முதலில் நடந்த அனைத்தையும் பொலிஸ் நிலையத்தில் சொல்லவேண்டும். மீண்டும் பகிரங்கமாக நீதிமன்றத்தில் 'இப்படி இப்படித்தான் நடந்தது' என்பதை தெளிவுறுத்தவேண்டும். இது கடினமான காரியம். அதே போல் நடந்த அனைத்தையும் ஆணொருவருக்கு விலாவாரியாக எடுத்துச் சொல்வது என்பது பெண்களைப் பொறுத்தவரை மிகுந்த கடினமான காரியம். துரதிர்ஷ்ட வசமாக பொலிஸ் அதிகாரிகள் ஆண்களாக இருக்கின்றனர். வழக்கறிஞர்கள் ஜுரிகள் நீதிபதிகள் கூட ஆண்கள்தான். அதேபோல் ஜுரிகள் சபையில் கூட எப்போதுமே எட்டு அல்லது ஒன்பது பேர் ஆண்களாகவே காணப்படுகின்றனர்.

**குமி:-** இவ்விடயங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு கொள்கை வகுக்கின்ற சட்ட திருத்தங்கள் செய்கின்ற நிறுவனங்களைச் சேர்ந்த நபர்களுடன் கலந்துரையாடுதல் அவசியம். சமூகங்களுடனும் தொடர்பு சாதனங்களுக்கூடாக கலந்துரையாடுவது அவசியம். பொலிஸில் முறையிடுகின்ற பெண்களை பொலிசார் அவ் அபலைப் பெண் இக்காரியத்தை விரும்பியே செய்திருப்பாள் என்றே நம்புகின்றனர்.

**ஹேமந்த:-** பல சந்தர்ப்பங்களில் முறைப்பாடு செய்கின்ற பெண்ணுக்கு நியாயம் கிடைப்பதே இல்லை. ஏனெனில் பொலிஸ் நிலையத்திற்குச் சென்றாலும் அவமானம். அவ் அபலைப் பெண்ணை அவமானத்துக்குரியவளாகவும், வக்கிர கண்ணோட்டத்துடனும், இகழ்ச்சிக்குரியவளாகவும் நோக்குகின்றனர். அதன் பின்னர் பொலிஸ் அதிகாரிகள் கூட புகாரின்போது சொன்னவற்றை விட சொல்லாதவற்றையும் சேர்த்து சுவையாக பதிவு செய்து கொள்கின்றனர்.

**குமி:** பாலியல் வல்லுறவு விடயத்தில் பெண்ணுக்கு உடனடியாக ஞாபகத்திற்கு வரும் அபாயகரமான விடயம், பொலிஸ் நிலையம், வைத்தியசாலை, நீதிமன்றம் என்பனவையே இந்த மூன்று நிறுவனங்களும் இப்பெண்களை கருணையுடன் அணுகுவது அவசியம். இவர்களுக்கு எப்படி இப்பெண்களை அணுகுவது என்பது பற்றிய பயிற்சியினை அரசு வழங்குவது அவசியம்.

**சுனிலா:-** ஆசிய நாடுகளில் பலவற்றில் விவாகத்தின் போது பெண்ணின் கன்னித்தன்மை முக்கிய காரணியாக நோக்கப்படுகிறது. இலங்கையில் திருமணத்தின் போது வெண்மைத்துணி வைத்து குருதிக்கசிவை பார்த்து கன்னித்தன்மையை பரிசோதிக்கும் வழக்கம் இதற்கு சிறந்த உதாரணம். குறைந்த வயது பெண்கூட பாலியல் வல்லுறவுக்கு உள்ளாகமுடியும்.

ஒரு பெண் சட்டரீதியாச பிரிந்து போக முடிவெடுத்திருக்கும் சந்தர்ப்பத்தில் கணவனால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளானதை புகார் செய்ய சட்டத்தில் இடமில்லை. ஒரு பக்கம் அதற்கான சாட்சிகளை அப்பெண் முன் வைக்க வேண்டும். இன்னமும் எமது சட்டம் கணவனுக்கு ஏன் மனைவி மீது பாலியல் உறவு கொள்ளமுடியாது என்பதை ஏற்கிறதே. அதன்படி மனைவியானவள் கணவனின் பாலியல் இச்சைக்கு அவள் விரும்பாத போதும் எந்த சந்தர்ப்பத்திலும் எந்த நேரத்திலும் அனுமதிக்க வேண்டும் என்கிறது.



**ரமணி:-** பதினாறு வயதுக்கு குறைந்த பெண்பிள்ளையுடனான பாலியல் உறவை அது அவளது விருப்பத்துடன் செய்யப்பட்டாலும் விருப்பத்துக்கு மாறாக செய்யப்பட்டாலும் அதை பாலியல் வல்லுறவாகவே கொள்ள வேண்டும்.

**சுனிலா:-** இன்னுமொரு விடயமும் உண்டு. எமது சட்டத்தின்படி பெண்ணொருத்தி விவாகம் முடிப்பதற்கான குறைந்த பட்சவயதாக 12வயதைக் கொள்கிறது. ஒரு பெண்ணை 12 வயதில் விவாகம் புரிய அனுமதிக்கிறோமென்றால் நாங்கள் சட்ட ரீதியாகவே பாலியல் வல்லுறவை அனுமதிக்கிறோம் என அர்த்தம். எனவே விவாகம் புரிவதற்கான குறைந்தபட்ச வயதாக 16ஐக் கொள்ளுமாறு நாம் போராட வேண்டும்.

**ரமணி:-** 16 வயதுக்குட்பட்ட பெண்பிள்ளையொருவர் வல்லுறவுக்குள்ளாதல் குற்றவாளிக்கு ஐந்து தொடக்கம் இரண்டு வருட சிறைத்தண்டனை வழங்கப்படுகிறது. இச்சிறைத்தண்டனை ரத்து செய்யும் அல்லது இடைநிறுத்தும் அதிகாரம் நீதிபதிகளுக்கு இருக்கக்கூடாது. மேலும் வல்லுறவுக்குள்ளான பெண்ணுக்கு குற்றவாளியினால் நட்டஈட்டையும் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் புதிய சட்ட திருத்தங்கள் ஆக்கப்பட வேண்டும்.

**புஷ்பா:-** பாலியல் வல்லுறவுச் சம்பவங்களெல்லம் நிச்சயம் ஆவணப்படுத்த வேண்டியது அவசியம். ஏனெனில் அவை தொடர்பான நடவடிக்கைகள் எடுப்பதற்கும்; இனிமேலும் நடக்காமல் தடுப்பதற்கும் அது துணைபுரியும்.

**ஹேமந்த:-** இன்று பாலியல் வல்லுறவு புரிகின்ற ஒருவன்; நாளை, நீதிமன்றத்தில் வீரனாகிறான். இப்படிப்பட்ட ஒருவன் எப்படி வீரனாக முடியும் என்பதை என்னால் பொறுக்க முடியவில்லை. இச்செயலை பல சந்தர்ப்பங்களில் தொடர்பு சாதனங்களே புரிகின்றன.

**புஷ்பா:-** கடந்த காலங்களில் தகப்பன் மகளை பாலியல் வல்லுறவு புரிந்த விடயங்கள் பத்திரிகை வாயிலாக பேசப்பட்டது. இதே போன்ற செய்திகள் மீண்டும் மீண்டும் வாசிக்கப்படும் போது இவை சர்வசாதாரணமானது எனும் மனோநிலை சமூகத்தில் உருவாகப் பார்க்கிறது. இச்செய்தியின் அருவருப்புத்தன்மை போய்விடுகிறது. இச்செய்தியின் முக்கியத்துவம் இழக்கப்பட்டு இதே குற்றத்தை தூண்டவும் செய்கிறது.

**சீதா:-** பாலியல் வல்லுறவுக்குள்ளான பெண்ணை அனுதாபத்துக்குரியவளாக்கி பிரச்சாரம் செய்வதன் மூலம் அவருக்கு பெரும் வதையைக் கொடுக்கின்றனர். ஆண் சார்ந்த தொடர்பு சாதனங்கள் இச் செய்கையின் மூலமாக லாபமடையப்பார்க்கின்றன. இச்சம்பவம் பற்றி பிரசுரிக்கும் போது வல்லுறவுக்குள்ளான பெண்ணின் புகைப்படமே பெரும்பாலும் பிரசுரிக்கப்படுகிறது. இச்செயல், பெண்ணின் தரப்புக்கே மேலும் பாதிப்பைக்காட்டச் செய்கிறது. உண்மையில் நாங்கள் இனி குற்றவாளியை பகிரங்கப்படுத்தி 'இவரிடமிருந்து ஜாக்கிரதையாக இருங்கள்' எனும் செய்தியை தெரிவிக்க வேண்டும். குற்றவாளியின் புகைப்படம் அனேகமாக பிரசுரிக்கப்படுவதேயில்லை. பெண்ணை பகிரங்கப்படுத்தி சமூகத்தால் அவமானப்படுத்தச் செய்ய இடமளிக்க கூடாது.

**ஹேமந்த:-** சந்தரேகா வழக்கின் போது தொடர்புச் சாதனங்கள் சரியாக நடந்து கொண்டன. அவ்வழக்கின் போது பத்திரிகைகள் கையாண்ட முறை இன்னும் பல வழக்குகளுக்கு வழிகோலியது. இது நல்ல தருணம்.

**சீதா:-** எமது சட்டமானது பெண்கள் எப்போதுமே துன்பத்துக்குள்ளாகின்ற விதத்திலும் ஆண்கள் வீரர்களாகி மீண்டும் சமூகத்திற்குள் சகஜமாகக் கூடிய விதத்திலுமே உள்ளது. எனவே வல்லுறவுக்குள்ளாகும் பெண்களுக்கு ஏதுவாகக் கூடிய விதத்திலான சட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

**ஹேமந்த:-** ஐரோப்பிய நாடுகளில் பாலியல் குற்றங்களை உயர்ந்த குற்றமாக சமூகத்தால் நோக்கப்படுகிறது. அக்குற்றத்தைப் புரிந்தவனை இகழ்ச்சிக்குள்ளாக்குகின்ற பொறுப்பை சமூகம் ஏற்றுக்கொள்கிறது. சில நேரங்களில் நீதிபதியின் தவறான தீர்ப்புக் கெதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலங்களை நடத்துவதையும் நாங்கள் காண்கிறோம். எனவே இப்படியான எதிர்ப்புகளுக்கூடாக சமூகத்தினது விழிப்புணர்வை வளர்க்கச் செய்யலாம்.

அவளது உடலின் உரிமை அவளுக்கே!
அவளுக்கு படும் ஒவ்வொரு அடியும் சமூகத்துக்கு படுகின்ற அடிகள்!
மனித உரிமைகளும் அவளது உரிமைகளே!

www.tamilarangam.net



# ஒரு ஆர்ஜென்டினா இசைக்குயில்

"அத்தாகுவால்பா யுப் பாங்குவி" ஆர்ஜென்டீனக் கவிஞரும் இசைமேதையுமாவார். இவரது இயற்பெயர் ஹெக்டர் ரொபர்ட்டோ சாவரோ என்பதாகும். இவரது தாய் பாஸ்க் இனத்தவர். தந்தை சிவப்பிந்தியர்.

ஸ்பானியப் படை எடுப்பாளர்களை எதிர்த்து தீரத்துடன் போரிட்ட இரு சிவப்பிந்திய தலைவர்களின் பெயர்களை ஒருங்கிணைத்து தனக்கு அத்தாகுவால்பா யுப்பாங்குவி எனப்புனை பெயரிட்டுக் கொண்டார். இந்தப் புனை பெயரிலேயே 1500க்கும் மேற்பட்ட கவிதைகளையும் பாடல்களையும் இவர் எழுதினார்.

இவரது படைப்புக்கள் சிவப்பிந்தியர்களிடமும் தென் அமெரிக்கா மக்களிடமும் இவர் கொண்டிருந்த ஆழமான பற்றுணர்வை வெளிப்படுத்தின. கல்லும், முள்ளும் நிறைந்த தன் வாழ்க்கையையும் அதன் கண்ணோட்டத்தையும் தனது கணீர் என்ற குரலில் அனைத்து நாட்டு மக்களுக்கும் பாடிக் காட்டினார்.

தென் அமெரிக்க மரபு என்னும் ஆழமான நீரோட்டத்தின் வழி வந்த யுப்பாங்குவி இளமையில் மருத்துவம் பயில பெரிதும் ஆசை கொண்டிருந்தார். ஏழ்மை அவரை விடவில்லை. கித்தார் வாசித்து தனது பொழுதுகளை ஓட்டிக்கொண்டிருந்தார். அப்பொழுது இசை அவருக்கு தற்காலிகமான ஒரு பொழுது போக்காகவே இருந்தது. பின்னர் தனது முதலாவது இசைப்பாடலை இயற்றிக் கொண்டு தலைநகருக்குச் சென்றார். ஆனால் அவரை அங்கு யாரும் கண்டு கொள்ளவில்லை. அவர் சொல்கிறார்; பிறகு ஒரு நாள் உள்நாட்டுப் பகுதிகளுக்கும், மலைப்பகுதிகளுக்கும், சம வெளிகளுக்கும் கலப்பினக் குதிரை வீரர்களும் உழவர்களும் வாழும் என்ரே ரியோஸ் கோர்வோபா, குக்குமான் மாநிலங்களுக்கும் சென்றேன். பின்னர் பொலிவியாவுக்கும் பெருவுக்கும் சென்றேன். அங்கு என் இசைப்பயிற்சிக்கு வேறு தீனிகள் நிறையக்கிடைத்தன. பெருவில் சோகப்பண்புகளையும், ஒப்பாரிப்பண்புகளையும் ஏராளமாகக் கற்றுக்கொண்டேன். பொலிவியாவியாலும் நிறைய இசைப்பாடல்கள் கிடைத்தன. இவை எனது நாடுகளையும் மக்களையும் நன்கறிந்து கொள்ள வெகுவாக உதவின. இப்பொழுது என் இசையைக் கேட்க மக்கள் ஆயத்தமாக இருந்தார்கள்".

தன் வாழ் நாள் முழுவதும் பயணம் செய்து கொண்டிருந்தார் யுப்பாங்குவி,

"திறந்த வெளிச்சாலைதான் எனது பல்கலைக்கழகம் அங்குள்ள தனிமையில் தான் நான் பட்டம் பெற்றேன். அனுபவம் தான் எனக்கு ஆசான். தென்அமெரிக்காவின் நீள அகலத்தை என் கால்கள் அளந்திருக்கின்றன. ஒவ்வொரு நாட்டிலும் கிராமம் கிராமமாகச் சென்றேன். ஒவ்வொரு சத்திரங்களுக்கும் போனேன். அங்குள்ள மக்களையும் அவர்களின் உணவு முறைகளையும் விழாக்களையும் அவர்களின் துயரங்களையும் பாடல்களையும் ஈமச்சடங்குகளையும் ஒன்று விடாமல் ஆராய்ந்து அறிந்து கொண்டேன்". என்று பெருமிதத்துடன் சொல்கிறார்.

இவ்வாறு வேறுபட்ட தேசிய இனப்பண்பாடுகளைக் கொண்ட நாடுகளின் எல்லைக்குள் அவர் உரையாடித்திரிந்த போதும் இந்த எல்லைகள் யாவற்றையும் ஒரே மாதிரியான நாட்டுப்பற்றுடன் தான் அவர் நோக்கினார். தென் அமெரிக்க மாநிலத்தின் எல்லா நாடுகளையும் ஒரே நேசமுடன் பார்க்க அவருக்கு எப்படி முடிந்தது? அவரைக் கேளுங்கள் அவர் இப்படிச் சொல்வார்... "எல்லாவற்றையும் நான் சிவப்பிந்தியன் என்ற கண்ணோட்டத்திலேயே நோக்கினேன். நம் கண்டத்து மக்களில் பெரும்பாலானவர்கள் தாங்கள் சிவப்பிந்தியர் என்பதை மறந்து விடுவார்கள். நான் அப்படிச் செய்யவில்லை. நான் ஒரு சிவப்பிந்தியன் என்பதைப் பெருமையோடு கூறிக்கொண்டேன்"

நாடுகளிடையேயான எல்லைக்கோடுகள் அரசியல்வாதிகளுக்கு தீனிபோட்டுக் கொண்டிருக்கின்றன. பூசல்களுக்கு காணரமாக இருக்கின்றன. ஆனால் யுப்பாங்குவி போன்றவர்களுக்கு அப்படி இல்லை.

திறந்த வெளிச்சாலை, மக்களின் வறுமை, நாங்கள் சுவாசிக்கும் காற்று, பசியை தணிக்கும் பூசனிக்காய்ப் பற்றைகள் இயற்கை, மக்களின் பண்டைய புராணங்கள், இவையாவும் எல்லைகடந்து பிணைந்திருப்பதாக அவர் கருதுகிறார்.

யுப்பாங்குவியின் இளமைக்காலத்தில் யுப்பாங்குவியின் தாத்தா பின்வருமாறு கூறுவாராம். "என் பேரா! இந்தச் சமவெளியில் எல்லைகள் தாண்டி எங்கும் பறக்கிற எங்களது வெண்நாரைகள், ஏரி நீரின் மேல் அலைகிற நாணல்களில் நிலவின் ஒளி பட்டுத் தெறிக்கும் போதுதான் முட்டைகளில் இருந்து குஞ்சுகளாய்ப் பிறக்கின்றன"

தனக்கு தெரிந்த அனைத்து மக்களின் பாடல்களில் இருந்தே தெரிந்து கொண்ட யுப்பாங்குவியின் கல்வி, மரபும் புராணமும் கலந்த



ஒரு கலவையாகவே இருந்தது.

இசையும் கவிதையும் எந்தக் கட்சியையும் அல்லது அரசாங்கத்தையும் சார்ந்ததல்ல என்பதால் அது உலகுக்கு உதவ முடியும் என்று யுப்பாங்குவி கருதுகிறார். இதன் வழி உலகப் பண்பாடு என்பதை உலகம் முழுவதும் தழுவி நின்று மனித குலத்தை உன்னத பீடத்திற்கு உயர்த்தும் நன்னெறிகளின் ஒட்டு மொத்த தொகுதியாக அவர் காண்கிறார்.

இத்தகைய பண்பாட்டை உருவாக்குவதில் கலைஞர்களின் பணிபற்றி அவர் தன்னைப் பற்றி பின்வருமாறு கூறுவதில் இருந்து உணரலாம். அவர் கூறுகின்றார்:

"என்னால் இயன்றவரை உலகம் தழுவிய முறையில் மனிதர்களின் அழுகையையும் பாசத்தையும் சித்திரிக்கும் தூய பண்ணிசைகளை துயரங்களைக் காண்கையில் துயரடைகிறேன்.

அவர்களைச் சுரண்டுவதைக் காணும் போது கோபம் கொள்கிறேன். அவர்கள் நடனமாடுவதையும் அவர்களின் கண்கள் நம்பிக்கையால் ஒளிவிடுவதையும் காண்கையில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன்.

நான் எனது படைப்புக்களை உருவாக்குவதில்லை. முதலில் அந்தப்படைப்புக்களை நான் வாழ்ந்து பார்க்கிறேன். ஆனால் எனது மண்டலத்தின் பாடல்களிலும் கவிதைகளிலும் ஒரு வல்லுனராக அல்லது ஒரு தொழில்முறை வித்தகராக ஆவதை நான் தவிர்த்திருக்கிறேன். அதை ஒரு போதும் விரும்பியதில்லை".

அத்தாகுவல்பா யுப்பாங்குவி இன் இசையும் கவிதையும் தென் அமெரிக்க மண்டலத்தின் பண்பாடுகளின் இனக்குழப்பங்களின் ஒருங்கிணைப்பில் உருவான உன்னதமான ஒரு கலையாகும்.

அத்தாகுவால்பா யுப்பாங்குவி "சாரங்கோ" என்னும் தங்களுடைய இசைக்கருவியை மேற்கூறிய பண்பாடுகளின் கலப்பின் இசைக்கருவி என்று கூறுகிறார்.

ஒரு வகையான கித்தார் போன்ற இந்த இசைக்கருவியில் ஆழ்ந்த உணர்ச்சிகளையும் அனுபவங்களையும் கட்டுக்கடங்காத காற்று விடிகாலை, ஆகியவற்றின் மௌனமான மொழியினையும் வெளிப்படுத்தலாம் என்றும் கூறுகிறார். அந்த இசைக்கருவியை இசைக்கும் போது குடியேற்ற ஆதிக்கம் மறைந்து விடுகிறது. சுதந்திரத்தின் பொன் வண்ணம் மலை முகடுகளை ஒளிமயமாக்குகிறது. பூமி தனது செம்பு நிறச்சேய்களை அழைத்து "என்னருமைச் சிவப்பிந்திய பிள்ளைகளே! என்னை மறந்து விடாதீர்" எனக் கூறுவார்.

மூன்றாம் உலகின் இன்றைய சிக்கல்களையும் மனிதர்கள் அனைவருக்குமே தலைக்குனிவை ஏற்படுத்தும் அதன் சகிக்க முடியாத நிலையினையும் உலகுக்கு எடுத்துக் கூற வேண்டும் என்றால் நாம் கடந்த காலத்துக்கு சென்று நம் மூதாதையரைத் தேடி அங்கு ஆழ வேரூன்றி இருக்கும் பண்ணிசைகளைக் கேட்க வேண்டும் என யுப்பாங்குவி சொல்கிறார்.

"பாடல்களைக் கேட்கும் மக்கள் உண்மை நிலையை முழுமையாக அறிந்து கொள்ள விரும்புகிறார்கள்.


"நீ உன்தாய், தந்தை. குடும்பம் அண்டை அயலார் பற்றிக் கூறு! உன் நாடு கேவலமாக அடிமைப்படுத்தப்படுவதற்கு முன்பிருந்த உன்நாட்டின் அழகை விவரி!! அந்த நாட்டை இழந்ததற்கு வேதனைப்படுகிறாய் அல்லவா? அந்த வேதனையை மக்களுக்குச் சொல்!!!" என யுப்பாங்குவி உணர்ச்சியுடன் கேட்கிறார்.

யுப்பாங்குவி மரணமடையும் போது அவருக்கு வயது 83. 92ம் ஆண்டு நவம்பர் மாதம் அவர் மரணமானார்.

"இந்தப்பூமியின் மீது நடக்கிறோம் நடந்து களைத்ததும் அவனடியில் அடைக்கலம் புகிறோம்" எனக் கூறிய ஆர்ஜென்டீன இசைப் பாடல் மேதை யுப்பாங்குவி எமது தேசத்து படைப்பாளிகளால் அறிந்து கொள்ளப்படத் தானே வேண்டும்.

நி.பி.என்

---




என்
மனிதத்திற்குள்
ஆக்ரமித்த
அந்நியம்......
ஓர் புல்லின்
முனைவு கூட
வெட்டரிவாளாக
என்னிலிருந்து
அந்நியப்படுத்தப்படுகின்றது.............

எல்லாமே பயங்கரமாக இருந்தது. சுற்றிவர சிவப்பு நிறமான இருட்டு. இருட்டு சிவப்பாக இருக்குமா எனத்தெரியவில்லை. ஆனால் இருந்தது. அண்ணாந்து பார்க்க சிகப்பு இருட்டிற்குள் கறுப்பாக சூரியன் எரிந்தது. நான் நகர்ந்து கொண்டு இருக்கும் கியூ வரிசையில் என் முன்னால் மனிதர்கள் என அழைக்கப்பட்டவர்கள் நகர்ந்து கொண்டிருந்தனர். என் கால்களும் நகர்ந்தன. எனது முறை வந்தது.

என்னை அடையாளப்படுத்திவிட்டு அடுத்த இடத்திற்குச் செல்கையில் அங்கு நின்றவர்கள் என் கைவிரலில் எதையோ பூசினார்கள். கறுப்பாக - காய்ந்து போன இரத்தக்கட்டியை கரைத்துப்பார்த்தால் வரும் நிறம்போல இருந்தது. அதன் நிறம். மணந்து பார்த்தேன். அதன் நெடி அருவருப்பாக இருந்தது. இறந்துபோய் பல நாட்களான பல்லியின் நாற்றம் போலவும் அல்லது காய்ந்து போன கிளிசறியா பூவினைக் கசக்கினால் வரும் நெடியைப் போலவும் இருந்தது அது. நான் மௌனமாக வாக்குசீட்டைக் கையில் பற்றியவாறு அவர்கள் காட்டியவாறு அவர்கள் காட்டிய மறைப்புக்குள் சென்றேன். என் வாக்குச்சீட்டில் இருந்த சின்னங்கள் என்னைப் பார்த்து முறைத்தன. என்னை விழுங்கி விடுவதாகவும், கண்களைக் கடித்துக் குதறிவிடுவன போலவும் என்னைப் பார்த்து முறைத்தன. எனக்குப் பயமாக இருந்தது. கைகள் நடுங்க ஏதோ ஒரு சின்னத்திற்கு புள்ளடி போட்டுவிட்டு நிமிர்ந்தேன். அந்த மறைப்பிற்கு ஆயிரம் ஆயிரம் கண்கள் உள்ளதாகப் பட்டது. ஒவ்வொரு கண்களும் என்னைக் கொலை செய்வது போல பயம் காட்டின.

வெளியே வந்த நான் வீடு நோக்கி தள்ளாடியபடி நடந்தேன். பயங்கரமான ஒரு காரியம் செய்துவிட்டு நடப்பது போல இருந்தது. அந்தத் தள்ளாட்டம் தெருவில் எல்லோரும் அப்படியே தான் தள்ளாடுவதாகத் தோன்றியது.

நடுநிசி
இரவு 11.59
தட், தட், தட்......

வாசல் கதவு வேகமாகத் தட்டப்பட்டது.

வெளியில் முகம் எல்லாம் வெளியேறிப் போய் இறுக்கமான தோற்றத்துடன் சிலர் நின்று கொண்டிருந்தனர். அவர்களின் வாயில் சிகப்பாக ஏதோ வழிந்து கொண்டிருந்தது. அது மனித இரத்தமாகவோ அன்றில் ஒரு பெருச்சாளியின் இரத்தமாகவோ இருக்க வேண்டும் என ஊகித்தேன்.

என்னை இடித்தவாறு உள்ளே வந்தனர். நான் "யார் ..... நீங்கள்?" எனக்கேட்டேன். என் குரல் கம்மியிருந்தது. கழுகின் வாயில் அகப்பட்டுக் கொண்டு கிளிக்குஞ்சின் முனகல் போல் என் குரல் இருந்தது. அவர்கள் என்னை உற்று நோக்கினர். நோக்குதலில் அந்நியமும் ஆபாசமும் இருந்தது. ஓநாய் ஒன்று வெறிபிடித்து அலறுவது போன்று பேசினர்.

" நாங்கள் வென்றவர்கள்", " வென்ற அரசியலாளர்கள்" என்றனர். " நீயும் எம்மைக் வெற்றி கொள்ள வைத்ததில் பங்கேற்றிருப்பாய் என நம்புவதால் வெற்றியை உன்னுடன் பகிர்ந்து கொள்ள வந்துள்ளோம்" என்றனர். அவர்கள் மிகவும் வேகமாக பேசினர். அவர்களின் கழுத்தில் மாலைகள் இருந்தன. அதில் சில மனித மண்டை ஓடுகளாகவும் சில உடும்பின் தலைகளாகவும் தோன்றுவது போல இருந்தன. நான் முற்றிலும் பயத்தால் சூழப்பட்டிருந்தேன். உதடும் வியர்த்துக்கொண்டது.

அவர்கள் தம் கையில் ஒரு கிளாஸ் எடுத்து அதற்குள் எதையோ ஊற்றினார்கள். சிவத்த இரத்தம். ஒரு பச்சிளம் குழந்தையின் இள இரத்தம் போல் இருந்தது. ஈமோகுளோபின் செறிந்து கடும் சிகப்பாக பிரகாசமாக இருந்தது. ஒரு வகை வெடில் மணம் மணந்தது. என்னால் அதனைக் குடிக்க முடியவில்லை. குடிக்க விரும்பவும் இல்லை. ஆனால் அவர்கள் பலவந்தமாக எனக்குப் பருக்கினார்கள். இருகைகளையும் இறுக்கப்பிடித்து, வாயை விரலால் இடுக்கிக் கொண்டு அதனை வாயில் ஊற்றினார்கள். நான் திணறித்திணறிக் குடித்தேன். புரைக்கேறியது. அவர்கள் விடுவதாக இல்லை. எனது ஆடைகளை களைந்தார்கள். அவர்களும் தமது ஆடைகளைக் களைந்தார்கள். அவர்களது உடலில் ஆண்குறியும், பெண்குறியும் இருந்தன. என்னுடன் பின்பக்கமாகவும், முன்பக்கமாகவும் பலவந்தமாக புணர்ந்தார்கள். நான் ஏன் ....... ஏன் ? எனக்கத்தினேன். அதற்கு அவர்கள் " நாம் செய்வதை ஏன் என ஏதிர்த்துக் கேட்காதே. நாம் எதுவும் செய்வோம். மறுப்புக்குரல் கொடுக்காதே. நாம் தருவதைப் பெற்றுக்கொள். செய்வதை ஏற்றுக்கொள். கூறுவதைக் கேட்டுக்கொள்" எனக்கடுமையாக எச்சரித்தனர். அவர்களின் கடுமையில் இனம் காண முடியாத குரூரமும் , பகையும் , அந்நியமும் கிடந்தன. மீண்டும் புணர்ந்தனர். என்னிலிருந்து குருதியும், விந்தும் வழிந்தன. வலி உயிர்போனது. ஐயோ.... ஆ..... அம்மா..... எனக்கத்தினேன். விழிப்பு வந்தது.

என்கனவு கலைந்து சுற்றுப்புறச்சூழ்நிலை பிடிபடத்தொடங்கியது. கிழிந்த பாயிலிருந்து எழும்பி உடலை முறுக்கியவாறு குந்திக் கொண்டு யோசித்தேன். இன்று காலை வாக்குச்சாவடிக்குப் போய் வாக்களித்தது நினைவுக்குவர கனவின் காரணம் புரிந்தது போலவும், புரியாதது போலவும் பட்டது.

வெளியே , பக்கத்துவீட்டு லம்போர்ட் பெரேராவின் வானொலியில் தேர்தல் முடிவுகள் வெளியாகிக் கொண்டிருந்தன. அதைக் கேட்க மனமின்றி மீண்டும் படுத்து கழுத்து வரை போர்த்திக்கொண்டேன். மீள நித்திரை வர மீள அதே கனவு வந்தது. ஆனால் வந்தவர்கள் வேறு ஒரு கூட்டம். வேறு நிற ஆடைகள். இவ்வாறே அதே கனவு வெவ்வேறு கூட்டத்தா ராக வந்துகொண்டு இருந்தது அதைத் தடுக்க இயலாமல் மீள மீளத் தூங்கிப் போனேன்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கூத்தின் அரசியல் என்ன?

## மட்டக்களப்பு கூத்துக்களின் அரசியல் பரிமாணங்கள் (நிகழ்வும் -ஆய்வும்) கருத்தரங்கிலிருந்து



க. சிவரஞ்சனி,
கிழக்குப் பல்கலைக்கழகம்

'மட்டக்களப்புக் கூத்துக்களின் அரங்கியற் பரிமாணங்கள்' (நிகழ்வும் - ஆய்வும்) என்ற தலைப்பிலான கருத்தரங்கு 1995 டிசம்பர் 29,30,31ம் திகதிகளில் சுவாமி விபுலாநந்தா இசைநடனக்கல்லூரியில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கு பாரம்பரிய, நவீன நாடக பிரக்ஞையுடையவர்களுக்கு பயன் மிக்கதாக அமைந்திருந்து.

இம்மூன்று நாள் கருத்தரங்கின் அமைப்பினூடாக இக்கருத்தரங்கின் நோக்கத்தினை வரையறைசெய்ய முடியும். அதாவது முதலாம் நாள் மட்டக்களப்புக் கூத்துக்கள் பற்றி ஒரு அறிமுகத்தைக் கொடுப்பதும், இரண்டாம் நாள் இக் கூத்துக்களின் உள்ளார்ந்த அம்சங்களை விளங்கிக் கொண்டு மூன்றாம் நாளில் ஏற்கெனவே நிகழ்ந்த இரு நாட்களைப் பற்றிய தெளிவுடன் நவீன நாடகம் பற்றிச் சிந்திக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டது எனலாம்:

இக்கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள் அனைவருக்கும் மட்டக்களப்பிலிருந்து கூத்து மறைந்து விடாமல் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கம் இருந்த போதும் இந் நோக்கை அடைதல் பற்றி சிந்திப்பதை வைத்து இவர்களை நான்கு பிரிவாக பிரிக்க முடியும்.

1. கூத்தில் மாற்றம் செய்யாது அப்படியே இருக்கவும் வேண்டும். அதேவேளை மறைந்து விடாமல் பாதுகாக்கவும் வேண்டும். நாம் எமது நவீன அரங்கை மேற்கில் அரங்கு வளர்ந்த பரிணாமம் போன்ற படிநிலையினூடாகப் பெறுவோம் என்ற கருத்துடையவர்கள்.

2. கூத்து வடிவத்தை அப்படியே எடுத்து அதன் புராண இதிகாச உள்ளடக்கத்தை மாற்றி சமகாலப் பிரச்சினையை சேர்த்து கூத்தினை இயங்கச் செய்யும் போது அது எமது நவீன நாடகமாகவும் இருக்கும் என்ற கருத்துடையவர்கள்.

3.கூத்தின் தேவையான இடங்களில் திருத்தம் செய்து ஓர் செந்நெறிக்கலையாக மாற்ற வேண்டும். இதனை நிறுவன ரீதியாக பயிற்சியளிப்பதற்கும், கற்பிப்பதற்குமான நிறுவனங்களை உருவாக்க வேண்டும். இதிலிருந்து முகிழ்ப்புப் பெறும் கலைவடிவங்கள் எமது கலாசார கலை வடிவங்களாகவும் இருக்கும். அத்துடன் எமது கலாசார விடயங்களை அலங்கரிக்கின்ற புற விடயங்களுக்கும் கூத்தினை கையாளுதல் வேண்டும் எனும் கருத்துடையோர்.

4. கூத்தின் ஆடல், பாடல், தாளக்கட்டு, என்பன பற்றி நாம் அறிந்து அதனை நாடகத்தின் பொருத்தப்பாடான இடங்களில் பயன்படுத்துவதன் மூலம் கூத்தின் மூலங்களும் மறையாது நவீன நாடகம் ஒன்றை உருவாக்கவும் முடியும் எனும் கருத்துடையவர்கள்.

இந் நான்கு பிரிவினரையும் இரு வகையான தத்துவப்பிரிவுக்குள் அடக்கலாம்.

1) 1ம், 2ம் கருத்துடையோர் உலக நோக்குப் பற்றிய இயக்க மறுப்பியல் தன்மை கொண்டவர்கள். ஏனெனில் மாறுகின்ற சமூக, பொருளாதார நிலைமையினையும், வெகுஜன தொடர்புச் சாதனங்களின் பல கலாசாரத் தாக்கத்தையும், தொழில்நுட்பக் கலைகளினால் சமூகத்தில் ஏற்பட்டுள்ளபோக்கையும் கண்டுகொள்ளாது அதாவது மொத்தத்தில் இத்தகைய காரணிகளால் ஏற்படுகின்ற சமூக மாற்றத்தை விளங்கிக்கொள்ளாது எப்போதோ நிலவிய சமூக பொருளாதாரத்துக்கு பொருத்தப்பாடாக இருந்த கூத்து இப்போதும் பொருத்தப்பாடாக இருக்கும் என நம்பி செயற்படுவதினால் இந்த நிலை ஏற்படுகின்றது.

2வது பிரிவினரின் சிந்தனை மேலோட்டமாக இயக்கவியல் தன்மையை காட்டி நின்ற போதும் காலம் கடந்துதான் ஞானம் பெற்றவர்களாகவும், குறிப்பிட்ட நிலைக்குப் பின் கூத்தின் வளர்ச்சிபற்றி அடுத்த கட்டத் தெளிவு இல்லாதவர்களாகவும் முரண்பாடு என வரும் போது 1ம் வகை சிந்தனையாளருடன் சமரசம் செய்து கொள்ளக்கூடியவர்கள்.

2) 3ம், 4ம் கருத்துடையோர் உலக நோக்குப் பற்றிய இயங்கியல் தன்மைகொண்டவர்கள். ஏனெனில் மாறுகின்ற சமூகத்துக்கு ஏற்ப அதனை மாற்றி அச்சமூக தேவைக்கும், ரசனைக்குமாக ஆக்கும் முயற்சியில் அக்கறையுடையவர்கள்.

4ம் கருத்துடையோர் பூரண இயங்கியல் தன்மை கொண்டவர்கள் அல்ல. வரலாறு பற்றிய பின்னோக்கிய பார்வையும், நிகழ்காலத்தில் சரியான தளமும் இன்றி அதிதீவிர போக்குடையோர். ஆனால் சமூக மாற்றத்தினை விளங்கிக்கொண்டவர்கள். அத்துடன் முரண்பாடு என வரும் போது 3ம் கருத்துடையோருடன் சமரசம் செய்து கொள்ளக் கூடியவர்கள்.

எனவே இவர்களில் 3ம் கருத்துடையோர்கள்தான் எல்லாவற்றையும் உள்ளடக்கிய வலிமையான சிந்தனை கொண்டவர்கள். இவர்களின் சிந்தனைக்குள் 1ம் கருத்துடையோரின் அம்சமும், 2ம் கருத்துடையோரின் அம்சமும், 4ம் கருத்துடையோரின் அம்சமும் உட்கிடையாக இருப்பதைக் காணலாம். இவ்விளக்கம் கூத்தின் எதிர்காலம் பற்றி இங்குள்ளவர்களின் சிந்தனைப் போக்குப் பற்றிய அறிதலுக்கும் விஞ்ஞானத் தன்மையானதை ஏற்றுக்கொண்டு மற்றவற்றை நீக்கிசரியான பாதையினை தேர்ந்தெடுப்பதற்கும், இக்கருத்தரங்கில் தென்பட்ட கற்பனாவாத நிலையினை அடையாளம் கண்டுகொள்வதற்கும் உறுதுணையாக இருக்கும் என்பதற்காகவே விபரிக்கப்பட்டது.

1. கூத்தின் மூலம் பற்றிய தத்துவப் பின்னணி என்ன?

2.கூத்தின் அரசியல் என்ன?

3. எமது நவீன அரங்கு எது? என்பனவே கருத்தாளப்பட்ட மூன்று முக்கய விடயங்களாகும்.

முதல் இரு கேள்விகளும் மௌ. சித்திரலேகா அவர்களால் எழுப்பப்பட்டன. கூத்தின் மூலம் பற்றிய தத்துவப் பின்னணி என்ன எனும் வினாவுக்கான விடை 1960க்குப் பின் ஒலிக்கத்தொடங்குகிறது. வடமோடி, தென்மோடி எனும் பெயர்க்காரணம் பற்றிய சர்ச்சையினாலே இவ்விடயம் மேலெழுந்தது. 'மட்டக்களப்புக் கூத்தின் ஆய்வுச்சிக்கல்கள் எனும் தலைப்பில் கலாநிதி சி. மௌகுரு அவர்கள் வடமோடி, தென்மோடிக்குரிய பெயர்க்காரணம் என்ன? எனும் சிக்கலை சுட்டிக்காட்டுகின்றார்.

இது பற்றிய கருத்துக் கூறியவர்களில் சிலர் ஆரியக்கூத்தை வடமோடி என்றும், தமிழ் கூத்தை தென்மோடி என்றும் வகைப்படுத்தினர். இன்னும் சிலர் கதகளி, யட்சகானம், தமிழ் நாட்டுத் தெருக்கூத்து ஆகியவற்றில் காணப்படும் அம்சங்கள் வடமோடி, தென்மோடி என்பவற்றிலும் காணப்படுவதால் காலத்துக்குக் காலம் இலங்கையில் வந்து குடியேறியவர்களின் மூலம் யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு அங்கிருந்து மட்டக்களப்புக்கு வந்தது என்பர்.



இக்கருத்துக்கள் மட்டக்களப்புக் குடிகளின் தேசிய இருப்புக்கு ஒரு அச்சுறுத்தலாகும். யாழ்ப்பாணத்தை விட நிலப்பறி கொடுத்தலும் அதற்கு எதிரான பூர்வீக இருப்புப்பற்றிய பிரக்ஞையுடன் குரல்கொடுத்து நெருக்குதலுக்குள்ளான இச்சமூகத்துக்கு இக்கருத்துக்கள் குருட்டுத்தனமானதாகும். இயக்க மறுப்பியல்வாதிகள் இவற்றில் எத்தகைய உண்மையையும் காணாது மட்டக்களப்பில் தோற்றம் பெற்ற பூர்வீக கலைவடிவம்தான் இக்கூத்துக்கள் என்கின்றனர்.

இக்குடியேற்றங்கள் மூலமே வடமோடி தென்மோடி மட்டக்களப்புக்கு அறிமுகப்படுத்தப்பட்டதென்றால் மட்டக்களப்பில் பூர்வீக சமுதாயம் எதுவும் இருக்கவில்லையா? எனும் வினாவை இயக்கவியல்வாதிகள் எழுப்பினர். ஏனெனில் பூர்வீக சமுதாயம் ஒன்று வாழ்ந்து வளர்ந்துகொண்டிருக்கும் போது அச்சமூகம் தனக்கான கலை மரபுகளையும் வளர்த்துக்கொண்டு செல்லும் என்பது சமூகவியல் ஆய்வாளர்களின் முடிவாகும். பூர்வீக சமூதாயம் ஒன்று வாழ்ந்தது என்பதற்கு இன்று மட்டக்களப்பு நாட்டாரியல் வாழ்க்கையில் காணப்படும் சடங்குகளும், சில பழக்கவழக்கங்களும்சான்றாகும். இந்த நிலையில் மட்டக்களப்பு பூர்வீக சமூகத்தின் கலை வடிவம் எத்தகையது?

சமூகவியல், மானிடவியல் ஆய்வுகளின் படி வெவ்வேறுபட்ட பிரதேசங்களில் காணப்படும் சமனான பொருளாதார சமூக வளர்ச்சிகள் சமனான கலை வடிவங்களைத் தோற்றுவிக்கும் அவற்றுக்கிடையில் ஒற்றுமை காணப்படுவது இயல்பு. எனவே இந்தியா, இலங்கை ஆகிய பிரதேசங்களில் காணப்பட்ட சமனான பொருளதார சமூக வளர்ச்சிகள் சமமான கலைவடிவங்களை தோற்றுவித்திருக்கலாம். இந்த நிலையில் குடியேற்றங்கள் ஏற்பட்டபோது அங்கிருந்து வந்த மரபு இங்கிருந்த மரபுடன் இணைந்து ஒரு வளமான கலை வடிவத்தை தோற்றுவித்திருக்கலாம். அந்தக் கலைவடிவம்தான் வடமோடி, தென்மோடி கூத்துக்களாக இருக்கலாம் எனும் கருத்துப்பட மௌ. சித்திரலேகா அவர்கள் குறுப்பிட்டார்.

இதையொட்டி ஒரு கருதுகோளினையே கலாநிதி சி. மௌனகுரு அவர்களும் தமது கலாநிதி பட்ட ஆய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் வெளிப்படுத்துகின்றார். அவர் அதில் நாடகம் சார்ந்த சமயக் கரணங்கள், சமயக் கரணங்கள் சார்ந்த நாடகங்கள் என்று வகைப்படுத்தி இவற்றிலிருந்து மகிடிக்கூத்து, வசந்தன் கூத்து என்பனவும் இதிலிருந்து வடமோடி, தென்மோடிக் கூத்துக்கள் உருவாகியிருக்கலாம் என்பார்.

எனவே கூத்தின் மூலம் பற்றிய தத்துவப் பின்னணியானது எமது தேசிய இருப்புப் பற்றிய தெளிவையும், அரங்கு வளர்ச்சிபற்றிய அறிவையும், சமூகக் குழுக்கிடையேயான கலை, கலாசார, பண்பாட்டுக் கலப்புத் தன்மையுடனான பண்பாட்டு மயமாதல் பற்றிய அறிவையும் உணர்த்தக்கூடியது. எனவே இது பற்றிய ஆய்வு மிக முக்கிய தேவையாக இன்று எமக்குள்ளது.

கூத்தின் அரசியல் என்ன? என்ற வினாவுக்கு வருவோமாயின் இவ்விடயம் சம்பந்தமாக 'ஈழத்து நாடக வளர்ச்சியில் மட்டக்களப்புக் கூத்தின் ஸ்தானமும், அதன் மீள் கண்டுபிடிப்பும்' என்ற தலைப்பில் கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் தெளிவுப்படுத்தியிருந்தார். அது பற்றிய தெளிவுடன் கூத்தின் அரசியல் என்ன என்பது பற்றிய புரிதலை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இது கூத்து நிச்சயம் அரசியல் மயப்படுத்தப்பட்டதாகவே இருக்கவேண்டும் என்பதற்காக குறிப்பிடப்படவில்லை. கூத்தில் அரசியல் பரிமாணம் பற்றிய விளக்கத்துக்காகவே குறிப்பிடுகின்றேன்.

1950க்கு முன்பு கூத்தின் செயற்பாடானது மட்டக்களப்பின் நிலப் பிரபுத்துவ தன்மையினை கட்டிக்காக்கும் கருவியாகவே செயற்பட்டு வந்துள்ளது. 'மட்டக்களப்பு நாட்டுக் கூத்துக்களின் சமூகத்தளம்' எனும் தலைப்பில் கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் உரையாற்றும் போது "14ம், 15ம் நூற்றாண்டுகளில் மட்டக்களப்பில் நிலமானிய அமைப்பு ஓர் வடிவம் பெற்றது. இத்தகைய சமூக அமைப்பினை பிரதிபலிக்க அல்லது கட்டிக் காக்க ஒரு கலை வடிவம் தேவைப்பட்டது. இத்தேவைகளை நிறைவேற்ற மகிடிக் கூத்தினாலும், வசந்தன் கூத்தினாலும் முடியவில்லை. இக்காலகட்டத்தில் தான் வளர்ச்சியடைந்த கூத்துவடிவம் ஒன்று மட்டக்களப்புக்கு அறிமுகமாகிறது. முக்குவர், வெள்ளாளர், உயர் வகுப்பினரிடம் இருந்த வசந்தன் கூத்து ஆட்டமுறைகள், ராகங்கள் ஆகியன சேர்ந்து கூத்துடன் கலக்கின்றன. வசந்தன் கூத்தில் பயன்படும் மத்தளமும், சல்லரியும் சேர்ந்து கூத்தின் பிரதான வாத்தியங்களாயின. மட்டக்களப்புக்கென ஒரு கூத்து வடிவம் தோன்றுகிறது". இக் கூத்தானது தனது கதையமைப்பிலும், பாத்திரவளர்ப்பிலும், தாளம், பாடல், ஆடல் முறைகளிலும் இச்சமூக இறுக்கம் பேணப்பட்டதாக குறிப்பிடுகின்றார்.

ஆகவே இந்தக் காலப்பகுதியில் கூத்தின் அரசியலானது நிலப்பிரபுத்துவ அதிகாரத்தை பேணிப் பாதுகாத்தது. அரச இயந்திரங்களின் தொழில்பாடும் அக்காலப் பகுதியில் மேலோங்கியிருக்கும் உயர் வர்க்கத்தினரையும், அவர்களின் அதிகராத்தினையும் பேணிக்காத்தலாக இருந்தது. கூத்தும் இதே பணியினை இங்கு செய்துள்ளமையினைக் காண்கின்றோம்.

அடுத்தகாலப்பகுதியில் நிலப்பிரபுத்துவத்தின் அழிவையும் புதிதாக மத்திய தர வர்க்கம் ஒன்று தோற்றம் பெற்று முதலாளித்துவ மய மாதல் இடம் பெற்றுக் கொண்டிருந்த போது கூத்துக்கான சமூகப் பயன்பாடு இன்றி ஒரு மந்த நிலையினைக் காண்கின்றோம்.

இந்த நிலையில் கூத்துக்கு மீண்டும் ஒரு அரசியல் தேவைப்பாடு உருவாகின்றது. 1950ன் இறுதியில் தமிழ் தேசியவாதம் முனைப்புப் பெறுகின்றது. பேராசிரியர் சரச்சந்திர போன்றவர்கள் சிங்களவர்கென்றொரு கலை வடிவத்தை உருவாக்கிக்கொண்ட போது ஈழத் தமிழருக்கு எதுவும் இல்லையா? நாங்கள் எதை எங்களுடையதாக அடையாளப்படுத்துவது? எதனூடாக எம்மை நாம் ஒரு தேசிய இனம் என உறுதிப்படுத்துவது? என்ற தேடலில் கண்டுபிடிப்புக்குள்ளானவைதான் இந்தக் கூத்துக்கள் ஆகும். இக்கால கட்டத்தில் கூத்தின் அரசியல் தமிழர்களின் தேசியவாதத்தினை உறுதிப்படுத்து ஒரு கருவியாக செயற்பட்டது. 1970க்குப் பின்பு கூத்தினது அவ் அரசியல் தேவை நிறைவேற்றப்பட்டுவிட்டது. தமிழ் தேசியவாத இயக்கங்கள் தோற்றம் பெற்று தேசியவாத்தின் வீச்சு வேறோர் படிநிலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. இதன் பின் கூத்து நேரடி அரசியல் தன்மையில் இருந்து விலகி மறைமுக செயற்பாட்டுத் தன்மை மிக்க அரசியலில் ஈடுபடுவதைக் காண்கிறோம்.

1970க்குப் பின் உருப்பெற்ற தமிழ் தேசியவாத இயக்கங்களுக்கு சுய நிர்ணய உரிமைப் போராட்டத்தின் வர்க்கப் பாதையை இவை உணர்த்திக் காட்டின. சங்காரம், கந்தன் கருணை ஏகலைவன் என்பன தேசியவாதச் சிந்தனையின் மறைமுக வெளிப்பாடுகளே. ஆனால் தொடர்ந்து வந்த காலப்பகுதியில் வளர்ந்த தேசிய இயக்கங்களுக்கு இவை காட்டிய போராட்ட வழி முறையில் உடன்பாடு இல்லாததாலும், உடன் பட்டுக் கொண்டவையும் இவற்றை சரியான முறையில் கையாளத் தவறியமையாலும் கூத்தை உட்கொண்ட காத்திரமான படைப்புக்கள் வெளிவராமல் போய்விட்டது. இதன் கலைஞர்களும் வேறு புகலிடங்களைத் தேடிக் கொண்டனர். இடையிடையே கலாநிதி சி. மௌனகுரு அவர்களால் கூத்துப்பாணியைக்கொண்ட பாடசாலை நாடகங்கள், 30 நிமிட, 45நிமிட நேர அளவுக்குள் சமூக சீர்கேடுகள், பெண்ணியல் பற்றிப் பேசிய போதும், வெகுஜன ரீதியான நாட்டத்தினையும், ஈடுபாட்டினையும் கிட்டத்தட்ட 10 வருடமாக (1980-1990வரை) காண முடியாத மந்த நிலையே நிலவியது.

காத்தான்கூத்து வடபகுதியில் அரசியலில் தொழில் படுவதைப் பார்க்கின்றோம். ஆனால் ஏன் தமிழர் தேசிய கலைவடிவம் எனக் கூறப்பட்ட வடமோடி, தென்மோடி அந்தப் பயன்பாட்டைப் பெறவில்லை எனவும் சிந்திக்க வேண்டியுள்ளது.

வடமோடி, தென்மோடி கூத்து நுணுக்கங்களை அறிந்த ஒரு கலைஞன் வட பகுதியில் கிடைக்காமை இதற்கு காரணமாகலாம். மட்டக்களப்பில் இதனை அரசியலில் பயன்படுத்தக்கூடிய புறச்சூழல் சாத்தியமானதாக இருக்கவில்லை. இதனால் மட்டக்களப்புக் கூத்துக்கள் ஈழத்து நாடக வளர்ச்சியில் மந்த நிலையை எய்தின.

1991க்குப் பின் எந்தவித அரசியல் தேவையும் இல்லாதபோதும் மட்டக்களப்புக் கூத்துக்கள் பற்றிய விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது. இது கிழக்குப் பல்கலைக்கழக கலைப் பீட உதயத்தின் பின்னர் ஏற்பட்ட கல்வியியல் தேவையாகும். இத்தேவையின் வீச்சு புதிய பல பரிமாணங்களுக்கு கூத்ததை இட்டுச் செல்லக்கூடும். இதனுடைய முதற்படிநிலையாகவே இக்கருத்தரங்கினையும் பார்க்க வேண்டி உள்ளது. இக்கருத்தரங்கின் முடிவில் கலாநிதி சி. மௌனகுரு அவர்கள் கூத்

→ 15

www.tamilarangam.net




# மலையகத்தில் வீடமைப்பு: ஏமாற்றுத்தானோ?

கடந்த சில வாரங்களாக தங்கள் பத்திரிகையில் மலையகத்தில் புதிதாக இடம் பெற்றுவரும் வீட்மைப்புத் திட்டம் சம்பந்தமாக சில ஆக்கங்கள் இடம் பெற்றிருந்தன. அதன் மூலம் பல முக்கிய விடயங்களை அறியக் கிடைத்தது.

தற்போது இரத்தினபுரி மாவட்டத்தில் காவத்தை பிரதேசத்தில் பெல்மதுளை தோட்டத்தில் இந்த வீடமைப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கும் அறிகுறிகள் காணப்படுகின்றன. மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பெருந்தோட்ட வீடமைப்புத்துறை பிரதியமைச்சருமான பெ. சந்திரசேகரன் அவர்கள் இப்பகுதி மக்களைச் சந்திக்கிறார். ஒரு குடும்பத்துக்கு 7 பேர்ச்சஸ் காணியும், ரூ 15000/= வீடமைப்புக் கடனும், மேலும் இலவசமாக 20 அஸ்பெஸ்டஸ் தகடுகளும் தரப்படும் என்றும் விரைவிலேயே இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் அதற்கான ஒத்துழைப்பைக் கேட்டிருப்பதுடன் காலங்காலமாக லயத்து வாழ்க்கை முடிவுக்கு வரவேண்டுமெனவும் கூறியிருக்கிறார். மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் இருந்தார்கள். ஒரு பெரும் மாற்றம் ஏற்படப்போவதாக நினைத்துக்கொண்டார்கள். கீழ்க்காணும் சந்தேகங்கள் ஏற்படும் வரை. இந்தக் கேள்விகளை எழுப்புவதற்கான காரணம் எந்த ஒருவரையும் குறைகாணவோ விமர்சிக்கவோ அல்ல. சில விடயங்களில் தெளிவேற்படுத்திக்கொள்ளவே. இதனை சரிநிகர் மூலம் வெளியிட்டால் மலையக மக்கள் நலன்விரும்பிகள் அநேகருக்கு தகவல்கள் தெரிவிப்பதாக அமையும்.

- தொழிலாளர் குடும்பத்தில் எத்தனை அங்கத்தவர்கள் இருப்பினும் அவர்கள் திருமணம் முடித்தவர்கள், திருமணம் முடிக்காதவர்கள் என்று வேறு வேறாக இருப்பினும் அவர்கள் அனைவருக்கும் இந்த 7 பேர்ச் காணி போதுமா?
- ஒரு சாதாரண வீடு கட்டக் கூடிய செலவை இத்திட்டம் மூலம் கிடைக்கும் கடன் தொகை தாங்குமா?
- சேமலாப நிதியத்தை மீளப் பெற்றுவிட்ட ஒரு தொழிலாளியினுடையவும் அவரது பிள்ளையினுடையவும் நிலை என்ன? அவர்களும் இத்திட்டம் மூலம் பயன்பெறுவார்களா?
- அமைச்சர் அவர்கள் தொழிலாளருடன் உரையாடும் போது ஒரு தொழிலாளி கேட்டார்: ஐயா நாங்கள் எங்கள் வீட்டு ஓரங்களில் சிறிது இடத்தை வேலி போட்டு அடைத்து வீட்டுத் தோட்டம் போன்றவை



யும் மாட்டுக் கொட்டில்களும் அமைத்திருக்கிறோம். இவற்றை பறிமுதல் செய்வார்களா என்று.

அமைச்சர் சொன்னார். அது உங்களுக்கே கையளிக்கப்படும் என்று. ஆனால், நடைமுறையில் என்ன நடக்கிறதென்றால், பயிர்ச் செய்கையில் உள்ள தோட்டநிலத்தை மக்களுக்குத் தர விரும்பாத நிர்வாகம் வீட்டுத் தோட்டங்களையும் உள்ளடக்கி நிலங்களைப் பிரிக்குமாறு நெருக்குதல் கொடுத்திருக்கவேண்டும். நில அளவையாளர்கள் வீட்டுத்தோட்டங்களையெல்லாம் சேர்த்துத் தான் அளந்திருக்கிறார்கள். இதனை ஏற்க முடியுமா?

- மக்கள் நலனில் அக்கறை கொண்டு செய்யப்படும் எந்தத் திட்டத்தையும் மக்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறார்கள். வரவேற்கிறார்கள். அதே நேரம் மக்கள் என்ன நடக்கின்றது என்பதைத் தெளிவு படுத்திக் கொள்ளவும் விரும்புகிறார்கள். ஏனெனில், தோட்டத் தலைவர்களோ, கோப்புகள் (Files) உபகரணங்கள், வாகனங்கள் சகிதம் வந்திறங்கும் அதிகாரிகளோ மக்களின் கேள்விகளுக்கு பதில் தருவதே இல்லை. ஒரு மர்மமான பார்வையுடன் தங்கள் வேலைகளை செய்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் சந்தேகப்படுவது நியாயம் தானே?

***சக்தி***
***காவத்தை.***

# அடிமைப் புத்தியின் அவலட்சணம்!

பெப். 10ந் திகதி அன்று மலையக தமிழ் பாடசாலைகளுக்கான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை நடைபெற்றது. போட்டிக்கான பரீட்சார்த்திகள் 44, 000பேர் தலா 100/=படி பரீட்சைக்கட்டணமாக மட்டும் 44இலட்சம் ரூபாவை அரசாங்கத்திற்குச் செலுத்தியிருக்கிறார்கள். ஆனால் பரீட்சையை ஏற்பாடு செய்த பரீட்சைத் திணைக்கள அதிகாரிகள் தம் விருப்பம் போல 80 முதல் 100கிலோ மீட்டர் தூரத்தில் பரீட்சை நிலையங்களை அமைத்து பரீட்சார்த்திகளை அலைக்கழித்ததோடு தனியார் வாகனங்களுக்கு 100/= முதல் 300/= வரை செலுத்தி பயணம் செய்ய வைத்து பரீட்சார்த்திகளின் சுமையை பன் மடங்காக்கியிருக்கிறார்கள்.

தலவாக்கலை, அக்கரப்பத்தனை, ஹட்டன், கினிகத்தேனை, பொகவந்தலாவ, மஸ்கெலியா, சாமிமலை பகுதிகளில் இருந்து சுமார் 15,000க்கும் அதிகமான பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றிய போதும் கல்வித்திணைக்களம் ஹட்டன், தலவாக்கலை, பொகவந்தலாவ, அக்கரப்பத்தனை பகுதிகளில் இருந்து நுவரெலியா, இராகலை, கந்தப்பளை, லபுக்கலை என வெகுதூரத்தில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்களுக்கு பரீட்சார்த்திகள் செல்ல வேண்டியிருந்தது.

போக்குவரத்து சீரற்ற ஒரு மாவட்டத்தின் பின்தங்கிய மலையகப் பரீட்சார்த்திகளின் நலனையும், வசதிகளையும் கவனத்தில் கொள்ளாத கல்வித்திணைக்களமும் அவர்களது சமூக பொருளாதார மேம்பாட்டில் அக்கறைக் கொள்ளாத அரசாங்கமும் அம் மக்களை சுரண்டுவதற்கு எத்தகைய கொடிய ஊழியத்தாண்டவம் ஆடுவார்கள் என்பதற்கு இப்பரீட்சை ஒரு சாட்சியாக அமைந்துள்ளது.

மலையகத்தின் 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்களே யாராவது ஆசிரியர் பரீட்சைக்கு தோற்றும் பரீட்சார்த்திகள் நலன், வசதி பரீட்சை நிலையம், போக்குவரத்து பற்றி அக்கறைகாட்டவில்லை. செக்குமாடுகளாக எங்கள் மக்கள் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் வீற்றிருப்பதை பெருந்தொகையான மலையக இளைஞர்கள் உணர இப்பரீட்சை ஒரு சந்தர்ப்பமாக அமைந்துவிட்டது.

முன்பின் அறிமுகமில்லாத பரீட்சை நிலையங்களைத் தேடி இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்பே பயணமான பரீட்சார்த்திகள் சோதனை கெடுபிடிகள், இருப்பிடவசதியின்மை என கடுமையாக கஷ்டப்பட்டார்கள். ஆண்டவன் பரீட்சைத்திணைக்களத்தை ஆசீர்வதிக்கட்டும்!

மலையக தமிழ் பாடசாலை ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்காக மாணவர்களைத் தயார் செய்வதில் போட்டி போட்ட வியாபாரிகளும் ஆர்வலர்களும் எந்த நோக்குடன் முயன்றார்களோ அம்முயற்சி பரீட்சார்த்திகளுக்கு கைகொடுக்கவில்லை. 250/= க்கு வாங்கப்பட்ட பரீட்சை வழிகாட்டியில் இருந்து 10 கேள்விகள் கூட வரவில்லை என்பதுதான் வேடிக்கை.

ஏற்கெனவே துன்புற்றிருக்கும் மலையக இளைஞரிடம் 50/= முதல் 1500/= வரை வாங்கிக்கொண்டு பரீட்சைக்கான வகுப்புகள் நடாத்திய ஆசிரியர்கள், டியுசன்காரர்கள், 'நாசமாப் போக' என்று பரீட்சார்த்திகள் ஏசியது காதுகளில் விழுந்தது.

பரீட்சைக்கான வினாத்தாளில் வழமையாக இடம் பெறும் பத்தாம் பசலித்தனமான கேள்விகளுடன் மலையக மக்களை மாற்றாந்தாய் மனப்பாங்குடன் நோக்கும் போக்கையும் வெளிப்படுத்துவதாய் இருந்தன. சில கேள்விகள். உதாரணமாக:-

1. 1867 ஆம் ஆண்டு ரஷ்யா அமெரிக்காவுக்கு விற்ற இராச்சியம் எது?
2. தோட்டப்புற மக்களைப் பற்றி நாவல் எழுதியவர் யார்?

என்பன போன்ற கேள்விகள் நகைப்பிற்கிடமான இருந்தன. இன்றைய உலகின் எத்தனையோ ஆயிரம் ஆயிரம் புதிய விடயங்கள் நடக்கும் போது, மலையகத்தில் புதைந்து கிடக்கும் ஆயிரம் ஆயிரம் விடயங்கள் இருக்கும் போது, தேசிய அளவில் எத்தனையோ விடயங்கள் இருக்கும் போது....!

1867ம் ஆண்டின் காணி வியாபாரத்தையும் காதலுக்கு முடிதுறந்த மன்னனையும் கேட்பது அடிமைப்புத்தியின் அவலட்சணம்தான்.

அடுத்து மலையக மக்களைப்பற்றிய கேள்வி இதமானது. ஆனால், பயன்படுத்தப் பட்டுள்ள பதப்பிரயோகம் ''தோட்டப்புறம்'' இது எதைக்காட்டுகிறது?

மலையக மக்களை அடிமைகளாக தோட்டங்களுடன் பிணைக்கப்பட வேண்டியவர்களாக அடைடாளப்படுத்தும் இச்சொல், யாழ். சைவ, வேளாள ஆதிக்க மேலாண்மை மிக்க தமிழராலா அல்லது மலையகத்தின் ஆதிக்கவகுப்பாகவும் அடிவருடிகளாகவும் அரச துறையில் அல்லோலப்படும் அதிமேதாவிகளாலா பயன்படுத்தப்பட்டது?

நாங்கள் தோட்டப்புற மக்கள் தான். அதை எங்களது இலட்சனையாக்க முயல்பவர்களை என்ன செய்வது? இவர்களது எண்ணத்தில் இருப்பதெல்லாம் மலையக மக்களது வாழ்வு தோட்டங்களுடன் என்றென்றைக்குமுரிய அடிமைகள் என்பது தான் ''மலையக மக்கள் என்றோ, மலையகத் தமிழர் என்றோ, பயன்படுத்தியிருக்கலாம் அல்லவா?

இனிவரும் பரீட்சைகளிலாவது பரீட்சைத்திணைக்களம் தன் வினைதிறனை காட்ட முன்வரவேண்டும். பரீட்சார்த்திகளுக்கு அனுமதியில் தொடங்கும் கெடுபிடிகள் பரீட்சையின் முடிவுவரும் வரை தொடர்வது கேள்விக்குரியது.

***பி.பி.ஜே.***
***பொகவந்தலாவ***

## மலையகத்தில் நவீன விவசாயக் கூலிகளும் பண்ணை அடிமைகளும் — I

# கூலி விற்கிற கூலி உழைப்பு!

மலையகத் தோட்டங்களில் அடிமைக்கூலிகளாய் அல்லற்படும் மலையகத் தமிழின தொழிலாளர் வகுப்பில் இன்னொரு பிரிவாக விவசாயப்பண்ணை அடிமைகள் மாறி வருகின்றார்கள்.

மலையக மாவட்டங்களான நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் வளர்ச்சியுற்று வரும் மரக்கறிப் பண்ணைகளில் உரிமையாளர்களின் கீழ்குடும்பம் குடும்பமாக பல்லாயிரக்கணக்கான மலையகத் தமிழ் மக்கள் அடிமைப்பட்டுக் கிடக்கின்றார்கள்.

பல்வேறு காரணங்களால் தோட்டங்களை விட்டு வெளியேறிய தொழிலாளர்கள் புதிய பண்ணையடிமைகளாக இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பாகத்தில் தோற்றம் பெற்று வருகின்றனர்.

நுவரெலியாவின் பிளக்பூட், கெலகல்ல சந்திகள் ஆபிரிக்க அடிமைகளை விலை கூறி விற்ற அமெரிக்கச் சந்தைகள் போல மலையகத்தின் புதிய அடிமைகள் தம் உழைப்பை விலை கூறி விற்கும் மையங்களாக மாறியுள்ளன.

காலை 5.00 மணிமுதல் 10.00 மணிவரை. இச்சந்திகளில் குழுமும் ஆண்கள், பெண்கள் சிறுவர்கள், வயோதிபர்களின் எண்ணிக்கை ஆயிரக்கணக்கானது. தோட்டங்களில் வேலையற்ற நாட்கள் வார இறுதி நாட்கள், பாடசாலை விடுமுறை நாட்களில் இவ் எண்ணிக்கை உச்சக்கட்டத்தைத் தொடுகின்றது. வாகனங்களில் வருகின்ற விவசாயப் பண்ணைகளின் உரிமையாளர்கள் தமக்குத் தேவையான தொழிலாளர்கள் எண்ணிக்கை, அவர்கள் ஆண்களாக இருக்க வேண்டுமா பெண்களாக இருக்கவேண்டுமா? வயது எத்தனையாக இருக்க வேண்டும்? எத்தனை மணிவரை வேலை செய்ய வேண்டும், கூலி எவ்வளவு என்ற விபரங்கள் கூறி சத்தமிட்டு அழைக்கிறார்கள். தொழிலாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு நான் முந்தி, நீ முந்தி என ஓடுகிறார்கள். இப்படியான போட்டியில் ஜெயிப்பவர்கள் எட்டு மணிக்கு முன்பு எங்காவது வேலைக்குப் போகிறார்கள். எஞ்சியிருப்பவர்கள் பத்து மணிவரை காத்திருந்து விட்டு வீடு திரும்புகின்றார்கள்.

இத் தொழிலாளர்கள் தோட்டங்களைச் சார்ந்திருப்பவர்கள் பருவகால தொழிலாளர்கள் தவிர, முழுமையாக இக்கூலித் தொழிலை நம்பிவாழும் தொழிலாளர்கள் மிகவும் கொடிய வறுமையில் வாடுவது நெஞ்சை நெகிழவைப்பதாகும்.

இக் கூலித் தொழிலாளர்களின் வேலைத் தளம் அவர்கள் முன்பின் அறியாத ஒரு மூலையாக இருக்கின்றது. அவர்களது வேலைத்தளம், எஜமான், வேலை நேரம், வேலை, அதற்கான கூலி என்பன நாளும் பொழுதும் மாறிக்கொண்டே இருக்கின்றன. இவை எதுவும் நிரந்தரமானதல்ல.

இவர்களது வேலைத்தளத்தில் நிலத்தைப் பண்படுத்த 18 அங்குல முள்ளையும் நிலத்தில் சொருகி 8-10 மணித்தியாலம் கிளர வேண்டியிருக்கிறது. நாற்று மேடைகள் அமைக்கவும், வடிகால் அமைப்பு ஏற்படுத்தவும், பயிர் பராமரிக்கவும், களை பிடுங்கவும், பூச்சி கொல்லிகள், களை கொல்லிகளை விசிறவும், பாரம் சுமக்கவும், தண்ணீர் தெளிக்கவும், பசளை போடவும், நாள் முழுவதும் நிர்ப்பந்திக்கப்படுகின்றார்கள். காலை பத்து மணியளவில் தேயிலை சாயத்துடன் பாண் துண்டு வழங்கப்படுகின்றது. பகல் சோறு அல்லது பானும், பருப்பு, அல்லது கிழங்குக் கறியும் வழங்கப்படுகிறது. பிற்பகல் மூன்று மணியளவில் மீண்டும் சாயம் சீனி, பாண் இத்தோடு இயந்திரமயமான வேலையில் ஈடுபட வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

ஆண், பெண், சிறுவர், நோயாளர் யாராக இருப்பினும் வேலை சரியாக எஜமான் திருப்திப்படும் படியாக செய்யவில்லை என்றால், கூலியை குறைத்து விடுவது மட்டுமல்ல தாக்குவது, மீண்டும் வேலைக்கு அந்தப் பக்கம் வரவிடாது தடுப்பது போன்ற காடைத் தனங்கள் அரங்கேறுகின்றன. தேனீர் பருக பெரும்பாலும் தேங்காய்ச் சிரட்டை, வெற்றுப் பால் ..டின், பிளாஸ்டிக் கப் என்பன வழங்கப்படுகின்றன.

ஆண் தொழிலாளர்களை விட பெண் தொழிலாளர்களுக்கு குறைந்த சம்பளம் வழங்கப்படுகிறது. சிறுவர்களுக்கு அதனிலும் குறைந்த சம்பளம் வழங்கப்படுகின்றது. ஆனால் வேலை மட்டும் சமனாக வழங்கப்படுகின்றது.

தொழிலாளருக்கு நாளை என்றொரு பொழுது இருப்பது பற்றியோ நாளைய பொழுதில் உழைக்கவும், வாழவும் வேண்டிய கூலி, உழைப்பு சேமிக்கப்படவேண்டும் என்பது பற்றியோ யாரும் கவலைப்படுவதில்லை.

பெண் தொழிலாளர்கள் பண்ணையுடமையாளர்களின் பாலியல் இச்சைகளுக்கு சர்வசாதரணமாக ஆட்பட வேண்டியிருக்கிறது. இது தவிர ஆண் தொழிலாளர்களால் பெண் தொழிலாளர்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுவதுமுண்டு. தமது வறுமை காரணமாக முன்பின் அறிமுகம் இல்லாத இடங்களில் முன்பின் அறிமுகம் இல்லாத நபர்களிடம் தம்மை பறிகொடுக்கும் பெண்களின் ஓலங்கள் அந்த பனிக்குளிர்மிகு நீண்டு உயர்ந்த மலை முகடுகளில் எதிரொலித்துக் கொண்டே இருக்கின்றன.

தனியாக கூலித்தொழிலுக்குப் போகும் பெண்கள் மட்டுமல்லாமல் கணவன் மற்றும் தாய், சகோதர, சகோதரிகள் உடன் செல்லும் பெண்களும் கூட எதுவும் செய்யமுடியாத கையறு நிலையில் தம் விதியை நொந்து மண்டியிட வேண்டிய துர்ப்பாக்கியம் இருக்கிறது. கணவனோ, தாயோ, தந்தையோ, தனயனோ கூட எதிர்த்துப் பேச முடியாதவாறு அந்தச் சூழல் இருக்கிறது.

இவர்களில் பெரும்பாலானோர் தோட்டங்கள் மூடப்பட்டமை, வன்முறைகள், அபிவிருத்தி திட்டங்களின் பெயரால் வீதிக்கு விரட்டப்பட்டவர்கள் தமது குடும்ப உறவினர்கள், நண்பர்களின் வீடுகளிலும் தங்கியிருப்பவர்கள். இவர்களுக்காதரவாக யாரும் மனிதாபிமான குரல் எழுப்பபுவதில்லை. அவர்களால் செய்ய முடிந்ததெல்லாம் பணிந்து போக முடியுமான அளவுக்கு பணிந்து, விட்டுக் கொடுக்க கூடிய அனைத்தையும் விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போவது தான்.

இவர்கள் தமது ஆடைத் தேவைகளுக்கு நுவரெலியா நகரச் சந்தையில் மலியும் பழைய துணிகளையும், கோட்டுக்களையும், நம்பியிருக்கின்றார்கள். சாக்குகளில் உறங்கவும் சாக்குகளையே போர்வைகளாக பயன்படுத்தவும் கற்றுக்கொண்டு விட்டார்கள். பழுது பட்ட, வீசிஎறியப்படவேண்டிய கிழங்குகளையும், கரட்டையும், கோவாவையும் உணவாக உட்கொள்கிறார்கள். ***வரும்...***

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## மௌனசாட்சிகளா? முகமூடித் தலையாட்டிகளா?

சரிநகர் 47 வது இதழில் ''நாலுவார்த்தை எழுதவிடு'' என்ற பத்தியில் ஒரு அனாமதேயம் (அல்லது சூர்யா) அ. யேசுராசாவைப் பற்றித் தாக்கி எழுதியிருந்தது. சாதி ஒடுக்குமுறை, வர்க்கப் போராட்டம் இவை பற்றி மட்டும் படைக்கிற முற்போக்கு இலக்கியவாதிகளை வரட்டு வாதிகள் என யேசுராசா மட்டந் தட்டினார் என்றும் இவை வெறும் கைலாசபதி, சிவத்தம்பி முதலான இலக்கிய விமர்சகர்களைத் தாக்குவதற்கு வறட்டுவாதம், அழகியல் தெரியாதவர்கள், கோஷமிடுபவர்கள், பட்டியல் இடத் தெரிந்தவர்கள் போன்ற சொற்றொடர்களைப் பயன்படுத்தினார் என்றும் குறிப்பிட்டு, ''காலநிர்ப்பந்தத்துக்கியைய சாதி ஒடுக்குமுறை, வர்க்கப்போராட்டம் முதலானவை பாடுபொருளாக அமைகிற போது அது ஏன் வரட்டு இலக்கியமாக்கப்பட்டது?'' என்று யேசுராசாவிடம் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. இது எதுவும் புதிசு இல்லை. இந்தக் கேள்விகள் பதினைந்து வருடங்களுக்கு முன்னதாகவே மிகத் தெளிவாக முன்வைக்கப்பட்ட கேள்விகள். டானியல் அன்ரனியின் 'சமர்' யேசுராசாவின் முற்போக்கு இலக்கியத்துக்கு எதிரான இந்த நிலைப்பாட்டினை மிகக் கடுமையாகவே எதிர்த்துப்போரிட்டது. கைலாசபதி, டானியல் அன்ரனி, கே.டானியல், டொமினிக் ஜீவா, அ. சாந்தன், பெனடிக்ற் பாலன் ஆகியோரெல்லாம் யேசுராசாவின் இலக்கிய நிலைப்பாட்டை வெளிவெளியாகவே எதிர்த்துவந்தவர்களாவர்.

'அலை', 'சமர்' என்பன இத்தகைய இலக்கிய வாதத்தில் ஈடுபட்டிருந்தபோது 'புதுசு' இதழ் அப்போது என்ன செய்து கொண்டிருந்தது. புதுசு அ. ரவி, சேரன் போன்ற 'புதுசு' நடத்திய இலக்கியக்காரர்கள் என்ன செய்து கொண்டிருந்தனர்?.

''அப்போது நாமெல்லாம் அதற்கு மௌனசாட்சிகளாக இருந்தோம். முரண்பாடுகள் சில சமயங்களில் எதிர்ப்பட்ட போதும், யேசுராசா நேர்மையானவர் என்பதனால் - அதனைச் சகித்தோம், இப்போது எல்லாவற்றையும் கேள்விக் கேட்கும் நேரம் நெருங்கிவிட்டது. என்று பேருமில்லாமல் பத்தி எழுதுவர் சரிநிகரில் எழுதுகிறார்.

இலக்கியப் போலிகளுக்கு இப்படி மொட்டையாக எழுதிவிட்டுப் போவது பின்னால் 'நான் அவனில்லை' என்று வசதியாகச் சொல்லித் தப்பிக் கொள்ள வசதியாகப் போய்விடுகிறது. 'யானறியேன் பராபரமே' என்று சொல்லிக் கொண்டு போய்விடலாம்.

ஒரு பாவமுமே அறியாத கே.எஸ். சிவகுமாரனின் பத்தி எழுத்துக்களைப் பற்றி 'புதுசு' வில் பக்கம் பக்கமாக விமர்சித்துத்தள்ளி, அதற்கு சிவகுமாரன் பதில் எழுதி அனுப்பியபோது, அது மிக நீண்டு விட்டதென்று சுருக்கி எழுதித்தருமாறு அவரையே கேட்டு, அவரும் இக் கருத்துச் சுதந்திர நாயகர்களை மதித்து அதனைச் சுருக்கி எழுதி அனுப்ப, அதற்குப் பிறகும் அதனையும் பிரசுரம் செய்ய இடவசதியில்லை என்று எழுதியதோடமையாது, 'அவரது சலியா எழுத்துக்கு நன்றி' என்று புதுசுவில் அவர் திருப்பிச் சுருக்கி எழுதியமைக்கு பதில் வேறு எழுதிய போதே ஒரு சிற்றிதழின் அடிப்படைப் பண்பாடான மாற்று அபிப்பிராயத்தை மதிப்பது என்பதையெல்லாம் வெகு அலட்சியமாகத் தூக்கியெறிந்த அகம் பாவமும் திமிர்த்தனமுமே அதில் தெரிந்தது. சிவத்தம்பியை, டொமினிக் ஜீவாவை எவ்வளவு கடுமையாகத் தாக்கி எழுதினீர்கள். டானியல் அன்ரனியையும் கே. டானியலையும் இலக்கியம் எழுதத் தெரியாதவர்கள் என்று எப்படித் தூற்றித் திரிந்தீர்கள்?

இதே நபர்கள் தான் இப்போது வேறு பத்திரிகையில் உட்கார்ந்து கொண்டு தாங்கள் புனிதர்கள் என்று வேசமிட்டுத்திரிகிறார்கள். 'அப்போது நாமெல்லாம் அதற்கு மௌன சாட்சிகளாக இருந்தோம்' என்றும் வாய்க்குள் விரலை வைத்தாலும் சூப்பத் தெரியாத பாப்பாக்களாக இருந்தோம் என்றும் இப்போது பாசாங்குத்தனம் செய்கிறார்கள். உண்மைநிலை என்னவாயிருந்தது?

இந்த இலக்கிய நோஞ்சான்கள் யேசுராசாவின் நிலைப்பாட்டிற்கு மௌன சாட்சிகளாக இருந்தவர்கள் அல்லர். விசுவாசம் மிகுந்த பலமான முகமூடித் தலையாட்டிகளாகவே இருந்தனர். எல்லாவற்றையும் கேள்வி கேட்கும் நேரம் இந்தப் போலிகளுக்கு இப்போது தான் வந்திருக்கிறதாம். முற்போக்கு இலக்கியவாதிகளுக்கெதிராக யேசுராசாவோடு ஒத்தோடிய - யேசுராசாவின் அபிமானிகளாக அவரை இலக்கிய குருவாக வழிபட்டவர்களே புதுசு ரவி, சேரன் போன்றோர். இவர்களே தரும் வாக்கு மூலத்தின்படி முரண்பாடுகள் எதுவும் புதுசு ரவிக்கோ, சேரனுக்கோ யேசுராசாவுடன் இருந்திருக்கவில்லை. சாதி ஒடுக்குமுறை வர்க்கப் போராட்டம் சார்ந்த படைப்பிலக்கியங்களை நிராகரித்ததில் சேரனோ புதுசு ரவியோ யேசுராசாவுக்கு எந்த விதத்திலும் குறைந்தவர்கள் இல்லை. 'தமிழில் வாசிக்கத் தனக்கு எதுவுமே இல்லை' என்று சேரன் குறிப்பிட்டது ஈழத்து இலக்கிய உலகின் மிகப் பெரிய நகைச்சுவையாக அப்போதிருந்தது. யேசுராசாவுடன் இவர்களுக்குச் சில சமயங்களில் தான் முரண்பாடுகள் வந்திருக்கின்றன. அவ்வளவுதான்.

''வர்க்கப்போராட்டம் குறித்து எழுதியவர்கள் மார்க்ஸீயவாதிகள் என்பதனால்தான் யேசுராசா அவர்களைச் சுலபமாக நிராகரித்து விட்டதாக புதுசு ரவி, சேரன் போன்றோர் சரிநிகரில் நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள். இவர்கள் மார்க்ஸீய அரசியலை ஒரு போதும் ஏற்றவர்களில்லை. போதாததற்கு மார்க்ஸீயத்தில் இவர்களுடையு வாசிப்பும் அறிவும் அப்படி இப்படித்தான்.

யேசுராசா இளங்கவிஞர்களுக்கு சிபாரிசு செய்தவர்களில் சேரன், ஜெயபாலன், சிவசேகரம் முதலானோரின் கவிதைத் தொகுப்புக்கள் தவிர்க்கப்பட்டுவிட்டன என்றும் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாக நல்ல பல கவிதைகள் சேரன், ஜெயபாலனின் தொகுப்பில் உள்ளன என்றும் அழாத குறையாக வருத்தம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யேசுராசா சேரனை நிராகரித்தமைக்கு 'நாலு வார்த்தை எழுதவிடு' கோட்பாட்டின் அடிப்படையில் நியாயமான காரணங்கள் உள்ளன. ஜெயபாலனின் தனிப்பட்ட பலவீனங்கள் தனக்குத் தனிப்பட்ட முறையில் தெரியுமென்பதால் அவரின் கவிதைகளை இன்னொரு 'பரிமாணத்தில்' (பரிமாணம் படும்பாடு) பார்க்கமுடியும் என்று சிலருக்குத் தோன்றுவது போல் ஏன் யேசுராசாவுக்கும் தோன்றக் கூடாது?

சேரனையோ புதுசு ரவியையோ விட ஜெயபாலனுக்கு நிறைய இலக்கிய நண்பர்கள் உள்ளனர். அவருடைய நூலை வெளியிட ஆர்வம் கொண்டிருந்த இலக்கிய அபிமானிகள் பட்டியலுக்கு ஜெயபாலனின் சூரியனோடு பேசுதல் முன்னுரை நிறைய உதவும். ஜெயபாலனின் முஸ்லிம் மக்கள் பிரச்சினைகளைப்பற்றிய புத்தகத்தை யேசுராசா வெளியிட்டார். இப்போது அதற்கு என்னவாம்? ஏ.ஜே. கனகரட்ண ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஆகியோரின் நூல்களைக் கூடத்தான் யேசுராசா வெளியிட்டார். ஏனையோரைக்கிண்டல் பண்ணும் பண்பு ஜெயபாலனிடம் கிடையாது. (இது பற்றி சூர்யா எழுதுவது கேலிக்குரியது) வேண்டாத பெண்டாட்டி கைபட்டாலும் குற்றம் கால்பட்டாலும் குற்றம் தான்!

முகமூடித் தலைகளாய் இல்லாமல் முக்காட்டைக் கழற்றி முகத்தைக் காட்டினால் மொட்டைகள் பளிச்சிடும். பின்னாளிலும் இப்போதும் உங்களின் பலநிலைப்பாடுகளையும் போலி முகங்களையும் இனங்காண மற்றவர்களுக்கு உதவியாயிருக்கும். சூர்யாவும், அருணும், மாதவனும், ரவியும் எல்லாக் காலத்திலும் மக்களை ஏமாற்றித்திரிய அவ்வளவு உதவாது.

**அளவெட்டி சு. வல்லிபுரம்.**

## கூத்தின்...

தின் எதிர்காலத்தை நிர்ணயித்தல் சம்பந்தமாக பின்வரும் நான்கு கோரிக்கைகளை அமைச்சுக்கு அறிவிக்க இருப்பதாக அறிவித்தார்.

1. கூத்தினை விபுலாநந்தா இசை நடனக் கல்லூரிமாணவர்களுக்கு ஓர் உப பாடமாக்கல்.
2. மட்டக்களப்பின் பாரம்பரியக் கலைகளான பறை, மத்தளம், உடுக்கு கூத்துக்கள் என்பனவற்றை பயிற்றுவிப்பதற்கான பயிற்சி வகுப்புக்களை விபுலாநந்தா இசை நடனக் கல்லூரியில் ஆரம்பித்தல்.
3. 1996ம் ஆண்டில் கூத்தில் ஆர்வம் கொண்டஓர் சிறுதொகையினருக்கு 3 மாதத்துக்கு ஒரு தடவை கூத்துப்பயிற்சிபட்டறைகளை அவ் ஆண்டு முழுவதும் நடாத்துவதற்கான உதவிகளைச் செய்தல்.
4. கூத்துப் போட்டிகள் மாகாண மட்டத்திலன்றி அகில இலங்கை மட்டத்தில் நடாத்தப்பட வேண்டும்.

இக்கோரிக்கைகள் சரியான முறையில் நிறைவேற்றப்படும் பட்சத்தில் ஈழத்து நாடக வளர்ச்சியின் உயிர் நாடியாக கூத்து செயற்படலாம். அப்போது சிலவேளை அரசியல் கடமையை கூத்து தாங்கி நிற்கலாம். அதனை நடைமுறை அரசியல் தீர்மானிக்கும்.

அடுத்து எமது நவீன அரங்கு எது? என்ற வினா, எமது நவீன அரங்கு மட்டக்களப்பின் சமூக, பொருளாதார வளர்ச்சியினையும் சமூகத் தேவையினையும் கருத்தில் கொண்டு உலக அரங்கியல் வரலாற்று அனுபவத்தை மனங்கொண்டு இங்குள்ள பாரம்பரிய அரங்கின் வேர்களில் இருந்து முகிழ்ப்புப் பெற வேண்டும். இது நிச்சயம் யதார்த்தவாத அரங்காக இருக்க முடியாது என இயங்கியல்வாதிகள் கருதுகின்றனர்.

நவீன அரங்கு பற்றிய பார்வையில் கருத்து தெரிவித்த வெ. தவராசா தயாரிப்பாளர், நெறியாளர், நடிகர், பார்வையாளர், இணைந்து செயலாற்றும் மக்கள் அரங்கு என்ற கருத்தை முன்வைத்தார். பாலசுகுமார், குறியீட்டுப் பண்பு, யதார்த்தப் பண்பு என்பனவெல்லாம் இணைந்தே முழுமையான அரங்கு (Total Theatre) என்ற கருத்தை முன்வைத்தார்.

இயக்க மறுப்பில்வாதிகளிடம் நவீன அரங்கில் பாரம்பரிய அரங்குப் பயன்பாடு என்ற சொல்லே வரக்கூடாது. அது எமது கூத்தை (பாரம்பரிய அரங்கு) அழித்து விடும். நாம் கூத்தை மரபு மாற்றமின்றிப் பேணுவதுடன் எமக்குத்தேவையான நவீன அரங்கு மேற்கில் அரங்கு வளர்ந்த முறை போன்று அதாவது மனோரதியம், யதார்த்தம், யதார்த்த விரோதப் பண்பு என்ற பரிணாம முறையில் வளர வேண்டும். நாம் யதார்த்தவாத அரங்கை முழுமையாக பயன்படுத்தாமலே இருக்கின்றோம். இவ்வாறு இருக்கும் போது யதார்த்த எதிர்ப்பண்பு அரங்கை எமது சமூகத்தில் அறிமுகப்படுத்துவதென்பது ஒரு திணிப்பாக அமைந்து நாளோட்டத்தில் நின்று நிலைக்காது மறைந்துவிடும். அத்துடன் எமது பாரம்பரிய அரங்கையும் இது கொச்சைப்படுத்தி சீர்கெடுத்துவிடும் என்று வாதாடுகின்றனர்.

இந்த நகைப்புக்கிடமான வாதத்துக்கு பதிலளிக்கும் முகமாக கூத்தின் மீள் கண்டுபிடிப்பின் முக்கியமான ஒருவராகவும், கூத்தினை நவீன ரசனைக்கு உயர்த்தியவர்களில் முக்கியமானவராகவும், விளங்கும் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள், கலாநிதி சி. மௌனகுரு அவர்களுக்கு அனுப்பிய கடிதத்தின் சில பகுதிகளை இங்கு குறிப்பிடுதல் பொருத்தமானதாக இருக்கும். ''மட்டக்களப்புக் கூத்தை ஒரு கூத்து வடிவமாக பார்த்து அந்த வடிவத்தின் அரங்கியற் சாத்தியப்பாடுகளை அதிகரிப்பதாகும்.

இது ஒரு சுவாரயமான திருப்பமாகும். இது காலவரை நாம் மட்டக்களப்புக் கூத்துக்கள் பல பிரதேச பாரம்பரியக் கூத்துவடிவங்களை, மரபுவழிப் பேறாகவே கண்டு வந்துள்ளோம். அதாவது இந்தக் கூத்து வடிவத்தின் பிரதான அழிவும் அதன் பாரம்பரியத் தன்மையாகும். அந்தப் பாரம்பரியத்தை நினைவுகூருவதும் பேணுவதுமே எமது முக்கிய தொழிற் பாடாக இருந்து வந்துள்ளது. இப்பொழுதுதோ அரங்கியற் பரிணாமம் எனும் பொழுது அதனை அரங்கு ஆகவே பார்க்கின்றோம். அதாவது அதன் ஆற்றுகை முறைமைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றோம். அதாவது செய்து காட்டல் முறை காண்பியங்கள் அரங்க அமைப்பு ஆகியன இக்கண்ணோட்டத்தில் முக்கியமாகும்.

......கூத்தின் பரிணாமங்கள் அகலிக்கப்பட்டு, ஆழப்படுத்தப்படுகின்ற பொழுது கூத்தின் இன்றைய 'மரபுகள்' பல மாறும். இது சுவாரசியமான விவாதங்களுக்கு இடம் கொடுக்கும்.

பழைமையைப் பேணுவதுதான் பாரம்பரியமா? 'பழைமை' என இன்று நாம் சொல்வது எந்தக்காலத்துக்குரியது? அது எங்கே யாரால் தொடங்கப் பெற்றது என்ற கேள்விகள் எழும்.....

.......நாங்கள் ஆட்டத்தை நடிப்பாக்கினோம். அது இன்று மரபு ஆகிவிட்டது.

........மட்டக்களப்புக் கூத்து முறைமையின் அரங்கியற் பரிமாணங்களைப் பற்றி ஆராய வேண்டிய காலம் வந்துவிட்டது. இக்கூத்து முறைமையை ஒரு பாரம்பரியமாக மாத்திரம் வைத்திருக்காமல், அதனை எதிர்காலத்துக்கு இட்டுச் செல்ல வேண்டும். அதற்குரிய மாற்றங்களுக்குத் தயாராக வேண்டும். உண்மையில் அவற்றை செய்ய முனைய வேண்டும் எனும் கருத்து இப்பொழுது ஒலிக்கத் தொடங்கியுள்ளது. இது முக்கியம். 21ம் நூற்றாண்டுக்குச் செல்ல இன்னும் நான்கு வருடங்களே உள்ள நிலையில் இது ஒரு முக்கியமான மனோநிலை வளர்ச்சியாகும்.

தமிழைப் போலவே, கூத்தும் பழைமையானது. ஆனால் இவற்றின் சிறப்பு பழைமையில் மாத்திரமல்ல அதற்கு மேலாக இவற்றின் தொடர்ச்சியிலேயே உள்ளது.''

பாரம்பரியம் பேணல் எனும் கற்பனாவாதத்தில் இயக்க மறுப்பியல்வாதிகளுக்கு பேராசிரியரின் கடிதம் தக்க பதிலாக அமையும்.

முடிவாக இன்றைவரை ஆராயப்பட்ட விடயங்களை சுருக்கமாகக் கூறுவதானால் கூத்து நிகழ்த்தப்பட்ட பழைமை சமூக பொருளாதாரத் தேவையானது இல்லாத நிலையில் கூத்தினை பாரம்பரிய கலையாக அப்படியே பாதுகாக்க வேண்டும் என இனிமேலும் வன்மையான கருத்துக்கள் மேலோங்குமாயின் நாம் இன்வரும் காலங்களில் கூத்துக்கு நினைவுக் கூட்டங்களை நடாத்தி பேருரைகளை நிகழ்த்திவிட்டு கலைந்து செல்ல வேண்டிய நிலைதான் வரும். இதைவிடுத்து புதிய சமூக பொருளாதார தேவைக்கேற்ப கூத்தினை மாற்றி புதிய பல பரிமாணங்கள் கொடுக்கின்ற போது கூத்து வாழும்.

## யாழ்ப்பாணத் தமிழனா? கொக்கா?

தமிழ் மக்களின் பரந்த உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில் ஒரு மாற்றுப் பத்திரிகையினை உருவாக்க முனைந்த 'மோர்ஜ்' இன் நோக்கு சரிநிகர் பத்திரிகையின் 90 இதழ்களிலும் சிதறிச் சின்னாபின்னப்பட்டிருக்கும் அவலத்தை அதன் ஆசிரியர் குழுவைத் தவிர்ந்த அனைவரும் அறிவர்.

மாற்றுக் குறையா மாற்றுக்களையும், மாற்றங்களையும் ஒரேயொரு மாற்றுப் பத்திரிகையின் செந்நெறிகளையும் ஆதியந்தங்களையும் நாம் உலகு பரந்து அறிவோம்.

அப்படியோர் மிதப்பு யாரிடமும் இருக்குமாயின் நாம் எதுவும் சொல்வற்கில்லை. பேனைப் பேன் என்று சொல்ல யோசிக்க வேண்டிய காலத்தில் இருக்கிறோம் தோழர்களே!

இலங்கையில் பல்வேறு தமிழ் தேசியப்போக்குகள் உருப்பெற்றுத் தம்மை ஸ்திரப்படுத்த அவாவும் சூழ்நிலையில் தமிழில் மாற்றுப் பத்திரிகை (?)யாக வெளிவந்த சரிநிகர் தனது முழு இதழ்களிலும் ஆசிரியர் தலையங்கம், (முதலாவது ஆசிரியர் தலையங்கத்தைப் பாருங்கள், எவ்வளவு தூரம் யாழ் மேலாதிக்க இராணுவ மயப்படுத்தப்பட்ட மொழியை வேண்டுமென்றே பாவிக்கிறார்கள் என்பதை) கட்டுரைத் தலைப்புக்கள், செய்தி விவரணங்கள், கட்டுரைத் தொடர்கள், இலக்கியக் குறிப்புகள், சிறுகதைகள், கதைத் தொடர்கள், கவிதைகள் அனைத்தும் (சில அல்ப விலக்குகளுடன்) யாழ் மேலாதிக்க அதிகார மொழிக் கட்டமைப்பினையே அடித்தளமாகக் கொண்ட மைந்ததனை நாம் வருத்தத்தோடு அவதானித்து வந்திருக்கிறோம்.

அளவெட்டியான், செம்பாட்டான், மகாஜனன், யாழ்ப்பாணம் இன்று, கலைகளில் ஊறிச் சிவந்த யாழ்ப்பாணம், அம்பனைக்கு அப்பால், உயனைப் பனங்கூடலும் பினாக்கைக் குளமும்.....

''தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி முதல் அளவெட்டி அருணோதயா கல்லூரி வரை மாலை வகுப்புகளை நடாத்தியது. அளவெட்டியும் இராணுவ வசம் என்றான பிறகு (அடிக்கோடு எனது) இணுவில் சைவ மகாஜன வித்தியாலயத்தில் இயங்குகிறது. அளவெட்டியில் இருந்த மாணவர்கள் இப்போது உரும்பிராயிலும், வட்டுக்கோட்டையிலும் அகதியாக அலைகிறார்கள்... படிப்பு என்பது நித்தியபூசை; பரீட்சை என்பது யாகம் வேள்வி....''

- இது புனைபெயர்களும், கட்டுரைத் தலைப்புகள், பந்தி வரிகள் சிலவும். பத்திரிகையில் ஒரே 'அளவெட்டி மான்மியம்' தான்.

சிங்கள மொழிப் பரிச்சயமும், மொழி பெயர்ப்பு ஆற்றலும் மிகுந்த யாழ் தீபகற்பம் சாராத இளைஞர்கள் இப்பத்திரிகைக்கு ''போடு தடியாக'' பாவிக்கப்பட்டது மற்று மொரு சுவாரசியமான விஷயம். மலையக மக்கள் பற்றியும், முஸ்லிம் மக்கள் பற்றியும் பத்திரிகைகளில் பிரசுரமாக அனுமதிக்கப்பட்ட கட்டுரைகள் ZOO வில் சிம்பன்சி (நுஃமான் அல்ல) காட்டும் வேடிக்கைதான்.

குறுகிய யாழ்ப்பாண வாதம் புலம் பெயர் இலக்கிய எதிர்ப்பு அகதிகளைப் பரிகசிக்கும் ஆணவம், ஆதாரமற்ற தனிநபர் மீதான தாக்குதல்கள், பத்திரிகைக்கு அனுப்பப்பட்ட விமர்சனக் கட்டுரைகளை பிரசுரம் செய்யாது மாற்றுக்கருத்துக்களை அமுக்கி விட முனைந்த கையாலாகாத்தனம். (ஹோலண்ட் இலக்கியச் சந்திப்பில் இது ஆக்ரோஷமாக வெடித்தது வேறுகதை) இதழிற்கு இதழ் காணக்கூடிய பொதுவான அம்சங்களாகும்.

'பிரதம ஆசிரியர்' என்பதற்கான நடைமுறை அகராதி அர்த்தம் எப்படியாக இழிந்து போயிற்று என்பதை அறிவோர் அறிவர்.

ஐயன்மீர்!

தீவிர வாசகர்களிடமிருந்து ஆங்காங்கு பரவலாக எழுந்த, எழுந்து வரும் காத்திரமான விமர்சன வெளிப்பாடுகளை ஏற்றுக்கொள்ளவோ, அதற்கு முகம் கொடுக்கும் பக்குவம் அற்றோ தமது 'மெல்லத் தமிழினியில்' ஒரு விமர்சன மறுப்பு நாடகம் ஆறு காட்சிகளில் எழுதியதை இதழ் 16ல் கண்டோம்.

விமர்சனங்கள் மீண்டும் எழுகிறது. அது மறுக்கப்படும் என்பது ''வாசகர்களுக்கு (காதிலை பூச்சுத்தின) ஒரு கடிதம்'' தொகுத்துச் சொல்லப்பட்ட விதத்தில் தெரிகிறது:

சரிநிகர் முதல் வெளியீட்டில் அது நிரந்தரமாக எழுதப்பட்டிருக்கிறது.

''உரிமையை எவருக்காகவும் விட்டுக் கொடுக்கவும் தயாரில்லை'' என்று. தேவையானதும் ஆரோக்கியமானதும் ஆசிரியர் குழுவின் மாற்றம். விட்டுக் கொடுப்பார்களா!?

**சுகன்.**

**பரிஸ்.**

பி. கு. கனடா தாயகம், பார்த்தீபன் சுவடுகளுக்கும் பிரதி அனுப்பியுள்ளேன்.

### ஒரு குறிப்பு:

ஐரோப்பாவிலிருந்து சரிநிகர் வாசகர் ஒருவர் சரிநிகர் பிரசுரிக்க மறுத்த கடிதம் என்ற குறிப்புடன் அனுப்பிவைக்கப்பட்ட, தனக்குக் கிடைத்த கடிதத்தை சரிநிகருக்கு அனுப்பி வைத்திருக்கிறார், தனக்குக் கிடைத்த அக்கடிதம் அளவெட்டி சு வல்லிபுரம், என்பவரால் எழுதப்பட்டதாக தட்டச்சு செய்யப்பட்டிருந்த போதும், கையொப்பமோ, முகவரியோ குறிப்பிடப்படாததால் யாரால் அனுப்பிவைக்கப்பட்டது என்பது தெரியவில்லை என்றும் அவ் வாசகர் தெரிவித்திருக்கிறார். பின்னர் வேறுபல வாசகர்களும் இவ்வாறான அநாமதேயக் கடிதம் ஒன்று தங்களுக்கும் கிடைத்திருப்பதாக சரிநிகருக்குத் தெரியப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் சரிநிகருக்கு ஒரு பிரதியை இந்த அநாமதேயங்கள் இதுவரை ஏனோ அனுப்பிவைக்க வில்லை.

இவ்வாறான அநாமதேயக் கடிதங்களைச் சரிநிகர் பிரசுரிப்பது வழக்கமில்லையாயினும், சுகன் போன்றோர் குறிப்பிடும் சரிநிகர் பிரசுரிக்க மறுக்கும் மாற்றுக் கருத்து இதுவாக இருக்குமோ என்பதனால், அதனையும் பிரசுரிக்கிறது சரிநிகர்.

இவ்விரு கடிதங்களிலும், தனிநபர்கள் சம்பந்தப்பட்ட சில பகுதிகளை நாம் தவிர்த்திருக்கிறோம். (இதையும் இருட்டடிப்பு என்பார்களோ என்னவோ?)

''தேவையானதும் ஆரோக்கியமானதும் ஆசிரியர் குழுவில் மாற்றம் விட்டுக்கொடுப்பார்களா'' என்பதில் அவர் தெளிவு படுத்த வேண்டிய ஒன்று உண்டு. அதாவது ஆசிரியர் குழுவில் உள்ள நபர்களை மாற்றுவதா அல்லது சரிநிகரின் அரசியல் நிலைப்பாட்டை மாற்றுவதா அவசியம் என்று அவர் கருதுகிறார் என்பதாகும்.

ஆ-ர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA.

சரிநிகர் SARINIHAR

# சரிநிகர்

## தமிழ் மக்களின் மௌனமும், ஜனாதிபதியின் சீற்றமும்

சமீபத்தில் 'இந்தியன் பிஸ்னஸ் வீக்' சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்க 'தமிழ் மக்கள் தங்களது மௌனத்தைக் கலைத்துத் தெளிவான நிலைப்பாட்டை வெளிக்காட்ட வேண்டும்' எனவும், கொழும்பிலும் தென்னிலங்கையிலும் உள்ள ஒவ்வொரு தமிழரும் தங்களது மௌனத்தின் மூலமாக 'புலிகளின் பயங்கரவாதத்தை ஆதரிக்கிறார்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார். இப்பேட்டியானது இனவாதப் பிரச்சினைக்கான சமாதானத் தீர்வைப் பிரச்சாரப்படுத்தி பதவிக்கு வந்த ஜனாதிபதியின் நேர்மையான நிலைப்பாடு பற்றிய சந்தேகத்தைக் கிளப்பியுள்ளது.

முதலாவதாக தமிழர்களின் நிலைப்பாடு பற்றியது: 'பல்லினப் பாங்கான ஐக்கிய இலங்கையில் தமிழர்களின் அரசியல் உரிமைகள் அங்கீகரிக்கப்படுகின்றதும், இன, மத, மொழி, கலாசார சமத்துவத்தை உத்தரவாதப்படுத்தக் கூடியதுமான ஒரு அரசியல் கட்டமைப்பின் கீழ் தமிழ் மக்கள் கூடுதலாக வாழும் வட கிழக்குப் பிரதேசங்களை உள்ளடக்கிய பிரதேசத்தை ஒரு அதிகார அலகாகக் கொண்ட பிராந்திய சுயாட்சி முறையிலான ஒரு சமஷ்டி அமைப்பின் மூலமாக தமிழர்களின் இனத்துவ ரீதியிலான பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டும் என்ற நிலைப்பாட்டை தமிழர்கள் பல தசாப்தங்களுக்கு முன்பாகவே வெளிக்காட்டியுள்ளார்கள்.

இது தொடர்பாக அவர்கள் நடத்திய ஜனநாயகப் போராட்டங்கள் அரச இராணுவ அடக்குமுறைக்கு உட்படுத்தப்பட்டதன் விளைவாக ஆயுத ரீதியிலான போராட்டத்தின் தேவையை தமிழர்கள் உணர ஆரம்பித்தார்கள். ஐக்கிய இலங்கையின் கீழ் தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட மேற்கொண்ட முயற்சிகளின் தோல்வியின் காரணமாக தனித்தமிழ் நாட்டிற்கான கோரிக்கை உருவானது. இந்நிலைமையை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தவர்கள் முன்பு ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்த தற்போதைய ஜனாதிபதியின் பெற்றோர்கள் இருவருமாவர்.

ஜே.ஆர் ஜெயவர்த்தனா ஆட்சிப் பொறுப்பை ஏற்றதன் பின் இனவாத முரண்பாடு மிகத் தீவிரமாக இராணுவமயப்படுத்தப்பட்டதோடு தமிழர்கள் மத்தியில் ஜனநாயக அரசியலை இல்லாதொழிப்பதற்கும் வழிவகுக்கப்பட்டது. இதன் மூலம் இனவாத முரண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட யுத்த களம் உருவாக்கப்பட்டது. இத்தகைய கொடூரமான யுத்தத்தின் மத்தியில் இலங்கை – இந்திய உடன்படிக்கையின் மூலம் இப்பிரச்சினையை தீர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது, அவ்வுடன்படிக்கையின் பங்காளியான அரசின் நேர்மையீனம் காரணமாக போராட்டம் மீள ஆரம்பமானது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது சமாதானத்துக்கான வாக்குறுதியை ஏற்று வட – கிழக்கிலும் தென்னிலங்கையிலும் வாழும் தமிழர்களில் பெரும் பகுதியினர் சந்திரிகாவை ஆதரித்ததன் மூலம் தமது நிலைப்பாட்டை வெளிக்காட்டியுள்ளனர். அதே போல விடுதலைப் புலிகளுடன் அரசு பேச்சுவார்த்தை நடாத்திய போது அதற்கு ஆதரவாக மக்கள் தங்களது நிலைப்பாட்டை வெளிக்காட்டினர். நிலைமை இப்படியிருக்க தமிழர்கள் தங்களது நிலைப்பாட்டை தெளிவாக வெளிக்காட்ட வேண்டும் என்பது எதைக் குறிக்கின்றது என்பது தான் கேள்வி. ஒரு வேளை தமிழ் மக்கள் புலிகளுக்கு எதிராக அரசுக்கு ஆதரவாக தமது நிலைப்பாட்டை வெளிக்காட்ட வேண்டும் என்று விரும்புகின்றாரா என்று நினைக்கத் தோன்றுகிறது. புலிகளுக்கு எதிராக தமிழ் மக்கள் தங்களது நிலைப்பாட்டை வெளிக்காட்ட அரசு தமிழ் மக்களுக்கு வழங்குகின்ற உத்தரவாதம் தான் என்ன? தமிழ் மக்களின் நம்பிக்கையை பெறக்கூடிய வகையில் கூட முன்வைக்கப்படாத அரசின் தீர்விற்கான பிரேரணைகள் அடங்கிய சில காகிதப் பக்கங்களை நம்பி மக்கள் செயற்பட வேண்டும் என ஜனாதிபதி எதிர்ப்பார்க்கின்றாரா? தமிழ் மக்கள் அந்நிலையை அடைய வேண்டுமானால் சிங்கள பௌத்தமயப்படுத்தப்பட்ட அரசின் தன்மையை மாற்றி, தமிழினத்தையும், தமிழ் மொழியையும் ஏற்றுக்கொள்கின்ற பல்லினப்பாங்கான அரசை உத்தரவாதப்படுத்தி தமிழ் மக்களின் ஜனநாயக அபிலாஷைகளை பூர்த்தி செய்வதன் மூலமே இயலுமேயொழிய புலிகளைத் தாக்குகின்ற போர்வையில் முழுத்தமிழர்களுக்குமெதிரான கூட்டுப் பழிவாங்கலை (Collective Punnishment) நோக்கிய இராணுவ நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதன் மூலம் அடைய முடியாது என்பதை ஜனாதிபதி அவர்கள் புரிந்து கொள்ளல் வேண்டும்.

இனவாத முரண்பாட்டைத் தீர்ப்பதற்கு தமிழ் மக்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்துவது அவசியமென ஜனாதிபதி கருதினால் அதற்கேதுவான நம்பகமான சூழ்நிலையை உருவாக்குவதன் மூலம் அதனை அடைய முயற்சிக்க வேண்டும். ஆனால் இவ்வரசின் நடவடிக்கைகளானது தமிழ் மக்களை நாளுக்கு நாள் நம்பிக்கை இழக்கவே செய்கிறது என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

இரண்டாவதாக கொழும்பிலும் தெற்கிலும் உள்ள ஒவ்வொரு தமிழரும் தங்களது மௌனத்தின் மூலமாக புலிகளின் பயங்கரவாதத்தை ஆதரிக்கிறார்கள் என்ற கூற்று எல்லாத் தமிழர்களும் புலிகளே எனச் சந்தேகிக்கும் நிலையை தோற்றுவிக்கக் கூடியதாக அமைகிறது. தென்னிலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள் மௌனம் சாதிப்பது இதுவே முதல் தடவையல்ல. சிங்கள பௌத்த பேரினவாத அடக்குமுறைகள் அத்தனையையும் அவர்கள் மௌனமாக சகித்துக்கொண்டு தான் வந்திருக்கிறார்கள். அரச பயங்கரவாத கெடுபிடிகளுக்கு உட்பட்டாலும் மௌனமாகவே இருக்கின்றனர். 1977, 1981, 1983 எனத் தொடர்ந்து வந்த இனக்கலவரங்களினால் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாக்கப்பட்ட போதும் அவர்கள் மௌனிகளாகவே இருந்து வந்துள்ளனர். ஏனென்றால் மௌனம் ஒன்று தான் அவர்களை பாதுகாக்கக் கூடியதாக உள்ளது. இந்நிலைமைகளை உணராமல் இவர்கள் மௌனத்தின் மூலம் புலிகளின் பயங்கரவாதத்தை ஆதரிக்கிறார்கள் என்று கூறுவதானது முழுத் தமிழினத்தையும் மற்றவர்கள் சந்தேகிக்க வழிவகுக்கின்றது என்பதை ஜனாதிபதி அவர்கள் உணர்ந்து கொள்வாரா?

விடுதலைப்புலிகளின் ஜனநாயக மறுப்பின் போதும் அவர்கள் மௌனிகளாகவே இருந்து வந்துள்ளனர்.

புலிகளை உருவாக்கியதும் அவர்களின் தயவை நாடவேண்டிய நிலைக்கு தமிழர்களை இட்டுச் சென்றதும் இந்நாட்டின் அரசாங்கங்கள் கடைப்பிடித்து வந்த தமிழர் விரோத நடைமுறைகளே என்பதை ஜனாதிபதி மறந்து விட்டார் போலத் தோன்றுகிறது.

இறுதியாக ஒன்றை மட்டும் கூற வேண்டும்.

தமிழ் மக்கள் இவ்வரசுக்கு ஆதரவாக தமது நிலைப்பாட்டை வெளிக்காட்ட வேண்டும் என ஜனாதிபதி விரும்பினால் மேற்குறிப்பிட்டுள்ள தமிழ் மக்களின் ஜனநாயக அபிலாஷைகளை அங்கீகரிக்கக்கூடிய ஒரு அரசியல் தீர்வை தமிழ் மக்கள் நம்பக்கூடிய வகையில் உத்தரவாதப்படுத்த வேண்டும். தமிழ் மக்களுக்கு அந்த நம்பிக்கை ஏற்படுகின்ற போது நிச்சயமாக அவர்களின் நிலைப்பாடுகளை அவர்கள் தெளிவாக வெளிக்காட்டுவார்கள்.

இதை விடுத்து ஒரு கையில் சமாதானத் தீர்வையும் மறு கையில் துப்பாக்கியையும் ஏந்திக் கொண்டு செயற்படுவதன் விளைவாக பெறக்கூடியது தமிழர்களின் ஆதரவை அல்ல மாறாக பேரழிவை மட்டுமே!

## கிழக்கில் ராணுவம்:கட்டவிழ்த்த காளைகள்!

அண்மைக்காலமாக கிழக்கின் பல இடங்களில் எல்லைமீறித் தொடரும் பொலிசாரினதும் இராணுவத்தினரினதும் கோரத்தனமான கொலைவெறியாட்டம், உடைமகளை கொள்ளையடித்து, சூறையாடும் சம்பவங்கள், பெண்கள் மீதான காட்டுமிராண்டித்தனமான பாலியல் வெறியாட்டம், குழந்தைகள் சிறுவர்கள் மீதான இரக்கமற்ற தாக்குதல்கள் என்பன கிழக்கின் அரச படைகள் முகாமிட்டிருக்கும் ஏதாவதொரு இடத்தில் தினமும் நிகழ்ந்தவண்ணமேயுள்ளது.

வாழைச்சேனைக்கு அருகேயுள்ள 600க்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழும் கிண்ணையடி கிராமம் முற்றாக அழிக்கப்பட்டுள்ள நிலையிலுள்ளது. இங்குள்ள இராணுவமுகாம் புலிகளால் இரண்டு தடவை தாக்கப்பட்டது. அதற்கு பழிவாங்கும் நோக்குடன் இங்குள்ள 150க்கு மேற்பட்ட வீடுகள் இராணுவத்தினரால் தீயிட்டு கொளுத்தப்பட்டன.

ஏனைய வீடுகள் அடித்து நொருக்கப்பட்டுள்ளன. இங்குள்ள பள்ளிக்கூடம் கோயில் என்பனவும் இராணுவத்தினரால் சேதமாக்கப்பட்டுள்ளன. வீடுகளிலுள்ள பொருட்களை பொதுமக்கள் எடுக்க முடியாதபடிக்கு வீடுகளை நோக்கி ஷெல் தாக்குதல் நடத்தி விட்டே இராணுவத்தினர் வீடுகளை எரித்தனர்.

இத்தாக்குதல்களில் ஒன்பது பொதுமக்கள் ஷெல் வீச்சால் காயமுற்றனர். இன்னும் பலர் இராணுவத்தினரால் கடுமையாக தாக்கப்பட்டனர். உடைமைகளை இழந்த பொதுமக்கள் வாழைச்சேனை பொலிஸில் முறையிடச் சென்ற போதும் அங்குள்ள பொலிசாரால் விரட்டியடிக்கப்பட்டுள்ளார்கள்.

மார்ச் 4ம் திகதி மாலை வாழைச்சேனை விபுலானந்தா வீதியில் ஒரு பொலிஸ்காரர் சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அங்கு வந்த பொலிசாரால் விபுலானந்த வீதியிலுள்ள பல வீடுகள் சூறையாடப்பட்டு அவ் வீதியால் சென்ற பொதுமக்கள் பலரும் தாக்கப்பட்டார்கள். வீடுகளிலுள்ள பல பொருட்கள் அடித்து நொருக்கப்பட்டன. சில பொருட்கள் காணாமல் போயுள்ளது. அன்று இரவும் அவ்விடத்திற்கு வந்த பொலிசார் வீதியில் சென்ற பலரை தாக்கியுள்ளார்கள்.

மார்ச் 7ம்திகதி வியாழன் மைலங்கரைச்சி கிராமம் பொலிசாராலும் இராணுவத்தினராலும் கடும் தாக்குதலுக்குள்ளானது. ஓட்டமாவடியைச் சேர்ந்த ஒருவருக்கு சொந்தமான டிரக்டர் ஒன்று இங்கு வைத்து கடத்தப்பட்டதன் எதிரொலியாக குடிபோதையில் சென்ற பொலிசாரும் இராணுவத்தினருமாக இணைந்தே அப்பாவிகளான இக்கிராமவாசிகள் மீது தாக்குதலை மேற்கொண்டதாக தெரியவருகிறது.

ஓட்டமாவடி நாவலடிச் சந்தி செக் பொயின்றில் கடமையாற்றும் பொலிசாரே இதில் கூடுதலாக ஈடுபட்டதாக தெரியவருகிறது. பொல்லுகளுடன் சென்ற இவர்கள் வீடுகளுக்குள் இருந்த பொதுமக்களை வெளியே இழுத்து குழந்தைகளை சிறுவர் வயோதிபர், ஆண், பெண் என்ற பேதமின்றி எல்லோர் மீதும் பொல்லுகளாலும் துப்பாக்கிகளாலும் தாக்கியதாகவும் சில பெண்கள் இவர்களின் பாலியல் வெறியாட்டத்திற்கு ஆளானதாகவும் தெரியவருகிறது.

இத்தாக்குதலால் காயமடைந்த இருபது பேரளவில் வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுள்ளார்கள். இரண்டு பெண்கள் கடும் காயங்களுக்குள்ளாகி இவ் வைத்தியசாலையில் சிகிச்சைப் பெறுகிறார்கள்.

வாழைச்சேனை இராணுவமுகாமைச் சுற்றியுள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்கள் மாலை ஐந்து மணியுடன் வீட்டைவிட்டு வெளியேறி காலை ஏழுமணிக்கு தான் திரும்புமாறு இராணுவத்தால் பணிக்கப்பட்டுள்ளார்கள். காலையில் வீட்டுக்கு சென்று பார்த்தால் வீடுகள் உடைப்பட்டு சில பொருட்கள் காணாமல் போய்விடுவதாக இங்குள்ளோர் கவலையுடன் கூறிக்கொள்கிறார்கள்.

வாழைச்சேனை - நாசிவன் தீவு படகுச் சேவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. இதனால் நாசிவன் தீவிலுள்ள மக்கள் வாழைச்சேனைக்கு பொருட்களை வாங்க வரமுடியாமல் மிகவும் திண்டாடவேண்டிய நிலையிலுள்ளனர். இதைவிட நாசிவன் தீவு பகுதி நோக்கி அடிக்கடி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இத்தாக்குதல்களால் அங்குள்ளோர் என்ன ஆனார்கள் என்பதைக்கூட அறியமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சித்தாண்டி, கிராண், செங்கலடி, களுவன் கேணி, வாழைச்சேனை, ஏறாவூர் பகுதிகள் அடிக்கடி இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்படுகின்றன. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுவோர் எந்த முகாமில் வைத்திருக்கப் படுகிறார்கள் என்பதைக் கூட எல்லா முகாம்களுக்கும் ஓடித்திரிந்து நாலைந்து நாட்களுக்கு பின்னரே அறியக் கூடியதாகவுள்ளது.

மட்டக்களப்பு பொதுவைத்தியசாலையில் சாதாரண மருந்துப் பொருட்கள் தொடக்கம் சத்திரசிகிச்சைக்கு தேவையான உபகரணங்கள் மருந்துகள் வரை கடும் தட்டுப்பாடு நிலவுவதாக தெரியவருகிறது.

இதைவிட மட்டக்களப்பு வைத்தியசாலையிலிருந்து ஆபத்தான நிலையிலுள்ள ஒரு நோயாளியை அம்புலன்ஸ் வண்டியில் கொழும்பு கொண்டு செல்வதெனில் மட்டக்களப்பு மாவட்ட பிரிகேடியரிடம் அனுமதி பெறவேண்டியுள்ளது. ருபேந்திரன்

## இது தான் ஐயா (சு)தந்திரம்!

ஜனநாயகத்தையும் கருத்துச் சுதந்திரத்தையும் பலி கொடுத்து நின்ற மக்கள் மத்தியில்; ''ஐயோ! ஜனநாயகம் செத்துவிட்டது. கருத்துச் சுதந்திரத்தின் கழுத்தை யு.என்.பி. நெரித்து விட்டது. இவைகளை உயிர்ப்பிப்பதற்காக எமக்கு வாக்களியுங்கள்'' என பதவிக்கு வந்த சந்திரிகாவின் அரசு; இப்போது இவைகளை மறந்து அதிகாரத்தின் இரும்புக் கரங்களைக்கொண்டு அனைத்தையும் நசுக்கி வருகிறது.

ஏலவே; அனைத்து வழிகளிலும் தமிழர்களையும், முஸ்லிம்களையும் அடக்கிவரும் அரசு, அதனுடைய இரும்புக் கரங்களை சிங்கள மக்கள் மத்தியிலும் இப்போது பிரயோகிக்கத் தொடங்கிவிட்டது. அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்வதற்காக; அதனை எதிர்க்கும் சக்திகளை அழிப்பதற்கு வெறிபிடித்த அரச இயந்திரத்திற்கு இனம், மதம், மொழி அப்பாற்பட்டதொன்று.

சமாதானத்தைக் கொண்டு வர, அதன் வழியில் உழைப்பதற்கென உருவாக்கப்பட்ட, வெண்தாமரை இயக்கம், சமாதானம் என்ற போலி மாயை, கானல் நீரானவுடன், இப்போது அவ் இயக்கம் அடக்கு முறையை கட்டவிழ்த்து விடும் ஒரு கும்பலாக மாறி விட்டது என்பது இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள ''பனாப்பொல'' கிராமத்தின் சிங்கள வித்தியாலய சம்பவத்தில் நிரூபிக்கப்பட்ட உண்மையாகி விட்டது.

கலவான தொகுதியிலுள்ள ''பனாப்பொல'' சிங்கள வித்தியாலய விளையாட்டுப் போட்டி நடந்துகொண்டிருக்கிறது. விநோத உடைப்போட்டி நிகழ்ச்சி அறிவிக்கப்பட்டவுடன் அப் பாடசாலை மாணவி ஒரு பெண் பிரதியமைச்சர் போன்று உடையணிந்து கையில் ஒரு வெண்தாமரையுடன் மைதானத்தினுள் வலம் வருகிறாள். பார்வையாளர்களின் பலத்த கரகோஷத்தின் மத்தியில் பாடசாலை மாணவியை அறிவிப்பாளர் பேட்டி காண்கிறார்.

அறிவிப்பாளர்:- முதலில் உங்களை அறிமுகப்படுத்துங்கள்.

மாணவி:- நான், பொது முன்னணி அரசின் பிரதி அமைச்சர்.

அறிவிப்பாளர்:- தாங்கள் பல தேர்தல் வாக்குறுதிகளை அளித்தல்லவா பதவிக்கு வந்தீர்கள்?

அறிவிப்பாளர்:- அவ் வாக்குறுதிகள் என்ன?

மாணவி:- மின்சாரம் தருவேன், தொழில் வாய்ப்புத் தருவேன். பனாப்பொலைக்கு ரயில் சேவையை தருவேன். இரட்டைத் தட்டு பஸ் தருவேன்.

அறிவிப்பாளர்:- நீங்கள் ஆட்சிக்கு வந்து குறிப்பிட்ட காலம் சென்று விட்டது, கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றி இருக்கிறீர்களா?

மாணவி:- (பாவத்துடனும், நடுக்கத்துடனும்) நான் அவ்வாக்குறுதிகளை மறந்து விட்டடேன்.

விநோத உடைப்போட்டியில் மாணவிக்கு முதல் பரிசு கிடைத்தது.

விளையாட்டுப் போட்டி முடிந்து பனாப்பொலகிராமம் அன்றிரவு உறங்கிக் கொண்டிருந்தது. வானில் அக்கிராமத்திற்குள் வந்த ஆயுதம் தரித்த குழுவொன்று அதிபரின் வீட்டுக் கதவைத் தட்டியது. அதிபரின் மனைவி வந்தவர்களை யாரென விசாரித்தார். ''நாங்கள் இரகசியப் பொலிசார் உங்கள் வீட்டை சோதனையிட வந்திருக்கிறோம். கதவைத் திற'' என்றனர். மனைவி கதவைத் திறந்தார். அதிபரும் அதிபரின் மகனும் கண்மூடித்தனமாகத் தாக்கப்பட்டார்கள். இருவரையும் கொல்லப் போவதாக மிரட்டினர். வந்தவர்களின் காலைப் பிடித்து மனைவி கெஞ்சினார். மனைவிக்கும் பலத்த அடி விழுந்தது. வீட்டிலுள்ள அனைத்துப் பொருட்களும் தீயிட்டு எரிக்கப்பட்டது. அதிபர் ஆபத்தான நிலையில் இப்போது கொழும்பு ஆஸ்பத்திரியில் அவசர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

''பனாப்பொல'' கிராம மக்கள் கடந்த அரச காலத்தில் நிலவிய பீதிநிறைந்த இரவுகள் வந்து விட்டதாக நினைக்கின்றனர். கடந்த காலத்தில் அரச பயங்கரவாதத்தால் தங்கள் சொந்தங்களை இழந்த இக் கிராம மக்கள் அதிபருக்கு நடந்த நிகழ்ச்சியின் பின் மரணம் வரும் இரவுகள் இனி வந்துவிட்டதாக பீதிக்குள்ளாகி இருக்கின்றனர். இச்சம்பவம் ''பனாப்பொல'' கிராமத்தையே உறைய வைத்துவிட்டது.

'ஊருக்குத்தான் உபதேசம், உனக்கில்லடி கண்ணே!'' என்பது எவ்வளவு உண்மையாகிவிட்டது. பாடியவனின் வாயில் போடுங்கள் ஒரு துண்டு இனிப்பை. **அம்ரிதா.**

## பாதாளம் தாண்டியும்

## பாயும் பணம்!

அம்பாறை மாவட்டத்தில் நெல் அறுவடை முடிந்த கையோடு, சகுனம் பார்த்து இன்னுமொரு அறுவடையும் தொடங்கியுள்ளது;

பண அறுவடை!

இதில் அரசியல்வாதிகளும், இடைத்தரகர்களும் கோதாவில் குதித்துள்ளனர்.

கையில் காசோடு தனக்கென்று ஒரு உத்தியோகத்தை வாங்கிக் கொள்ளவென்று அடிபிடிபடும் இளைஞர் யுவதிகளிடையே; வங்கியில் கிளார்க் உத்தியோகத்திற்கு 75 ஆயிரம், ஆசிரியர் வேலைக்கு 50ஆயிரம் சமுர்த்தி நியமனத்திற்கு (கட்சியின் இராப்பகல் தொண்டன் அல்லாதவிடத்து) 20 ஆயிரம் என ஒவ்வொரு உத்தியோகத்திற்கும் அதற்கேற்ற 'ரேட்' என அரசாங்க உத்தியோகங்களுக்கு நல்ல விலை கிடைக்கிறது. (இந் நியமனங்களின் போது தகுதி? தகுதி - அது கிடக்கிறது கழுதை)

கடந்த பெப். 24ம்திகதி நடந்தேறிய தமிழ் மொழி ஆசிரியர் போட்டிப் பரீட்சைவிடயத்திலும் பணம் பாதாளம் வரைக்கும் பாய்ந்து வேலை செய்திருப்பதாகவும் பரவலான கதை.

தொண்டர் ஆசிரியர் என்ற பெயரில் நாலைந்து வருடங்களாக பள்ளிக்கூடங்களுக்கு அலைந்தவர்களுக்கும் (ஏற்கெனவே, காசுகொடுக்கவேண்டியவர்களுக்கு கொடுத்து நியமனம் வாங்கிக் கொண்டவர்கள் நீங்கலாக), போட்டிப் பரீட்சை அது இதுவென்று திறமையை நம்பி காலத்தை வீணாக்கியவர்களுக்கும் ஒரு யோசனை; பேசாமல் உண்டியல் போட ஆரம்பியுங்கள்.

சமுதாயத்தின் விடிவிற்காய் உழைக்கப் போவதாய்ச் சொல்லி வாக்குக் கேட்டுப் பெற்று பதவிக்கு வந்தவர்கள் இப்படியாய் உழைக்கிறார்கள்.

சமுதாயத்திற்காக இதையாவது செய்கிறார்களே என்று திருப்தியிப்பட்டுக் கொள்ள வேண்டியதுதான் தலைவிதியோ?

— ராசாத்தி —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்